ஓம் பரப்பிரம்மணே நம:

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆனந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

" எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
COPY RIGHT] திண்ணிய ராகப் பெறின். " (திருக்குறள்.) [REGISTERED

கமலம்-3.	சென்னை: விபவஹு மார்கழிமீ 1உ	இதழ்-33.
Vol. 3.	1928-ம்ஹு டிசம்பர்மீ 15உ	No. 33.

ஆனந்த தரிசனம்

" மூர்த்திதலந் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே " என்றார் தாயுமானவர். இதுவே ஆகமங்களுக்கும் கருத்தாம். ஆகமங்களிலே மூர்த்தி தரிசனமும், ஸ்தலவாசமும், தீர்த்த ஸ்நானமும் முத்திசாதனங்களென்று விதிக்கப்பட்டன. அவற்றுள்ளும் தீர்த்த ஸ்நானத்தையே மிக விசேஷப்படுத்திச் சொல்லப்படுகின்றது. ஆன்மாக்களுடைய மலபந்தமொழிந்து முத்தி சித்திக்குமாறு ஆலயங்களிலே செய்யப்படும் தீக்ஷையாகிய பூஜையில் மகோத்ஸவமுமொன்று. 'உத்ஸவம்' என்றால் 'மகா யாகம்' என்று அர்த்தமாம். (உத்=மகா. ஸவம்=யாகம்.) உத்ஸவ முடிவிலே அனுக்கிரக கிருத்தியமாயுள்ளது தீர்த்தோத்ஸவமாம். புண்யகாலமாகிய இந்த மார்கழி மாதம் மூர்த்தி-தலந்- தீர்த்தம் முறையாய்த் தொடங்குதற்கு மிகவும் எற்றதாம். மார்கழிமாத முற்றும் தேவாலயங்களில் விசேஷ பூஜைகளும் உத்ஸவாதிகளும் நடந்தேறும். நாமும் இம்மாதத்தில் புண்யஸ்தலங்களுக்குச் சென்று பகவானைச் சேவித்து உய்யக் கடவோம். அவ்வழியினில் நமக்கு ஸத்குருவும் ஒருகால் தென்படுவார். பெரியோர்களின் தரிசன பாக்கியமும் நமக்கு லபிக்கும்.

* * *

" அடியாரும் ஆலயமும். " பண்டையோர் ஒவ்வொரு பொருளின் திறங்களையும் ஆராய்ந்து அப்பொருள்களுக்குப் பெயரிட்டிருக்கின்றார்கள். அம்முறையால் கோவிலுக்கும் ' ஆலயம் ' என்று பெயர் வழங்கினர். ' ஆ ' என்றால் பசுக்களுக்குப் பெயர். ' லயம் ' என்றால் அவைகள் சென்று தங்குமிடம்.

கிழிந்த இடத்தை மேலே வைத்து உடுத்தினால் வயிறு உப்புகையில் இன்னும் அது கிழியும்; காலின் பக்கம் கட்டினால் அதைவிட அதிகம் கிழியும். இவ்விதமே கெட்டகுடியே இன்னும் தொடர்ந்து கெடுகத் துன்புறுகிறது.

பசுக்கள் எந்த இடத்தில் தங்கி வெளிப்படுகின்றனவோ, பசுக்கள் முதல்முதல் எங்குத் தங்கினவோ, எங்குத் தங்கினால் அவைகளின் இளைப்பு களைப்பு ஒழியுமோ அந்த இடத்துக்கு 'ஆலயம்' என்று பெயர். பசுக்கள் நிர்ப்பந்தமின்றிச் சுகரூபமாக லயிப்பது ஆலயமாம். 'ஆ' என்றது பசுவென்னும் மற்றொரு ஜீவனையாம். 'லயம்' என்றது அது லயிக்கும் இடமான கடவுளைக் குறிப்பதாம். அநாதிநித்தனான கடவுளிடத்திலேதான் ஆன்மாக்கள் சென்றொடுங்குகின்றன. கடவுளினின்றுமே வெளிப்படுகின்றன. ஆகவே, ஆலயமென்பது கடவுளென்று பொருளாகின்றது. அது அக்கடவுளை விளக்குகின்ற இடத்துக்குப் பெயராகி நிற்கின்றது. ஆலயம் செல்லுதலென்றால் கடவுளின் ஸமுகத்திற்குச் செல்லுதலென்ற பொருளாகின்றது.

* * *

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற பெரியோர் உரைக்கிணங்க, ஆலயமாகிய கடவுளின் ஸமுகத்திற்கு ஒருவன் செல்லுதல், தான் கடவுளின் கட்டளைக்கு மீறி நடந்துகொண்ட குற்றங்களைக் கூறி மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவும், பகவானிடத்து அன்புருகி நிற்கவுமேயாம். குற்றஞ் செய்யாத ஆன்மாக்கள் இாரென்பதனை உணராதாரெவர்? ஒவ்வோர் ஆன்மாக்களும் குற்றமுள்ள நெஞ்சினராகவே விளங்குவார்கள். பசுவினுடல் முழுமையும் பால் வியாபித்திருத்தல் உண்மையேயானாலும், கொம்பிலும், குளம்பிலும், மடியில்லாத பிற இடங்களிலும் கறந்தால் வாரதவாறே, கடவுளெங்கும் நிறைந்தவராயினும் பால் வெளிப்படுதற்கு மடியிருப்பதுபோல கடவுளைச் சுட்டி நினைத்தற்கு ஆலயம் இடமாதலின் அங்குச் சென்று வணங்குதலே முறையாகும். இனி ஆலயத்துக்கு எவ்வாறு போதல் வேண்டுமென்பதைச் சிந்திப்போம். தங்கள் தங்கள் தேகபாதை யாதியவற்றை நீக்கி, உடலினை உசிதம் போலத் தூய்மை செய்து, தன் மனதுக்கு அருவருப்பைத் தாராததும் பிறருக்கு வெறுப்பைத் தாராததுமான தன்மையில் ஆடை யுடுத்தி, தங்களின் மத நியமத்துக்கு மாறின்றிய சின்னங்களுடன் மரியாதையாகச் செல்லவேண்டும்.

* * *

"ஆழித் துரும்பேபோலவே யலைந்து மிகுந்து முன்னடிமை பாழிற்றிரிவதேன்ன பாவம் பராபரமே" என்று நெஞ்சம் உருகித் துதிக்கத் தகுந்த இடம் பகவத் ஸந்நிதானமேயாம். தமது குருவினால் கடவுளின் திறத்தினையும் தன் திறத்தினையும் கேட்டுணர்ந்துள்ளவண்ணம் தேவஸந்நிதானமெனக் குறிக்கப்பட்ட இடத்தினிற் சென்று வணக்கத்துடன் அத்தெய்வத்தின் உருவத்தினையும், அதன் கருணைத் திறத்தினையும் நினைந்து, மனவொற்றுமையுடன் அதாவது அந்தக்கரண சுத்தத்துடன் அந்தத் தெய்வத்தை நமஸ்கரித்து அதன் பொன்னடியைப் போற்றுவதாகப் போற்றி, கூடுமானவரையில் அக்கடவுளைச் சுற்றி வருவதாகச் சுற்றிவந்து, தனிமையான அதாவது அவ்வாலயத்துள்ளேயே அயலார்க்கு உபத்திரவத்தை யுண்டாக்காத இடத்தில் அமர்ந்து தெய்வத்தின் பொன்னடிகளைப் போற்றி ஆநந்தக் கண்ணீர் பெருக உள்ளம் பரவசமாகத் தெய்வத் தியானம் செய்தல் வேண்டும். "எண்ண மறிந்தே யிளைப்பறிந்தே

வெளியில் காட்டும் பரோபகார குணத்தையே தம் சுயநலத்துக்குப் பிரதான துணைக்கருவியாகக் கொண்டு வாழ்பவரைத், 'தியாகி' என்பது பதங்களைத் தாறுமாறாக உபயோகிப்பதாகும்.

யேழை யுய்யும் வண்ணம் திருக்கருணை வையாய்" என்று துதிக்கவேண்டும். "சிந்தித்தவெல்லாமென் சிந்தையறிந்தே யுதவ வந்த கருணை மழையே" என்று போற்றி ஆநந்த பரிதர்களாதல் வேண்டும்.

* *
*

"உள்ள சற்காரியத் சொல்லிடினு மறியாமை யெத்தனை?" இக்காலத் தவருட் பலர் பெரியோர்பாற் சென்று ஐயம் தெளியாமல், ஆலயங்களில் ஏற் படுத்தியிருக்கும் ஆடம்பரங்களின் கருத்தினைச் செவ்வனே யுணராமல் அவை களைத் தோஷகரமானவை யென்று கூறுகின்றனர். இன்னோர்க்கு எத்துணை யுரைப்பினும் அறியாமை விலகிவிடாது. "கற்றதுங் கேட்டதும் போக்கிலே போகவிட்டுப் பொய்யுலகனு"வோர் எங்கும்தான் பொய்யுலகனுய் மதிமயங்கு வார். அன்னோர் எவ்விடத்திலுந்தான் கெடுவார். அவர்களைத் திருத்துதல் யாங்ஙனம்? கடவுளின் ஸந்நிதானத்தில் ஏகதேசமான நினைவினைத் தரிசனி கள் (தரிசிப்போர்) கொள்ளும் வண்ணம் அவ்விதமாக ஆடம்பரங்களாதியன ஏற்படுத்தி யிருக்கின்றார்களே யன்றி வீணுயன்று. கடவுளின் பொருளான தாசியாதியரை விரும்புவோர் தேவ திரவியாபகரண தோஷிகளாவார்கள். தேவ ஸந்நிதானத்திலிருக்கும் பொருளனைத்தும் தேவனுடைய பெருமையை விளக் கும் உபகரணங்களெனக் கருதுவோனே தேவனுக்குரியோனுவன். அவனே தெய்வ வழிபாட்டின் புண்ணியத்தினைப் பெறத்தக்கோனுவன். ஆலயத் துள்ளிருக்கும் எந்தத் திரவியத்தையும் உண்மையடியார் விரும்பார். அன்னோர் பரமனின் கருணை யொன்றையே நாடி அதற்கே தம்மை ஒப்புக்கொடுப்பர்.

* *
*

"ஸ்தூல சரீரம், ஸூக்ஷ்ம சரீரம்" ஸுகமோ, அல்லது துக்கமோ, அல்லது இச்சையோ, அல்லது துவேஷமோ, அல்லது ஞானமோ, அல்லது மற்ற எந்தப் பாவனையோ, எது ஏற்பட்டாலும் ஸ்தூல சரீரம் வேண்டிய தவசி யமே. மூளை (Brain) என்பது ஸ்தூல சரீரத்தின் ஓர் பாகம். மனது ஸூக்ஷ்ம சரீரத்தின் பாகம். மூளையில் எப்போது மனம் வேலை செய்கின்றதோ, அப் போது இச்சை, சுகம், துக்கம், ஞானம் முதலியது ஏற்படுகின்றது. மூளையில் மனம் வேலைசெய்யாவிடில் சுகதுக்கம் முதலியது தோன்றுகின்றதில்லை. இத ளுல் மூளையில் மனது வேலை செய்வதே, ஸகல பாவனைகளுக்கும் ஹேது என்றறியப்படுகின்றது. எனவே, எந்தப் பாவனை யேற்பட்டாலும் அது ஸ்தூல சரீராவயவமான மூளையும், ஸூக்ஷ்ம சரீராவயவமான மனதும் ஸம்பந் தித்திருத்தலாலேயே நிகழ்வதாகின்றது.

* *
*

"நுணலை தன் வாயாற் கெடும்" என்பது பழமொழி. அநேக தவளை கள் ஸர்ப்பத்தின் புற்று ஸமீபமாயிருப்பதை அறியாமல் ஓயாமல் கத்தும். அந்த சப்தத்தைக் கேட்டு ஸர்ப்பம் வெளியே வந்து மண்டூகங்களை வாயிற் போட் டுக் கொள்ளும். இவ்விதமே பாபிகள் ஓய்வொழிச்சலின்றி ஸாதுக்களை நிந் தனை கூறி, பூர்வ ஜென்மாந்திரங்களில் அவர்கள் செய்துள்ள பாவங்களை மூட்டையாகக் கட்டிக்கொண்டு போகின்றனர். ஒவ்வொருவரும் தாம் விஸர்

எல்லாம் வெளிப்பகட்டு. எல்லாம் பார்வைக்கு டம்பம். எல்லாம் வெறும் பேச்சு. உள்ளுக்குச் சரக்கு ஒன்றுமில்லை. அங்கே வழ வழதான்.

ஜனம் செய்யும் மலத்தை வாரிக்கொட்டுவதற்காக ஒட்டர்களை நியமிப்பதுண்டு விவேகிகள் தங்களின் பாபமாகிய மலத்தை தெய்வத் தியானத்தால் ஒழித்த தக்ஷணம் அதை வாரிக்கொண்டு போவதற்காக பகவான் பரம துஷ்டர்களான தூஷகர்களைப் படைத்திருக்கிருர். இவர்கள்தாம் விவேகிகளை நிந்திப்பவர்கள். தூஷணை செய்யும் இந்த நராத்மாக்களை ஈச்வரன் சிருஷ்டியாதிருந்தால் ஸாதுக்களின் பாபமாகிய மலம் நீக்கப்படுவது கஷ்டமாகுமன்றே ?

* *
*

"மிக்கன செய்யில் தக்கன விளையும்" இதற்குத் துருவ சரித்திரமே போதிய சான்று. மிகச் சிறுவனுன துருவன் யார் தடுத்தும் கேளாமல் ஒரே உறுதியோடு காட்டுக்குப் போய் தபஸ் செய்து உத்கிருஷ்டமான பதவியையடைந்தான். இதனுல் நாம் அறிந்துகொள்ளும் ஒரு நற்பாடமுண்டு. நன்மையான காரியத்தைச் செய்யத் தொடங்கினுல் அதற்குக் காலம் இடம், பொருள் முதலியன தடையாகுமென்று எண்ணப்படாது. யார் தடுத்தாலும் அதைரியப்படாமல் பிடித்ததை ஸாதித்தே தீரவேண்டும். இந்த குணத்துக்குத்தான் ஸாகஸமெனப்படும். இக்குணம் எவருக்கு இருக்கிறதோ அவர் அத்புதமான காரியங்களைச் செய்து முடிப்பர். உற்ருர், பெற்ருேர், மேலோர், பெரியோர் ஆகிய இவர்களின் வார்த்தையைக் கேட்கவேண்டுமென்பது எதற்காக ? பாப காரியத்தைச் செய்யாமல் நீக்குவதற்காகவேயன்றி வேறெதற்குமல்ல. நம்மைப் பிரதிதினமும் ஈசுவரத்தியானம் செய்யவேண்டாமென்று யாரேனும் தடுத்தால் நாம் கேட்கலாமா ? அவ்வாறு சொல்பவரை நம்முடைய சத்துருவாகவன்ருே மதிக்கவேண்டும். எவர் நம்முடைய நித்ய ஸந்தோஷத்தைக் கெடுக்க எத்தனிக்கிருரோ அவர் நம்முடைய நண்பராகார். உலகத்தில் ஸ்வயாதீனமென்பது உயிரினும் சிறந்த நிலைமை. அதை அடையாதவர்கள் எவ்வித நற்கருமத்தையும் செய்யமுடியாது. பாபமென்பது நமது மனஸ்ஸாக்ஷிக்கு விரோதமான கருமத்தைச் செய்வதாம். எது மனஸ்ஸாக்ஷிக்கு விரோதமில்லையோ அதைத் தாராளமாய்ச் செய்யலாம். புண்ய பாபங்களுக்குப் பயப்படவேண்டுமேயன்றி மூடர்களின் வார்த்தைக்கும், எச்சுக்கும் பயப்படவேண்டிய அவ்சியமில்லை.

* *
*

"உள்ள முருகின் கல்லுங் கரையும்" என்பதுபோல நமது மேன்மை நிலை யாவும் நமது உள்ளத்தின் பக்குவத்தன்மைக் கேற்றபடி அமைவதாம். முற்காலத்தில் சித்திரசேனன் என்ற ஒரு அரசனிருந்தான். அவன் சிறு பிராயத்தில் வேடரால் கொண்டுபோகப்பட்டு 20-வயதுவரை வேடர்கள் வஸிக்கும் மலைக்குகையில் வஸித்துக் காலங்கழித்தான். இவர்களைக் காவலாளிகள் வெகு காலத்திற்குப் பின் சில நகைகளைக் களவாடியதற்காகப் பிடித்துவந்து அரசன் முன்பு நிறுத்தினர். அவர்களில் ஒருவனுடைய காதில்மட்டும் ஒரு வித வைரக்கடுக்கனிருந்தது. அதைக் கண்டவுடன் அரசன் ஆச்சரியமடைந்து அது தான் தன்னுடைய புத்திரனுக்கு அணிந்ததென்றும், அது வனசரன் காதில் இருப்பதற்குக் காரணமென்னவென்றும் விசாரித்தான். அவ்வேடன்

பருத்திச் சேலை கட்டியவள் உயர்ந்தவளா ? — பட்டுச்சேலை கட்டியவள் உயர்ந்தவளா ?—என்பது கேள்வி. எவள் பதிபக்தி நிறைந்தவளோ அவளே உயர்ந்தவள்.

சத்தியமாகத் தான் அக்கடுக்கனைத் திருடவில்லையென்றும், அதிபால்யமுதல் அது தன் காதில் இருந்ததென்றும் சொல்லி செவியைக் காட்டினன். அதன் கீழ் கழுத்தில் ஓர்வித மச்சமிருந்தது. உடனே அரசன் அவனே சித்திரசேன னென்னும் தனது குமாரனென்று தெளிந்து, வேடர்களை விசாரித்தறிந்து கொண்டு ஸந்தோஷத்துடன் அவனை நோக்கி, "அடே, குழந்தாய் ! நீ தான் என் புத்திரன் ; இனி நீ இந்த ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்து ராஜ்யபாரம் செய்யவேண்டும்'' என்றான். சித்திரசேனனுக்கு உண்டான ஆநந்தத்தைச் சொல்லவேண்டுமோ ? இத்தனை நாள் அவன் உண்மையாகவே அரசகுமாரனாயி னும், அவனுக்கு அவ்விஷயம் தெரியாததால் தன்னை வேடன்என்று நினைத்துப் பலவித துக்கங்களை யடைந்தான். இப்போது இராஜபுத்திரன் என்று தெரிந் ததால் எல்லா துக்கங்களும் ஒரு நொடியில் நிவாரணமாகி பிரம்மாநந்த முண்டாயிற்று. அதுபோல், மனிதர்களாகிய நாம் நம்மைச் சரீரமென்று நினைத்திருக்கும்வரை துக்கத்தால் பீடிக்கப்படுவோம். எந்த நிமிஷத்தில் நம்மை ஜீவனென்று நிச்சயமாய் அறியும் ஞானம் ஏற்படுகிறதோ, அந்த நிமி ஷத்திலேயே ஆத்மாநந்தத்தை யனுபவிக்கத் தொடங்குகிறோம். எந்த நிமி ஷத்தில் அஞ்ஞானம் நீங்குகிறதோ அந்த நிமிஷத்திலேயே ஞானமுண்டாகி மோக்ஷம் சித்திக்கிறது. இருளில்லாவிடத்துப் பிரகாசம் நிலைப்பதுபோல் அஞ் ஞானம் இல்லாதவிடத்து ஞானம் நிலைப்பது நிச்சயமாம். ஆதலின் ஞான ஸம் பத்தினை அடையவேண்டிப் புண்யகரமான இந்த மார்கழி மாதத்தில் பகவா னைப் பிரதிதினமும் பிரதி நிமிஷமும் ஸ்தோத்திரம் செய்யக்கடவோம். சுபம்.

பெண்களுக்குத் தெருத் திண்ணையிலே கச்சேரி ! அங்குள்ள குளிர்ந்த முகத் தை சம்சார வாழ்வில் கண வனிடம் காட்டினல் புருஷ னுக்கு எவ்வளவோ ஆறுத லாகுமே. கொஞ்சம் புருஷ னிடம் வருகிறது, இரண் டொன்று பேசிச் சிரித்து அதில் மயக்கிவிட்டோ மென்று நினைத்துக் கொண் டு வெளித் திண்ணையில் தன் வரவுக்குக் காத்துள்ள கூட் டத்துடன் கலந்து கொள்கி றது ! இது ஒரு சமர்த்து !

நிறுத்திய மோட்டாரை மறுபடியும் செலுத்த மீண் டும் விசையை முடுக்கவேண் டுமாம். அதுபோல் மூக்குப் பொடி இழுத்து அந்தக் காரத்தில் வேலை நடக்கை யில், இடையில் ஒருவர் பேசவந்து தடை நேர்ந் தால், மறுபடியும் வேலை தொடங்குவதற்கு இன்னொரு தரம் பொடியை உறிஞ்சி ஞாபகசக்தியை எழுப்பினல் தான் மறுபடியும் முன் போல் வேலைசெய்ய அவன் சக்தி யுடையவனுவானும் !

கீழ்ப்படிய அறிந்தவனே கட்டளையிடத் தெரிந்தவன். தான் இடும் கட் டளையின் பொறுப்பை அவன் நன்கு உணர்வான்.

என்ன விரோதப்பட்டுக் கொண்டாலும், உள்ளன்புடையோரின் தூய தன்மை ஆபத்துவேளையில் எப்படியோ உதவிசெய்ய இசைந்து முன்வரப் பண்ணிவிடுகிறது. மனிதனை ஏற்றிச் செல்லும் தந்திக்கம்பி இல்லையோ வென வாடி, எவ்விதமோ விரைந்து ஓடிவந்து நெருங்கிக்கொள்ளுகிறார்கள்.

அமிர்தகுணபோதினி

விபவஹு மார்கழிமீ 1௳

ரோம் தேசத்து ராஜரிஷி.

மார்க்கஸ் அரிலியஸு என்பவர் கி-பி 121-ம் வருஷம், எப்பிரல் மாதம் 26-ம் தேதி பிறந்தவராவர். அவரது தந்தை “நியூமா” என்ற பூர்வீக ராஜ குடும்பத்தில் தோன்றியவர். அவரது அன்னையும் மந்திரி வம்ஸத்தில் உதித்தவர். அரிலியஸு தமது சிசுப் பருவத்திலேயே தந்தையை இழந்தார். அந்த உத்தம பிதாவின் ஞாபகத்தாலும், அவரைப்பற்றிய கேள்வியாலும் வணக்கமும் தைரியமும் பெற்றுக் கொண்டதாகக் குமாரன் எழுதி யிருக்கிறார். தாயோ அவருக்குப் பக்தியும், உபகாரம் செய்யும் தன்மையையும் புகட்டினள். தீயசெய்கைகள் செய்யா திருப்பதோடுங்கூட, தீய எண்ணங்களையும் மனதில் நாடவொட்டாதே என்றும், பணக்காரர்களின் டம்பங்களை ஒழித்து விடு என்றும் கற்பித்தது அருமை அன்னையே. அரிலியஸுவின் இளமைப் பருவத்தில் “ஹேட்ரியன்” என்பவர் ரோமாபுரியில் அரசராயிருந்தார். அவர் இந்த வாலிபனுடைய ஆறும் வயதிலேயே இவனிடத்தில் உலகத்துக்கு அகண்ட நன்மையை யளித்து மேன்மையைக் கற்பிக்கத் தகுந்த மகா குணங்கள் இருப்பதைக் கண்டு வியப்புற்றார். இந்தக் குழந்தைக்கு “சத்தியசந்தன்” என்று பெயரிட்டார். பாபமறியாத இளங் குழந்தையின் அழகிய முகத்தை ஹெட்ரியன் உற்றுப்பார்த்து வரும் பழக்கத்திலிருந்தே அவரது துர்வாடிக்கைகள் உதிர்ந்தன வென்று கூறியுள்ளார். ஹெட்ரியன் தனது மரணகாலத்தில் தனக்குப்பின் பட்டத்துக்கு வருபவராக “அண்டோ நைநஸ்” என்பவரை நியமித்தனரேனும், அந்த நியமன காலத்தில் அண்டோநைநஸ் இந்த அரிலியஸுவையே தக்க பருவம் வந்ததும் தனக்குப் பின்னர் அரசராக ஆக்கவேண்டு மென்று ஆக்ஞை செய்தார். இங்ஙனமாக அரிலியஸு தமது 17-வது பருவத்தில் அகண்ட சாம்ராஜ்யத்துக்கு உரியவரானார்.

மாணவர்கள் கண்டிப்புக்கு உட்படும் குணத்தையும், காலந்தவறாமல் எதையும் செய்யும் குணத்தையும் வளர்க்க வேண்டும்.

அரிலியஸு தமது பாட்டனுர் வீட்டில் வளர்ந்து வந்தார். கொள்பாட்டனுர் இவரைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாது வீட்டில் தக்க உபாத்தியாயர்களைக் கொண்டு ஸகல வித்தைகளையும் கற்பித்தார். பாட்டனுரும் மூன்றுதரம் மந்திரியாயிருந்தவர். அரிலியஸுக்கு குஸ்திச்சண்டயிலும், ஓட்டத்திலும் வெகு பிரியம். நன்ருகப் பந்து ஆடுவார். காட்டுப் பன்றியை அஞ்சாது வேட்டை யாடுவார். உடலுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும் விளையாட்டுகளினுலும், வித்யாப்யாஸத்தினுலும், நல்ல வழியில் பயின்று வந்ததனுலும், கௌரவம் பொருந்திய தன்மையாலும் அவருடைய குணம் அனைவரும் ஆச்சரியமுறத்தக்க அழகை யடைந்தது.

அவர் இளமையில் நான்கு முக்கிய விஷயங்களைக் கற்றுக் கொண்டார். (1) காலத்தை வீண் போக்கார். (2) செய்த உபகாரத்தை மறவார். (3) மெய்வருத்தம் பாரார். (4) வீண் சுகம் தேடார்.

எல்லா சாஸ்திரங்களையும் அதிசிரத்தையோடு அப்பியஸித்தார். தர்க்கத்தில் அவருக்கு மனம் செல்லாததால் அதை விலக்கி விட்டார். வேதாந்தத்திலும், சாஸ்திர வித்தையிலும், ராஜகாரிய நிர்வாகத்திலும், நீதிசாஸ்திரத்திலும் வெகுவாய் உழைத்தார். எவற்றை வாசிப்பினும் ஆழ்ந்து வாசிப்பார். நுனிப்புல் மேய்ந்தது போல் அங்கொன்றும் இங்கொன்றுமாக அறிகிற தன்மை அவரிடமில்லை. இவர் இவ்விதம் பட்ட சிரமத்தால் ஓர்தரம் பிணிவாய்ப்பட்டு வருந்தவும் நேர்ந்தது.

தமது உபாத்தியாயர்கள் யாவரையும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு அவர்கள் அனைவருமே தமக்கு ஏதோ கற்பிக்கத் தக்கவர்களென்று நம்பி உண்மையில் பிரயாசைப்பட்டுத் தமச்குக் கற்பித்தார்களென்றும் சிலாகித்துச் சொல்லி யிருக்கிறுர். சிலருக்கு உயர்ந்த உத்தியோக பதவிகளை யீந்தார். இவருடைய உபாத்தியாயர்கள் எல்லோரையும்விட இவரே குணத்திலும், புத்தியிலும், கௌரவத்திலும் உயர்ந்தவர். ஆயினும் அவர்களோடு தன் வாழ்நாளெல்லாம் வெகு ஸ்நேகிதமாயிருந்து, அவர்களின் படங்களைத் தமது குல தேவதைகளுக்குச் சரிசமமாய் வைத்து, அவர்கள் மரித்த பின்னர் அடக்கமான இடத்தில் மலர் மாலைகளையிட்டு வணங்கி வருவதானுர்.

அரிலியஸு பின்வரும் ஒன்பது விதிகளை ஏற்படுத்தி கொண்டார். இவைகள் ஒருவரால் நமக்குத் தவறு நேரிட்ட காலத்தில் சிந்தித்துப் பார்க்கத்தக்கன.

வீட்டின் கஷ்ட நிலையை விருந்தினன் கண்டானு? இல்லாமையைப் பிச்சைக்காரன் அறிவானு? பானையில் இல்லாததைக் குழந்தை தெரிந்து மௌனப்படுமா? ஏழைவிடுங் கண்ணீரை எல்லாம் உள்ளவர் உணர்வரா?

1. மனிதர்களை ஒருவருக்கொருவர் உபகாரமா யிருக்கும்படி கடவுள் சிருஷ்டித்தார்.

2. மனிதர்களுக்கு அவர்களின் ஸ்திதியைக் கொண்டும் ஸந்தர்ப்பங்களைக் கொண்டும் அப்பியாஸங்கள் மாறும்.

3. பாபம் என்பது தெரியாமையே. விருப்பமின்றி ஒருவருக்குச் செய்யும் ஊழியும் பாவத்துடன் ஒப்பானதே.

4. நாமும் பலமற்றவர்கள்தான். பாபத்துக்கு இணங்காதவர்களல்ல. பயத்தினலோ, தவறு வழியிற் செல்வதில்லை யென்ற நமது வாக்கைக் காப்பாற்ற வேண்டுமென்ற கொள்கையினலோ நாம் பாப குற்றங்கள் செய்யா திருப்பவர்களே யல்லாது, குற்றம் செய்யும் எண்ணம் நம்மிட மிருந்து முற்றும் அற்றுப் போனதாலல்ல.

5. பிறரைப் பற்றி ஆலோசனை யில்லாமலும், அவசரமாயும் நாம் நினைப்பது சகஜம். மற்றவர்களுடைய செய்கையைப்பற்றி நாம் சரியாய் அறிந்து தீர்ப்புச் சொல்ல எவ்வளவோ தெரியவேண்டும். (இங்கிலாந்து தேசத்து மகா மந்திரியான "கிளாஸ்ட்டன்" என்பவர் பிறர் உத்தேசத்தையும், மனதையும், அவர் செயலையும் கெட்டவைகள் என்று சொல்வது அசாத்தியம் என்று கொண்டார்.)

6. உனக்கு மனதில் வியஸனம் உண்டாகும்போது மனிதனின் ஆயுள்நாள் அளவற்றதல்ல வென்பதையும், அனைவரும் ஐம்பொறியும் அடங்கிப்படுத்துக்கிடக்க வேண்டு மென்பதையும் சிந்தித்துப்பார்.

7. பிறர் நமக்கு அநியாயம் செய்தால் அதனல் நாம் எய்தும் அவமானம் ஏதுமில்லை. நமக்கு வரும் ஆபத்து நாம் எண்ணும் எண்ணங்களா லல்லாது பிறர் செய்யும் செய்கைகளாலல்ல.

8. பிறரது தீய செயல்களால் நமக்கு வரும் தீங்குகளை விட, அதற்காக நாம் படும் கோபத்தால் விளையும் கெடுதிகளே அதிகம்.

9. தயைக்கு ஓர் வரம்பு இல்லை.

எவன் தான் பிறருக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாது இருப்பானே அவனே பூதேவியின் புண்ணெனப் படுவான். பரோபகாரம் செய்யாதவனே பூமிக்குப் பாரமல்லாது மலைகளும் குன்றுகளும் பாரமல்ல வென்பது அவர் கொள்கை. மானிடனய், ரோம் தேசத்தவனய், சக்ரவர்த்தியாய் உள்ள தான் தனக்கு உரிய கட்டளைகளை யெல்லாம் சீர்பெறச் செய்து முடிக்கும் வண்ணம் ஆக்ஞை யருளும்படி கடவுளைப் பிரார்த்தித்தார். ("கடவுளுக்கு

தாசி நீலாமணி சக்கிலியப் பெண்ணைப் பார்த்து எட்டிப்போடி என்கிருள். இத்தாசியைவிட அந்த சக்கிலியப்பெண் தன் கற்பால் உயர்ந்தவளாகாளோ? ஜாதி உயர்ந்ததா? கற்பு உயர்ந்ததா? பட்டுச் சேலை உயர்ந்ததா?

என்னவேண்டி யிருந்து அவதரித்தார், எதற்காக உழைத்தார், பிறர் உபகாரத்தின் பொருட்டே தோன்றினர். கீதை 3—22.)

அரிலியஸு தமது இந்திரியங்களை யடக்கி வீண் டம்பங்களை யொழித்தது இன்னும் அதிசயம். இந்தக் காலத்தில் ரயில் வண்டியில் மூன்றாவது வகுப்பிற் செல்ல அவமானப் படுகிறார்கள். உயர்ந்த உடுப்புகளை விரும்புகிறார்கள். விசேஷ சாதனங்களையும் சவுகரியங் களையும் நாடுகிறார்கள். தாகத்திற்கு உயர்ந்த பானங்களைத் தேடு வதன்றி சுலபத்தில் கிடைக்கும் நிர்மலமான ஜலத்தில் இச்சையில்லை. வீண் கௌரவத்திற்கு அலைபவர்களே அதிகம். இன்னோர் செய்யும் அனாவசிய செலவுகளைக் கொண்டு ஒரு ஏழைக் குடும்பத்தை என் றைக்கும் ஸம்ரக்ஷிக்கலாம். அரிலியஸு செல்வத்திலும் சிறப்பிலும் புறண்டபோதிலும் "தீனி" யில் ஆசைப்படார். இளம்பிராயத்தி லேயே கடும் ஆசாரத்தை அனுஷ்டிப்பதானர். வெறும் பலகையில் ஸயனித்து உறக்கம் கொள்ளுவார். அவரது தாயார் எவ்வளவோ கேட்டுக்கொண்டதின் பேரில் ஓர் தோலைப் பலகையின்மீது விரித்து அதில் ஸயனிப்பதானர். ஈன்ற அன்னையின் வேண்டுதலுக்காக இவ் விதம் இசைந்தாரே யன்றி, மற்றபடி தரையிலாவது, வெறும் பலகை யிலாவது படுத்து நித்திரை செய்வதிலேதான் அவருக்கு விசேஷப் பிரியம் இருந்து வந்தது.

சுகத்தை வெறுத்துக் கஷ்டத்தையே கரும்பெனக் கைக் கொண்ட கண்ணியர்களின் கூட்டத்தில் இளமையிலேயே இவர் சேர்ந்துவிட்டார். உழைப்பதற்கு என்றும் அஞ்சார். விசேஷ சௌகரியம் ஒன்றும் வேண்டார். கையால் வேலை செய்யவும் பின்ன டையார். எக்காலத்தும் புன்னகையொளிர் வதனமாய் ஸந்தோஷ கரமாய்க் காணப்படுவார். அவர் முகம் கடுத்திருப்பதை எவரும் கண்டதில்லை. தனக்கு சாவகாசமில்லை யென்றும், வேலை தொந்திரவு அதிகமென்றும் எவருக்கும் எழுதமாட்டார்; சொன்னது மில்லை. ஏதோ அவசர காரியமிருக்கிறதென்று தான் செய்யவேண்டிய கடமை களை அலக்ஷியம் செய்தவருமல்ல. தனது குருக்கள்மாருக்கு தான் அவர்களிடம் கற்றுக்கொண்ட விஷயங்களை வரைந்து அனுப்பி அவர்களுக்கு வந்தனம் செலுத்தி, கடவுளுக்கும் பின்வரும் மறு மைப் பாக்கியத்துக்கும் ஸ்துதி பாடுகின்றார். தனக்கு உலகமெல்லாம் ஒரு கொடையின் கீழ் ஆளும் பாக்கியத்தை உதவியதற்காக அவர் ஸ்துதி செய்தவரல்ல.

"சமயம் வாய்த்தால் சில குற்றங்கள் செய்ய மனமுடையவனே நான். கடவுளின் கருணையால் என்னைப் பரிக்ஷிக்க ஸந்தர்ப்பங்கள்

இங்கே உட்கார்ந்திருக்கிறாயே, குடித்தனத்துக்கே தீங்கு வந்துவிட்டது பத்த வச்சுட்டாண்டி வா!!(ஒருகேஸில் ஒரு சாக்ஷியின் கூற்று. 19-10-28சு.மி,

நேரிடவில்லை. என்னை ஸ்வீகாரம்செய்த தந்தையோ "ஸாகிரிடிஸ்" என்ற மஹா ரிஷியைப்போல் பரிசுத்தமான தன்மையையும், வெல்ல முடியாத மனத்தையும் கொண்டவராய், உலக இன்பங்களை அனுபவிக்கவும் ஒழிக்கவும் வல்லராய் அநந்தமான கல்யாண குணங்கள் பொருந்தி விளங்கி வந்தார். என் அருமை அன்னை சொற்ப காலத்தில் இறந்த போதிலும், கடைநாளெல்லாம என்னோடு இருந்து என் மேன்மையின் பொருட்டு நற்புத்தியும் நல்ல ஆலோசனையும் கூறி வந்தார். இவைகட்குக் கடவுளின் கருணையே காரணம்" என்று அரிலியஸு எழுதியிருக்கிறார்.

இந்த மகா புருஷன் இறைவனின் திருவடி நிழலெய்திய காலை ஜனங்கள் அவரது பெயரைச் சொல்லவேயில்லை. "அப்பா" என்று சிலரும், "அண்ணா" என்று சிலரும், "தாதா" என்று சிலரும் கதறினார்கள். வீடுகள்தோறும் அவரது பிம்பத்தை வைத்துப் பூஜித்தார்கள். பிறகு இருநூறு வருஷங்கள் வரையிலும் சக்ரவர்த்தியின் குடும்பத்தில் குலதெய்வமாக வழங்கி வந்தார். இவர் இறந்து சுமார் இரண்டாயிரம் வருஷங்கள் சென்றபோதிலும், இன்றுதான் இறந்தாற்போல் கண்களில் ஜலம் தளும்புகிறது என ஒருவர் எழுதியிருக்கிறார். மகானுபாவரான இந்த ராஜரிஷியின் ஜீவியத்தை வாசிக்கும் சாமான்யரான நாம், நமது வாழ்க்கையின் அமைப்புக்கு வேண்டிய முக்கிய படிப்பினைகளை இதினின்றும் பெற்றுக்கொள்ளக் கடவோம்.

சந்தானோற்பத்திக்கான சயன அறை எவ்வளவு ரகசியமோ, எவ்வளவு சின்னாபின்னமாய்க் கலந்து கிடக்குமோ, அவ்வளவு ரகசியமுள்ளதாயும், பல பல சிதறிக் கிடப்பதாயும் நூலாசிரியரது —பத்திராசிரியரது அறையுமுளது. ஆதலின் அநுமதியின்றி அந்த எவரும் போகவேண்டாம். எட்டிப் பார்ப்பது அந்த உண்டாகப்போகிற உற்பத்திச் சாக்குச்சுத் தடையாகும்.

ஒன்றுக்கு வருகிறது; எழுந்திருந்தால் வேகமாய் எழுதிக்கொண்டிருக்கும் விஷயங்கள் பிறகு எங்கே நினைவுக்கு வராது தப்பிப் போகுமோ என்ற அச்சத்தால் சிறுநீரையும் அடக்கிக்கொண்டு எழுதிச் செல்ல நேர்கிறது! ஏனெனில், முன்பு நினைவுக்கு வந்து கடிதத்திற்கு வராது மறைந்து போய்விட்ட விஷயங்கள் கோடானு கோடி! ஐயோ பாடே!! மறதியே!!!

ஜோதிடத்தைக் கேளாதே. அதற்கு ஒரு ரூபா அனுப்பாதே. ஓயாது உழைத்து வருகிறேனா என்று மட்டும் ஒவ்வொரு நாளும் உன்னைக் கேள்.

என்ன துள்ளி ஓடி அபிநயித்தாலும் கழுதை குதிரை யாகாது. ஆனால் குதிரையைப் பார்த்து நன்கு பயின்று வரும் கழுதையென்று சிலாகிக்கலாம்.

சென்றுபோன நாட்கள்

ஸ்ரீமான் ஸி. சுப்பிரமணிய பாரதி.

(446-ம் பக்கத் தொடர்ச்சி.)

இந்தியா பத்திரிகைக்குப் பாரதி ஆசிரியரென்று எவருமே அறியார். பாரதியாருக்குத் தமிழ் நாட்டிலிருந்த பெயர் இவ்வளவுதான். சென்னையிலுள்ளார் மட்டும், அதிலும் சில முக்கியஸ்தர்கள் மட்டும் உண்மையை உணர்ந்திருந்தனர். தமது பாடல்களை யெல்லாம் ஒன்றுசேர்த்து **"ஸ்வதேச கீதங்கள்"** என்று இரண்டணா விலையில் ஒரு புஸ்தகமாக வெளியிட்டார். அதைக் குறித்து "இந்தியா" பத்திரிகையில், "சுப்பிரமணியபாரதியின் பாடல்கள் அடங்கிய "ஸ்வதேச கீதங்கள்" வரப்பெற்றோம்" என்று தம்மை அந்நியர் போலக் கொண்டு அதற்கு ஒரு மதிப்புரையும் வரைந்தார்.

***

ஸ்ரீ திலகர் 1907-ம் வருஷத்தில் **புதிய கக்ஷி**யைத் தழுவிப் பிரஸங்கங்கள் செய்ய, அதில் முதல் பிரஸங்கத்தை **"புதிய கட்சியின் கோட்பாடுகள்"** என்றபெயருடன் நூல்வடிவமாக ஆங்கிலமும் தமிழுமாய் ஒருஅணா விலையில் வெளியிட்டார். பாரதியார் புதிய கட்சியைத் தழுவி நின்றார். கவிதா சக்தி ஜனங்களிடை பெருக வேண்டுமென்று விஸ்தாரமாக வரைவார். "சுதேச மித்திரன்" வெள்ளி ஜூபிலி நடந்தகாலத்தில் பாரதியாரும் அங்கு வந்திருந்தார். 'மித்திரன்' ஆசிரியரான ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் பழய கட்சியையும், புதிய கட்சியையும் தழுவி நின்றதில், பாரதியார் தமது "இந்தியா" பத்திரிகையில் உக்கிரகமாய்க் கண்டனங்கள் வரைந்தார். கண்டனமான படங்களும் வெளியிட்டார். **"பால பாரதம்"** என்ற ஆங்கில வாரப் பத்திரிகையொன்றையும் வெகு திறமையுடன் நடத்திவந்தார். 1907-ம் வருஷத்தில் **பரிமளா** என்ற நாவலை அச்சிட நாம் சென்னை சென்றிருந்த சமயம் ஒரு கொடிய முறை ஜ்வரத்தினால் வருந்தும்படியாக, பாரதியாரே **பரிமளா** 'புரூப்'கள் முக்காற் பாகத்தையும் திருத்தி முடிவு செய்து, அந்த நாவலைப்பற்றி "இந்தியா" பத்திரிகையின் தலையங்கத்தில் ஆறு கலங்கள் வரை மதிப்புரை வரைந்தார். அதிலே மொழிபெயர்க்குந் தொழிலைக் குறித்தும், தமிழ் மொழியில் ஸமஸ்கிருத பதங்களைச் சேர்ப்பதைக் குறித்தும், தமிழின் இயற்கை இனிமையைக் குறித்தும், 'அங்கனாமணி' என்பதிலும் 'பெண்மணி' என்ற தமிழ்ச் சொல் மிக்க இனிமையுடையது என்றும் விஸ்தாரமாக வரைந்தார்.

***

சூரத்தில் நடந்த காங்கிரஸுக்குப் பாரதியாரும் சென்றிருந்தார். சூரத்தில் காங்கிரஸ் பிளவுபட்டது. பாரதியார் தாம் சென்னையிலிருந்து

சிலருக்குக் கண்ணீர் சொற்ப கஷ்டத்திலும்கூடப் பெருகிவிடுகிறது. சிலருக்கோ எதிலும் கண்ணீரே வாராமலே கன்மனதா யிருந்து சகிக்கத் தாளாத ஒரு பெரும் துயரில் மட்டும் குபீரென்று எழுகிறது.

பிரயாணப்பட்டது முதல் மறுபடியும் சென்னை வந்து சேர்ந்தவரையில் நடந்த விஷயங்களைக் கோர்வையாகத் தொகுத்து "இந்தியா" பத்திரிகையில் வெளியிட்டு "**எங்கள் காங்கிரஸ் யாத்திரை**" என்று ஒரு புஸ்தகமாகவும் இரண்டணு விலையில் பிரசுரம் செய்தார். நூல்கள் யாவும் சொற்ப விலைக்கே உதவப்பட்டன. ஒவ்வொன்றும் புதுச் சுவை, புது நடை, புதிய அழகுகொண்டு இலங்கின. "**ஞானரதம்**" என்ற தலைப்பெயருடன் தமிழ்நாடு என்றும் கண்டிராத துள்ளிக் குதிக்கும் ஒரு புதிய கந்தர்வ நடையில் இயற்கையின் அழகுகளைப் பற்றியும், தேசச் செய்திகளைப்பற்றியும், நெருங்கிய நண்பர்களின் மன மாறுபாடுகளைப்பற்றியும் அற்புதமான கல்பனையுடன் வாரந்தோறும் "இந்தியா"வில் எழுதி வந்தார். அவற்றை ஒருங்குசேர்த்து "ஞானரதம்" என்று ஒரு புஸ்தகமாக வெளியிட்டார். அதன் விலை அணு-8. அதற்கு இணையான நூல் தமிழ் மொழியில் இல்லை. சொற்சுவை பொருட்சுவை நிரம்பியது. பாச்சுவை பரவிய நடையானமைந்தது.

***

பாரதியின் "இந்தியா" பத்திரிகை சட்டவரம்பை மிகவும் மீறி நெருப்புமழை பொழியத் தொடங்கிற்று. இது பாரதியாரைப் பிடித்த கெட்டகாலம்தான். சாந்தமான நடையில் அவர் சென்றிருந்தால் நாளைக்கும் "இந்தியா" பத்திரிகை நடக்கக் கூடும். இந்தியா பத்திரிகையின் ஆசிரியரைக் கைதுசெய்ய வாரண்டும் பிறந்தது. போலீஸார் "இந்தியா" பத்திரிகையின் காரியாலயத்துள் பிரவேசித்து பாரதியாருக்கு வாரண்டைக் காண்பித்தனர். தாம் ஆசிரியரல்லவென்றும், தமது பெயர் வாரண்டிலில்லையென்றும் கூறிக்கொண்டிருக்கையில், "இந்தியா" பத்திரிகையை வெளியிடுபவரான ஸ்ரீநிவாசன் என்பவர் அங்குற்று 'என்ன' என்றார். போலீஸார் அவரே ஆசிரியராகப் பதிவு செய்யப்பெற்றவரென்று அறிந்து அவரைக் கைது செய்தனர். விசாரணை காலத்தில் ஸ்ரீநிவாசர் தாம் ஆசிரியரல்லவென்றும், பாரதியாரே உண்மை ஆசிரியரென்றும், தாம் ஒரு குமாஸ்தா போலவே இருந்து வந்ததாயும், தமக்கு வியாசம் எழுத சக்தி கூடக் கிடையாதென்றும் தெரிவித்துக்கொண்டார். ஆயினும் அவருக்கு ஐந்துவருஷ கடினகாவல் சிக்ஷை விதிக்கப்பட்டது. பாரதியாருக்கும் வாரண்டு பிறந்தது. அதற்குத் தப்பி பாரதியார் புதுச்சேரி போய்ச்சேர்ந்தார்.

***

இது சம்பந்தமாக "சுதேச மித்திரன்" 16-11-1908-ல் துணையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. "சென்னையிற் பிரசுரமாய் வந்த "இந்தியா" வென்ற வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையில் சென்ற மார்ச்சு மாதம் முதல் ராஜத்துவேஷமான வியாசங்கள் தோன்றி வருவதாக அதன்பேரில் ராஜத்துவேஷக் குற்றஞ் சாட்டி அதை அச்சிட்டுப் பிரசுரப் படுத்துவோரான (Printer & Publisher) ஸ்ரீநிவாசய்யங்காரைக் கைதிப்படுத்தி விசாரணை செய்ததில், ஐகோர்ட்டில் அவருக்கு ஐந்து வருஷ தீபாந்திரசிக்ஷை விதிக்கப்பட்டது. இப்படி விதிக்கப்படுமென்றே பொது

உன் கோபம் உன் சாப்பாட்டுக்குப் பிறகு இருக்கட்டும். கோப மனதில் சாதம் வேண்டாமென்று தோன்றும். அப்போது மனதை எதிர்த்தபடியே இலையிலுள்ளதைப் புசித்துவிடு. வயிறு நிரைந்தால் கோபம் போய்விடும்.

வாக எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ராஜத் துவேஷக் குற்றம் செய்ததாகக் கவர்ன்மெண்டார் யாரை நினைக்கிறார்களோ அவர்களைப் பிடித்து விசாரணைக்குக் கொண்டு வருவதும், ஜட்ஜுகள் கொடுந்தண்டனை விதிப்பதும் இப்போது சாதாரணமாய்விட்டது. குற்றஞ் செய்தவர்களைத் தண்டித்தல் அவசியமென்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்; ஆனால் ராஜத் துவேஷக் குற்றஞ் செய்கிறவர்கள் படித்தவர்களாயும், கௌரவமான நிலைமையில் இருப்பவர்களாயு மிருப்பதால், அவர்களிடத்தில் கவர்ன்மெண்டாரும், ஜட்ஜிகளும் அவ்வளவு கொடுமை காட்டாமல் இருக்கக்கூடும். ஸ்ரீநிவாசையங்கார் குற்றமுள்ள வியாசங்களை யெழுதினவரல்ல; எழுதினவரும், அந்தப் பேப்பருக்குச் சொந்தக்காரரும் அகப்படாமல் மறைந்து போனார்கள். ஸ்ரீநிவாசையங்கார்பெயர் போலீஸ் கமிஷனர் ஆபீசில் பதிவு செய்யப்பட்டிருந்ததால் அவர் அகப்பட்டுக் கொண்டாரே யன்றி குற்றத்துக்கு முதல் உத்தரவாதம் அவர் பேரில் தாங்கியதல்ல. இந்த ஒரு காரணத்தினாலேயே அவருக்குக் கொடுந்தண்டனை விதிக்காமல் இலகுவான தண்டனை விதித்திருக்கக்கூடும். அல்லது "இந்தியா" பத்திரிகையில் ராஜத்துவேஷக் குற்றமுள்ள வியாசங்கள் தோன்றின துவக்கத்திலேயே கவர்ன்மெண்டார் எச்சரித்திருந்தார்களானால் இப்போது ஓடிப்போயிருக்கிற எடிடரும் புரொப்ரைடரும் அப்படிப்பட்ட வியாசங்கள் தோன்ற இடங்கொடுத்திருக்கமாட்டார்கள். அவைகளால் விளையும் தீங்கும் குறைந்திருக்கும்."

***

தம்மை நம்பிய ஒருவரை ஆபத்தில் சிக்கவைத்துவிட்டுத் தாம் தூரப் போய்விட்டமை பாரதியாரின் சரித்திரத்தில் ஒரு பெரிய களங்கமேயாகும். தண்டனையடைந்த ஸ்ரீநிவாசன் என்பவர் சிறையில் நன்னடக்கையுடன் நடந்துகொண்டாரென்று ஒரு வருஷத்திற்குப் பிறகு விடுவிக்கப்பட்டதாக வதந்தி. பாரதியார் சென்னையை விட்டுப் போனதற்குப் பிறகு "இந்தியா" பத்திரிகையும் சென்னையில் நின்றுவிட்டது. பாரதியாரின் அதிர்ஷ்டகாலமும், சென்னையின் பிரபல வாழ்க்கையும் இத்துடன் பூர்த்தி பெற்றது. இனி, தமது அந்திய காலத்தின் எஞ்சிய சில நாட்களைக் கழிப்பதற்குத்தான் பத்து வருஷங்களுக்கு மேற்பட்டு பாரதியார் புதுச்சேரியிலிருந்தும் சென்னைக்கு மறுபடியும் வருபவராகிறார்.

(தொடரும்.)

வாழ்வின் உட்கருத்தைக் கல்விப் பயன் இல்லாமலே நம்மவர் தொன்றுதொட்டு இன்றுவரை அறிந்துகொண்டு வந்திருக்கின்றனர். கடவுளுடைய ஸர்வ வியாபகதத்தையும், வாழ்வில் கர்மாவின் விசேஷஸ்தானத்தையும் இந்தியாவில் அறியாதார் உளரோ?

தமிழ் நாட்டில் மிக்க விரிவாக முகவுரை எழுதியவர் 'மரகதவல்லி' நூலாசிரியர் ஸ்ரீ ப.சி.கோவிந்தசாமி ராஜா ஒருவர்தான். அதன்பின் 'ஆநந்த கதா கல்பகம்' ஆசிரியர். இவ்விருவரைத்தவிர மற்றவர் அதனைப் பின்பற்றவில்லை. சிலர் முகவுரையே எழுதுவதில்லை.



பாரத ரமணிகளின் வித்வத்துவம்.

(378-ம் பக்கத் தொடர்ச்சி.)

பதினான்காம் நூற்றாண்டில் சந்திரஸிம்ஹன் மனைவி லக்ஷ்மீதேவி என்பவள் "விவாத சந்திரா" என்னும் ஸ்மிருதியை எழுதினாள். இது மிதில தேசத்தில் வழங்கியது. வியவஹாரத்தில் அந்த ஸ்மிருதியே விசேஷமாய் ஆதரிக்கப் பட்டிருக்கிறது. மிதிலாபுரி வாசிகளான பெண்களுக்கு மற்ற தேச ஸ்திரீகளைவிட அதிகாரமும், ஸ்வதந்திரமும் பாத்தியமும் ஏற்பட்டு அதன்படியே கோர்ட்டிலும் தீர்ப்பு செய்யப் படுகிறது. **ஸ்திரீ செய்த கிரந்தமானதால் தன் இனத்தார் விஷயத்தில் அன்பு பாராட்டி யிருக்கிறாள்.** புருஷர்கள் அதை ஆக்ஷேபிப்பார்களல்லவா? ஆனால், புருஷன் செய்த நியாய சாஸ்திரத்தில் தன் வகுப்பாருக்கு அதிகமான அதிகாரம் கொடுத்திருக்கிறானென்று பெண்பாலார் கூறுகின்றனர். ஆம், அது உண்மையே.

***

"மிதாக்ஷரம்" என்ற ஸ்மிருதி காசி தேசத்திலும், தக்ஷிண தேசத்திலும் அனுஷ்டிக்கப்பட்டது. ஹிந்துக்களின் வியாஜ்ய வியவஹாரங்கள் அதன்படியே வியவஸ்தை செய்யப் பட்டன. அந்த ஸ்மிருதிக்கு பாலபட்டனுடைய வியாக்யான மிருக்கிறது. அதில் நந்த பண்டிதனுடைய மதம் கண்டிக்கப்பட் டிருக்கிறது. **ஆனால், பாலபட்டனென்ற பண்டிதன் ஒருவனுமில்லை. ஸ்ரீ லக்ஷ்மீ தேவி என்பவள் அப்பெயரை வைத்துக்கொண்டு வியாக்யான மியற்றினாள்.** நந்த பண்டிதனுக்குப் பிறகு இது உண்டானதால், பதினேழாவது நூற்றாண்டில் ஸ்ரீ லக்ஷ்மீ இருந்திருக்கிறாள். அவள் தன் பரிசயம் சொல்லவில்லை. அவள் காலத்திலேயே **ஸ்திரீ வித்தை போஷணை செய்வோரின்றிக் குறைந்துவிட்டதுபோலும்!**

***

பாரத வருஷத்தில் ஸ்திரீ ரத்நங்களை வெளிக்காட்டிவந்த ஸூர்யன்

இவன் கையிலும் அவன் கையிலும் பிச்சைஓடு இருக்கையில் இருவரும் வெகு நேசம். இருவரிடமும் பணம் ஏறியபிறகோ பிரிவினை——கோர்ட்டுக்கும் எகல். அதில் சகலசொத்தும் தொலையவே பழையபடி இருவரும் குலாவத் தொடங்குகின்றனர்.

அப்போதுமுதல் மேற்குத் திசைக்குச் சென்றுனென்று தோன்றுகிறது. பண்டிதை ரமணிகள் ஸ்வ நாமத்தை வெளியிடும் ஆசையை விட்டு வெகு காலமா யிருக்கவேண்டுமென்றுகூடத் தோன்றுகிறது. ஹிந்துக்களின் கீர்த்தி குறைந்து வந்ததும் வெகு தினங்களா யிருக்கவேண்டும். அவைகள் எல்லாம் ராஜ்யம் ஆளுவோரால் நிலமடைந்து ஸ்திரீ வித்யாப்யாஸமே பூண்டற்றுப் போகும்படி நேர்ந்தன. அடிக்கடி பாத கண்டத்தில் ராஜ்ய பரிபாலனம் பல பேர்களின் கைக்கு மாறினதால் பெண்கள் கல்வியையே சுத்தமாய் மறந்துவிட்டனர்.

***

கடைசியாக, ஸ்திரீ வித்யாப்யாஸமே கூடாதென்று ஒரு கட்டளை யிருப்பதாய் நினைத்துக்கொண்டார்கள். வித்யாவந்தர்களான புமான்களும் ஸ்திரீ வித்தையைக் கண்டனம் செய்யத் தோன்றினர். இதைவிட அநர்த்தம் வேறு என்ன? வயது முதிர்ந்த மாதர்கள் அடிமைத்தனத்தையே தமது ஸ்திரீ ஸமூகத்திற்குப் போதகம் செய்ய முற்படுவதாயினர். ஸ்திரீகள் ஸ்வதந்திரம் அற்று அடிமையில் ஆழ்ந்திடவும், அவர்களின் வயிற்றிலுதித்தோரிடமும் அந்த அடிமை நாற்றம் வீசப்பெறுவதாயின. புருஷன்மட்டும் ஜீவனோபாயம் தேடலானன். ஸ்திரீகள் வீட்டிலுட்கார்ந்து ஊர்வம்பு பேசிப் பேன் குத்தி வீட்டு வேலைகளை மட்டும் செய்வதாயினர். ஸ்திரீகளுக்கு உலகத்தின் வெளி விஷயங்களிலும் பொது விஷயங்களிலும் கவனமே யில்லாமற் போயிற்று. ஆடவர் கொண்டுவந்ததைத் தின்று மீந்ததைப் பத்திரப்படுத்தலாயினர். ஸ்திரீ ஜன்மம் போகத்துக்கும் ஸந்தானோற்பத்திக்குமே யென்று கருதப்படலானது. இதுவே பூர்வாசாரமாய்விட்டது. ஆகிலும், பூர்வ மதாசார ஸம்பிரதாயங்களை மறந்தவர்களல்ல. இது முந்திய நிலைமை. தற்போதோ இந்த அந்தகார திசையினின்றும் சிறிதுசிறிதாக வெளிச்சமுண்டாகிக் கொண்டு புது உருவினில் மாறி வருகின்றது.

ஆதி மறைக்கீதம் அரிவையர்கள்
சொன்னது போய்,
வீதி பெருக்கும் விலையடிமை
யாயினரே!

(முற்றிற்று.)

கற்றதுங் கேட்டதும் போக்கிலே போகவிடுபவர்.

உயரிய கல்வியைக் கற்கும் கலாவதிகளிற் சிலர்தம் நடைப் பிசகுகளையும், குணப் பழுதுகளையும், அளவில் மிஞ்சிய பிறஆடவரின் சகவாசத்தினையும், நாணமற்ற கோலத்தினையும் எண்ணிப் பார்க்கக் கருதுவதில்லை. உலகில் தாங்கள் ஒரு 'தனிப்பிறப்புகள்' என நினைத்துக்கொண்டு, பெண்டிர்க்கு இனியவையாகிய சமையல் பாகமுறைகளைக் கூடக் கற்காமல் வெறுத்தொதுக்கிப் புஸ்தகச் சுமைதாங்கிப் புதுமை விளைத்துப் புன்கதிக்கு ஆளாகின்றனர். உத்தம குணமற்ற உயர்ந்த கல்வியால் செருக்குற்று நிற்கும் இவ்வாறுன நங்கையர்கள்பால் உண்மையான காதல் என்பதும் சந்தேகமே.

சென்றமாதம்

ஸ்ரீ லாலா லஜபதிராயின் அந்தியம்.

"ஆர் இட்ட சாபமோ அடிநாளின் தீவினையோ" என்று அலறி நொந்து படும் வாறாக சென்ற நவம்பர் மாதம் 17-ம் தேதி யன்று காலையில் 7-30-மணிக்கு நமது உயிர்த்துணை யான ஸ்ரீ லாலா லஜபதிராய் தமது இல்லத்தினில் திடீரென்று ஹிருதயத் துடிப்பு நின்றுவிட்டதின் காரணமாக உயிர் துறந்துவிட்டார். அந்தோ நம் நிதியினை இழந்தோம்! ஒரு புகழொளி மலையினை யிழந்தோம்! அழகிய சிவந்த ஒரு திருமுகத்தினை இழந்தோம்! ஒரு வீரகேசரியை இழந்தோம்! 18-ம் ஆண்டிலேயே வக்கீலாகி அதிபால்யமுதல் காங்கிரஸில் சேர்ந்து தேசத்திற்கென்றே வாழ்ந்து தேசத்துக்கென்றே மரித்த ஒரு மேதாவியை இழந்தோம்! ஆரியஸமாஜ பரிபாலகனை இழந்தோம். ஹிந்துமத ஸம்ரக்ஷகனை இழந்தோம்! திலகருக்குப் பின் இந்தியத்தாய்க்குத் துணையாய் நின்ற மற்றொரு திலகரை இழந்தோம்! காங்கிரஸின் பழயநாள் அக்கிராஸனரை இழந்தோம்! ஒத்துழையாமையின்போது துணைநின்ற விம்ஹத்தினை இழந்தோம்! நமது அருந்துணையினை இழந்தோம்! என்னே விதியின் கொடுமை இருந்தவாறு!

வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி உடைவது போன்றுள்ள இந்தியாவின் துரதிஷ்ட நிலைதான் என்னே! ஒத்துழையாமை ஓங்கிய நாளில், அதற்குமுன்னரே அங்கினைவு பாவிக் கனவு மிகுத்து நின்ற திலகர் பெருமான் அந்த இயக்கத்தினைக் கண் கொண்டு நோக்கிக் களித்தற்கின்றி காலனுக்கு இரையானார்! சுயராஜ்யக் கக்ஷிக்கு விதையூன்றிய தேசபந்து தாஸர் அது பழுத்துக் கனிதருங்காலையில் கடவுளின் பாதநீழல் பற்றினார்! அரசினரின் ஒரு தனி அதிகாரம் ஜனங்களின் கைக்குத் திரும்ப வேண்டுமெனப் பெருமுழக்கமாய் முயன்றிடும் இந்நாட்போதினில் அந்தோ! லஜபதியும் ஆவி துறக்கலானார்! என்னென்ன எண்ணி நைவதோ! எவ்வாறு துயர் ஆற்றுவதோ!

இப்பொழுது எங்ஙனும் வழக்கத்திற்கு வந்து சாதாரணமாய்க் கூறப்படும் 'சுயராஜ்யம்'—'இந்தியாவின் விடுதலை' ஆதிய கருத்துகளை ஆதியில் புதுமைதோன்ற முதன் முதல் வெளியிட்டவர்கள் எவர்? நம் நாட்டிற்குப் பூரண சுதந்திரம் வேண்டுமென்றும், அன்னிய ஆதிக்கத்தினின்றும் மீட்சி வேண்டுமென்றும் இந்நாளில் நம்மவர் உள்ளத்தில் துடித்துக்கொண்டிருக்கும் புத்துணர்ச்சிக்கு ஆதியில் விதை யூன்றியவர் எவர்? அவ்வுயர்நலமிக்க சிந்தனைகளை நாடெங்ஙணும் வியாபிக்கச் செய்தவர் எவர்? இந்தியா விரும்புவது சுயராஜ்யமே யென்று ஸ்ரீ தாதாபாய் நௌரோஜியைக் கொண்டு காங்கிரஸில் சொல்லும்படி செய்து அக்கருத்துகளைத் தேசமெங்கும் பரவச்செய்தவர்கள் எவர்?—அவர்கள்

மனைவியை அடிப்பதில், அவள் உயிர் போகாதிருப்பது கணவனின் அதிஷ்டம்! அதே அடியில் ஆவி பிரியினோ ஐயா உடனே சிறையே; கைதியே.

திலகரும் லஜபதியுமே. திலகர் முன்னரே சென்றுவிட்டார். மிச்சமாய் நின்ற லஜபதியையும் இன்று இழந்து விட்டோம்.

ஆ! லஜபதியே! எங்களின் அதிபதியே! இந்தத் தலைமுறையிலுள்ளவர்கள் குழந்தைகளாக இருந்த காலந் தன்னிலேயே பாஞ்சாலச் சிங்கமெனப் பட்டத்தைப் பெற்ருய்! இந்நாள்வரையும் அப்பட்டத்தைக் காப்பாற்றியபடியே பாஞ்சால ஸிம்ஹமாய் கர்ஜித்து நின்ருய்! பாஞ்சாலத்தின்பிரதான தலைவராகவும், நாடெங்குமுள்ளவர்களால் மதிக்கப்படுகிறவராகவும் விளங்கினுய்! மேனுடுகளிலும் மேலான பிரக்யாதி கொண்டாய்! அமெரிக்காவில் நெடுநாள் நிலைத்து பாரதத்திற்குப் பணிவிடை புரிந்தாய்! எவர் எவ்விதம் கருதினும், அதற்கு அஞ்சாது உன் மனஸாக்ஷியில் பட்டதையே தைரியமாய் எடுத்துரைக்கும் ஆண்மையில் உயர்ந்து பரிமளித்தாய்! நெஞ்சகத்தே பட்டதை அவ்விதமே சொல்லிவிடுவாய்! மனதில் எதனையேனும் மறைத்து வைத்துக்கொள்ள நீ அறியாய்! எவரும் உன் கருத்தைத் திருத்தி மாற்றிவிட இயலாத வீரத்தில் நின்ருய்!

ஸைமன் கமிஷன் வாராதிருந்தால் நீயும் நெடுநாள் ஜீவிப்பாய்! உன்மீது அடிகள் வீழ்ந்து நோகவும் நேர்ந்திராது. நீ அரசாங்கத்தில் ஒரு உத்தியோகஸ்தனுய் இருந்திருப்பின் அந்த அடிகள் பட்டிருக்கமாட்டாய்! ஜனஸேவை செய்ததன் பொருட்டே அடியுண்டும் மிதியுண்டும் அதனுல் உயிர் துறந்தும் போயினை! ஸைமன் கமிஷனுல் உன் ஜன்ம பூமிக்கு எவ்வாற்றுனும் நலமில்லை யெனக் காட்டவோ அங்கு அடிகள் ஏற்று மாண்டனை! முதுகினிலில்லாமல் நெஞ்சில் தானே அடிகள் தாங்கிய வீரனே! என்று உன்னைக் காண்போம்! உன் உருவ ஒளியை யாங்ஙனம் மறப்பதோ!

1907-ம் ஆண்டில் பழயதொரு துருப்பிடித்து மூலையிற் கிடந்த சட்டத்தினைக் கொண்டு உன்னை அரசினர் பர்மாவுக்கனுப்பித் தேசப்பிரஷ்டம் செய்தனர். அதற்குக் காரணத்தைப் பார்லிமெண்டில் வினவியகாலை தக்க விடை கூற ஏதுவின்றித் தியங்கினர். லஜபதி அத்தனைப் பயங்கரப் பொருளாயின் அவரைச் சுட்டுவிட்டாலென்ன என்ருெருவர் எவரும் திடுக்கிடப் பார்லிமெண்டில் வினவினர். இறுதியில் அரசினரே விடைகூற இயலாது விடுவித்துவிட்டனர். மறைந்த நீ மீண்டும் எங்கள் முன்பு தோன்றினை!

பாரதத்தின் நவீன கிளர்ச்சிக்கெல்லாம் நீ தாய். இந்தியாது உணர்ச்சிகளுக்கெல்லாம் நீ தந்தை. ஒற்றுமைப்படுத்தும் ஒரு பெருந்தகையோய் நீ. இந்த வருஷத்துக் காங்கிரஸுக்கு நீ இல்லாமற்போய்விட்டாய். பூரண சுயேச்சை வேண்டுமென்ற நிறைவேருத ஒரு செயலினை நீ மறுத்துக் குடியேற்ற நாட்டின் சுயேச்சையை இந்தியா பெற்ருல் அதுவே இதுபோழ்துக்குப் போதும் என்று அநுபவத்தினுல் கூறினுய்! நேரு கமிட்டியின் யதாஸ்தினையும் ஏற்ருய். எங்கும் பரிமளமாய் நின்ருய். பலநாடு கண்ட பெரியோய் நீ. திடீரென்று உன் மரணச் செய்தியினைக் கேட்

கடவுள் உண்டுதான், ஆனுல் நிரபராதிகளையே அவர் அதிகமாகச் சோதிக்கிருர். எந்தத் தேவதையும் தன்னிடத்துப் பக்தி யுள்ளவ னெவனே அவனைத்தான் அதிகமாய்ச் சோதிக்கிறது,

டோம்; அங்கலாய்க்கின்றோம். நீ பலநாள் படுத்துப் புரளவில்லை. பெரும் நோயொன்று உன்னைப் பற்றிடவுமில்லை. இறத்தற்கு முந்திய நாளிலும் வெளியிற் சென்று உலாவித் திரும்பினுய். இறக்குந்தனையும் ஆரோக்கியமாகவே இருந்தாய். போலீஸாரால் தாக்குண்ட நாளிலிருந்து என் பலம் குறைகிறது என்றாய். நினையா நேரத்தில் பிரிந்துவிட்டாய்!

பணிவளர் முகிலை, பரஞ்சுடரொளியை, பற்றறு நிலையை, அணிவளர் அஞ்சன மலையை, அரங்கனை அடிதொழச் சென்ற ஆண்டில் ஸ்ரீரங்கத்தில் மணிவளர் கோவிலின் தலைவாயினிற் புகுந்தாய். யாவருடனும் பேசிக் குதூகலித்தாய். கம்பீரமான உன் உருவினை, உனது திருமுக ஒளியினைத் தென்னுடமுற்றும் காட்டினுய். இன்று நீ பரமனிற் கலந்தாய். என் செய்வோம்!

கர்னனோடு கொடை போயிற்று; உயர் கம்பனுடனுடன் கவிதை போயிற்று; பன்னரிய புகழ்ப் பார்த்தனோடு வீரம் அகன்றதென உரைப்பர் ஆன்றோர். உன்னோடு பஞ்சால நாட்டின் உயர்வு போயிற்று! இந்தியப் பழந்தலை வீரரின் வரிசையும் போயிற்று! எங்கள் உள்ளத்து வலிவும் போயிற்று! இந்நாள்வரை செவியமுதாய் ஒலித்துநின்ற நின் ஓசையும் போயிற்று! போனது திரும்புவதும் இனி ஏதே!

1865-ம் ஆண்டில் பாஞ்சாலத்தில் ஜாக்ரன் என்னும் கிராமத்தில் பண்டித பாநுவாய் விளங்கிய ராதாகிருஷ்ணரின் தனயனுய் உதித்தாய். உன் வைசிய மரபினைச் சிறப்பித்தாய். அறுபத்திமூன்றும் ஆண்டில் அந்தோ மறைந்தாய்!

லஜபதி பரமன்பாத நீழல் புக்கது நோக்க, அதனை இருந்து பார்க்க நீண்டு நின்ற நம் ஆயுளை நோவதா? கால வினையைக் கடிவதா? ஊழ் கூட்டும் வழி இதுவென உள்ளம் தேர்வதா? கடவுள் சித்தமெனச் சாந்தியில் அமர்வதா? அந்தோ! மனம் தவிக்கும் தவிப்பினை என்னென்பதோ?

***

வீண் கக்ஷி வாதங்களின் விபதரீம்.

“பேர் கங்கா பாவானி, தாகத் தீர்த்துத் தண்ணீரில்லை” என்பதாய் இப்பொழுது எல்லாம் கக்ஷி வாதங்களும் பேதங்களும் கூச்சலுமாய் இருக்கின்றனவேயன்றி காரியாமிஸத்தில் ஒன்றும் கனிந்து பலன் தருவதாக இல்லை. சென்ற வருஷத்திய சென்னைக் காங்கிரஸின் தீர்மானங்களை நிறைவேற்றிவைத்த பாட்டைக் காணேம்! “சுயாட்சி வேண்டுமென இந்தியர் கூக்குரலிடுவதின் கருத்தென்ன; சுயாட்சி என்றால் அதன் பொருளையே அறியாத இன்னோர் வீணே ஊளைச் சத்தம் போடுவானேன்” என்று பழிக்கும் மற்றவரின் வாயை யடைப்பதற்காக, இன்னின்னகருத்துகள் கொண்டதுதான் இந்தியர் விரும்பும் சுயாட்சி என்று குடியேற்ற நாட்டு ஆளுகையின் கொள்கைகளைத் தழுவி ஒரு யதாஸ்தினை நேருகமிட்டியார் தயாரித்தனர். இங்ஙனம் தயாரித்துவிட்ட அளவி

குணம், ஒழுக்கம், ஞானம் நிறைந்து ஏராளமான சொத்துக்கு அதிபதியாக இருந்தும், பெண்களில் சிலர் வீட்டில் மாமிக்கு அடிமையாய்உட்பட்டு ஒரு கூலிப் பெண்போல் இரவு பகலாய் உழைக்க வேண்டியிருக்கிறது.

லேயே இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு சுயாட்சியை ஆளுவோர் கொடுத்துவிடப் போவதில்லை. அது கொடுப்பதும் எப்போதோ! அது இந்தத் தலைமுறையிலில்லை! எந்தத் தலைமுறையிலோ! எந்த நூற்றுண்டிலோ! இந்த நிலையில் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார் ஓ! குடியேற்ற நாட்டுஆட்சி வேண்டியதில்லை; இந்தியாவுக்குப் பூரணசுயேச்சையேதேவை யென்று ஒரு பெரும் கக்ஷியினை வளர்த்துச் செல்லுகிறுர்! இவ்விதம் ஒரு புதுக் கக்ஷியைத் தோன்றவும் செய்துள்ளார். நேரு கமிட்டி யதாஸ்தின் குடியேற்ற நாட்டு ஆட்சி வேண்டுமென்ற கொள்கையையும் எதிர்த்து நிற்கின்றுர்! இந்தியாவுக்கு எவரையா சுயாட்சியைக் கொடுப்பதாகச் சொல்லுகிறது? அது கனவாய் இருக்கையில் இவ்விதம் ஒரு வீண் கக்ஷியை வளர்ப்பானேன்? பேதப்படுவானேன்? சுயாட்சி விஷயம் வயிற்றுக்குள்ளிருக்கும் குழந்தையைப்பொருத்த சங்கதி. அக்குழந்தை ஆணோ, பெண்ணோ, அலியோ! அது உயிருடன் பிறக்கிறதோ, செத்துத்தான் பிறக்கிறதோ! அதற்குள் பெண்வீட்டார் அக்குழந்தையைத் தங்களுக்கு ஸ்வீகாரமாய்த் தரும்படி கேட்பதும், கர்ப்பிணியான பெண்ணின் கணவன் வீட்டார் முதற்குழந்தையை ஸ்வீகாரம் தரமுடியாதென்பதும், இதிலிருந்து பரஸ்பரம் வருத்தங்கள், பிரிவினைகள் நேர்வதும், கடைசியில் குழந்தை செத்துப் பிறப்பதும், இரு பக்கத்தினரும் அதைக்கண்டு ஏமாறுவதுமான நிலையில் இந்தக் கக்ஷிவாதங்கள் உள்ளன. ஒன்றுபட்டால்தான் உண்டு வாழ்வு. 'நேரு' யதாஸ்தே சரி.

***

புதுக்கோட்டையின் புதிய அரசர்.

"தானென்றுநினைக்கத் தெய்வமொன்று நினைத்தது" என்பதாய்ப் புதுக்கோட்டைக்கு அரசரைத் தெரிந்தெடுக்கும் சங்கதியும் வேறுவிதமாய் முடிந்துவிட்டது. பழய அரசரின் குமாரரேனும், அல்லது அந்த அரசுக்கு உரியவராய்ச் சொல்லப்பட்ட ஸ்ரீ ராமச்சந்திர தொண்டமானேனும் நியமிக்கப்படாமல், அந்த அரச வம்ஸத்தைச் சேர்ந்த அதிபால்யரான ராஜா ராஜகோபாலத் தொண்டமான் பகதூர் என்பவரைப் புதுக்கோட்டையின் அரசராய் இந்தியா கவர்ன்மெண்டார் நியமித்துவிட்டனர். புதிய அரசரது கிரீடதாரண உத்ஸவமும் சென்ற நவம்பர்மீ 18-ம் தேதியன்று சிறப்புடன் நிறைவேறியது. இனி இந்த அதிபால்ய அரசர் தக்க பருவம் அடைந்து அரசினைத் தாமே நிர்வகிக்க 14-வருஷங்கள்போல் செல்லக்கூடும்.

எல்லோருடைய லக்ஷியமும் முடிவில் ஒன்றே. சிலர் அதை வாய்விட்டுச் சொல்கிறுர்கள். சிலர் அதை உள்ளத்தில் மறைத்துவைத்துக் கொள்ளுகிறுர்கள். ராஜீய விஷயத்தில் இவ்வளவே பேதம்.

அந்தப் பென்சிலை அங்கே தம்பி போட்டு விட்டானெனத் தந்தையிடம் கோள் கூறுவதிலும், அதை எடுத்துத் தம்பியிடமே கொடுத்து விடுவது நல்ல குணத்தை விர்த்தி செய்யும்.

பதினுயிரம் ரூபாய் கடனுடன் மோட்டாரில் செல்லும் பிரபுவைவிட, பத்து ரூபாய் மிகுத்து வைத்துள்ள ஏழையின் திருப்தியான வாழ்வு மேல்.

பழமொழிக் குறிப்புகள்

2. அற்ப குணம்.

(430-ம் பக்கத் தொடர்ச்சி.)

113. நாய் வாழ்ந்தென்ன, பூனை தாலி வாங்கி என்ன?

இந்தப் பழமொழியை இருவகையினதாகப் பிரிக்கலாம். (1) ஒரு காலத்தில் அன்புடையோராயிருந்து தமது புது வாழ்வில், புது செல்வத்தில் பழய அன்பு அனைத்தையும் மறந்து, ஏதோ ஒரு அன்னியர் போலாகி முற்றிலுமே மாறிவிடும் தன்மையோர், தாம் முன்பு அன்பு பாராட்டியவர்களுக்கு ஏதாவது சங்கடங்கள், துக்கங்கள் நேர்ந்த காலத்து அதை அலக்ஷியமாய்ப் பாவித்து அவர்கள் எக்கேடு கெட்டாலென்ன, "நாய் வாழ்ந்தென்ன பூனை தாலி வாங்கி என்ன" என்று சொல்லிவிட்டு ஒதுங்கிக் கொள்ளுகிற வகையில் அவர்கள் உபயோகிக்கும் அன்பற்ற சொல்லாகவும் கொள்ளலாம். இவ்வாறாக அன்பு மாறிப்போய் இவ்விதம் அலக்ஷியமாய் அவர்கள் பேசுவதானது அவர்களால் அன்பு பாராட்டப்பட்டவர்கள் எந்த நாளும் எதிர்பார்த்திராத ஒரு திடுக்கிடும் சங்கதியாக இருக்கிறது. முன்னவர்கள் அன்பை மறந்து மாறிவிட்டாலும், பின்னவர் தாங்கள் பழகிப்போன அன்பின் மதுரத்தை மறப்பதற்கின்றியும், விட்டுப் பிரிந்துவிடுவதற்கின்றியும், அதற்கு மனம் ஒப்பாமலும் தவித்து மறுபடியும் அவர்களிடம் கலந்து குலாவுவதற்குத் தொத்திக் கொண்டே திரிகின்றார்கள். இவர்கள் என்னதான் நெருங்கி வந்தபோதிலும், அவர்கள் பிரிந்து தூரப்போகவே பார்க்கிறார்கள். அதற்குத் தக்கபடி எவ்வளவு அலக்ஷியமாயும் கேவலமாயும் நடக்கவேண்டுமோ அவ்வளவுக்கும் நடந்து கொள்கிறார்கள். ஈனமான வார்த்தைகளையும் வாரிக்கொட்டுகிறார்கள். வந்த மனிதன் தங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கையிலேயே அவனுக்குச் சொல்லிக் கொள்ளாமலே தங்களின் புது மோட்டாரில் ஏறிக்கொண்டு புறப்பட்டுப்போய் விடுகிறார்கள். பாவம்! இந்த அன்பினனோ உள்ளே சென்ற அவர் வருவார் வருவாரென்று எதிர்பார்த்துக் காத்திருந்துவிட்டு, பிறகு அவர் எங்கே என்று கேட்கிறான். அருகிலுள்ள வேலையாள் 'அவர் அப்போதே மோட்டாரில் போய்விட்டாரே, உங்களுக்குச் சொல்லவில்லையா' என்று திருப்பிக்கொண்டு கேட்கிறான். அதை அறிந்த இந்த அன்பினன் "அப்படியா" என்று சொல்லிவிட்டு, தன்னை அவர்கள் மதிக்காததை நினைத்துக்கொண்டு ஸஞ்சலத்துடன் வெளியேறுகின்றான்.

முன்பு நேசித்த அன்பினர்கள் தங்கள் புதிய வாழ்வில் ஒரு தெருவின் வழியே கனவேகமாய் மோட்டாரில் வந்தபடி இருக்கிறார்கள். அதே தெருவில் இவர்களைத் தன் உயிருக்கு உயிராய் நேசித்த—என்றுமே ஏழ்மைவாழ்வி

பக்கத்து வீடு, எதிர் வீடு இவைகள் தன் குற்றங்களைப் பிறருக்குக் காட்டிக் கொடுத்து அகப்பட வைக்கும் அபாய இடங்களாகும்.

லுள்ள ஒருவன் தன்னிரு கால்களையும்கொண்டு தனியே நடந்து செல்லுங் காலையில் கண்டு விடுகிறான். மோட்டாரில் செல்லுகிற அன்பினர்களும் இவனைக் கண்டுவிட்டிருந்தும் அந்த நிலையில் அவனுடன் பேசுவது தங்களின் புது கௌரவத்திற்குப் பொருந்தாதென்றும், தங்களின் மோட்டாரை அவனுக்காக நிறுத்துவதாகில் அவனுக்கு ஒரு மதிப்பு கொடுத்து விட்டதுபோல் ஆகிவிடுமென்றும், அவனும் அதே காரணமாகத் தங்களை வந்து ஒட்டிக் கொண்டு, ஏதாவது உதவி விரும்பி அடிக்கடி தொந்திரவு கொடுக்கும்படியாகி விடுமென்றும் நினைத்து ஜாடையாய் பார்த்தும் பாராததுபோல் இருந்துவிடுகிறார்கள். ஒரு காலத்தில் அளவற்ற காதலும் நேசமும் பாராட்டிக் கட்டியணைத்துக் கலந்து முத்தமிட்டு இதழ் ஈரத்தில் ஒன்றுபட்டு ஓர் உருவாகி ஒருமித்து ஸயனித்துறங்கிய ஒரு தாசி பிறகு அத்தகையோனையே தன் வீட்டு வாயிலின் வழியே வரவொட்டாது தடுத்து வெறுத்துக்குலைத்து அகற்றிவிடப் பார்க்கும் தன்மையதான நிலையில் இந்த அன்பினர்களும் தாங்கள் முன்பு நேசித்தவர்கள்பால் நடந்துகொண்டு விடுகிறார்கள். இத்தகையோர் தங்களை நேசித்தவர்களுக்கு ஏதாகினும் சங்கடங்கள் துயரங்கள் நேர்ந்தாலும், அதற்காக இரங்காமல், “நாய் வாழ்ந்தென்ன, பூனை தாலி வாங்கி என்ன” என்று வெகு அலக்ஷியமாய்ப் பேசிவிடுகிறார்கள். இதை எவனோ கேட்டிருந்து அந்த அன்பினரிடம் போய்ச் சொல்லிவிடும்போது அவர்கள் நெஞ்சம் என்னமாய் வேகிறது தெரியுமா? அவர்கள் எவ்வளவு பதைபதைத்துத் துடித்துப் போகிறார்கள் தெரியுமா? ஆ! அவர்களின் மனம் படும் பாட்டைப் பட்டவர்களே தான் உணரவேண்டும். ஆனால் இங்ஙனம் பிறரைப்பற்றி, அதிலும் அன்பர்களைப் பற்றி அலக்ஷியம் செய்து மேற்கண்ட பழமொழியைக்கூறி நோகவைப்பவர்களின் வாழ்வுமட்டும் என்னவோ ஆண்டவனே வெகு நாளைக்கு நீடித்து நிலைப்பதில்லை. பழைய பொத்தல் கந்தைக்கே இவர்களும் சீக்கிரம் திரும்பிவிடுகிறார்கள். ஆ! இதில் இன்னொரு அதிசயம்! இங்ஙனம் பழைய மண் சட்டியைக் கவ்விக்கொண்டபிறகு தாங்கள் அலக்ஷியம் செய்த நண்பர்களையும் உறவினர்களையும் மறுபடியும் மதிக்கத் தொடங்கி, பழைய நாளைப்போல் அன்பு குலாவ ஆனமட்டுக்கும் முயன்றிடுகின்றார்கள். இது ஆச்சரியமல்லவோ!

ஒருவரை யொருவர் பிரிந்திடுங் காலையில் பிரிய மனமின்றி அன்பு மனம் வருந்தித் தாவ, நெஞ்சம் புண்ணாக, கண்களினின்றும் ஜலம் அருவி போல் ஓட, இதன் இடையே ரயிலோ வண்டியோ ஓடி மறைய, ஒருவர் முகத்தை யொருவர் பார்த்தவாறு ஆற்றமாட்டாது தவித்திட, அதற்குள் வண்டியும் வெகுதூரம் சென்று கண்ணுக்கு மறைந்திட, அதுபோன திக்கின் பக்கமே நெடுநேரம் நோக்கியவாறு தன்னை மறந்து நின்றிட, உள்ளமெல்லாம் கள்ளமாய் அங்கு சென்றிட, வெறும் உடலுடனே இல்லத்திற்குத் தான் திரும்ப, இத்துணை பாசமும் அன்புமாய்க் கலந்துவிட்ட இருவர் பிந்திய நாட்களில் எப்படியோ மனம் வேறுபட்டுப் போகின்றார்களையா! எந்தக் காலத்திலும் இருவரது மனமும் வேறுபட்ட சங்கதியே கிடையாது. ஒருவர் மனம் வேறுபட, மற்றவர் அந்த வேறுபாட்டுக்காக நினைத்து ஏங்க, இவ்வாறாகத் தான் எங்கும் இருக்கும். விட்டுப் பிரிய முடியாதபடி கண்ணீர் விட்டவர்கள் தங்கள் குமாரன் குமார்த்திகளுக்கு விவாகமாய்விட்ட பின்பு தமது புது மரும

உன் பொறுமை உன் சுகவாழ்வையே அடியோடு எரிக்கும்போது, நீ எவ்வளவுதான் இன்ப வாழ்விலிருந்தும் பயனென்ன? அது ருசிநயம் தராது.

கள், மருமகன் வைபவத்தில் முந்திய அன்பினரை மறந்துவிடுகிறார்கள். சிலர் தங்களுக்கு விவாகமானதும் பழய அன்பினரை மறந்து, அவர்களை விட்டுப் பிரிய கண்ணீர்விட்ட காலத்தையெல்லாம் நினைத்துப் பாராது ஒதுங்கிவிடுகிறார்கள். இவ்விதமே விட்டுப் பிரிய மனம் துடித்த காதலியொருத்தி தான் மணக்க இருந்த கண்ணாளனை, அவன் ஏழையென்று திரஸ்கரித்து வேறொருவனுக்குத் தன்னை விவாகம் செய்து கொடுத்துவிடும்போது, எவ்விதமேனும் தனக்கு விவாகம் ஆய்விட்டதல்லவா வென்ற பூரிப்பில், தன் முன்னைய அன்பினனுக்கு அந்தரங்கத்தில் தன் கற்பையே ஸமர்ப்பித்திருந்தபோதிலும் கூட, அவனை முற்றிலும் வெறுத்து ஒதுங்கி வேறு மனமாய்ப் போய்விடுகிறாள். இங்ஙனம் மனது வேறுபட்டு அன்னியர்போலானவர்கள் தங்களின் முந்திய அன்பினர்களுக்கு—உறவினர்களுக்கு—ஏதேனும் சோதனைகள் நேர்ந்திடின் அதை அலக்ஷியமாய்ப் பாவித்து "நாய் வாழ்ந்தாலென்ன, பூனை தாலி வாங்கி என்ன" என்று வெகு கேவலமாய்ப் பேசி இகழ்கின்றார்கள்.

இவ்வண்ணமே வெகு உறவாயிருந்த நேசர்களும், பந்துக்களும், சகோதரர்களும், கூட்டு வியாபாரத்தில் கலந்து நின்றவர்களும், எதிர்வீடு பக்கத்துவீட்டுக்காரர்களும், பெண்ணைக் கொண்டும்—கொடுத்தும் கொண்ட சம்பந்திகளும் பிந்திய நாளில் பரஸ்பரம் விரோதம் ஏற்பட்டுக்கொண்ட காலத்தில், ஒருவரின் சுகதுக்கங்களில் மற்றவர்கள் அனுதாபப்படாமல், அவர்களுக்கு அப்படித்தான் வேண்டுமென்று சொல்லி, அதற்காக ஒரு சந்தோஷமும் பட்டுக்கொண்டு "நாய் வாழ்ந்தென்ன, பூனை தாலிவாங்கி என்ன" என்று அவர்களை வெகு இழிவாகப் பேசிப் பழிக்கத் தொடங்கிவிடுகின்றனர்.

தனது தந்தை ஜீவித்திருந்த காலத்தில் அவருக்கு வேண்டிய அன்பினர்கள் வீடு தேடி வந்தபோது, தனது தந்தையைவிட எவ்வளவோ அன்பும் பாசமுமாய்க் குலாவி உறவு கொண்டாடி நின்றவர்கள், அந்தத் தந்தை போன பின்பு அவரது நண்பர்களை அடியோடு வெறுத்து வேறு முகமாகிவிடுகிறார்கள். அன்னோர் பழய அன்பின் இடம் என்று வலிய வந்து நுழைந்தாலும் வாவென்பதில்லை. அப்பொழுதே அவர்கள் புறப்பட்டுப் போகும் விதமாய் நடந்துகொண்டும் விடுகிறார்கள். அந்த அன்பர்களுக்கு நேரும் கஷ்ட சுகங்களிலும் அநுதாபமற்றுப் போய், அவர்களை அன்னியராகப் பாவித்து, "நாய் வாழ்ந்தென்ன, பூனை தாலி வாங்கி என்ன" என்று இழிவாகப் பேசத் தொடங்கிவிடுகிறார்கள். இன்னும் சிலர் தங்கள் தந்தையுடன் மதிக்குறைவாய் விரோதப்பட்டுக்கொண்டு தங்களை வாழவைத்த தந்தையை விட்டுப் பிரிந்து புது இடமும் வாழ்வுமான தன் மனைவியின் தந்தை வீட்டுக்குச் சென்று குடியேறிவிட்டு, அதுமுதலாகத் தங்கள் தந்தை அன்பும் உயிருமாக நேசித்திருந்தவர்களையும் முற்றிலும் மறந்துபோய், அவர்கள் தங்களின் க்ஷேமத்தைப் பற்றி என்ன விசாரித்தாலும் அதற்குப் பதில் தாராமல் அலக்ஷியம் செய்துவிட்டு மௌனமாய் இருந்துவிடுகிறார்கள். இவ்வித மௌனத்தில், தங்கள் தந்தையாரின் அன்பர்களுக்கு என்ன நேரிட்டாலும், அதை ஒருபுறம் ஒதுக்கி "நாய் வாழ்ந்தென்ன, பூனை தாலி வாங்கி என்ன" என்று சொல்லிவிட்டு

யதார்த்தமான, மாசு மறுவற்ற, நிஷ்களங்கமான அன்பை உம்மிடத்து வைத்து விட்டபின்பு—நாம் இருவரும் ஒரு தாயின் மக்களாய் ஒருயிர்ச் சோதரமாயானபின்பு—நம்மிருவருக்குள்ளும் மரியாதைகள் இனிகிடையாது.

முற்றிலும் அன்னியர்போலாகிவிடுகிறார்கள். இதுவும் ஒருவகையான ஸ்திரப் புத்தியில்லாத ஒரு அற்ப குணத்தில் சேர்ந்ததுதான்.

இன்னும் சிலர் எல்லோருக்கும் நல்லவர்களாக நடந்துகொள்ள முயன்று, வெளிக்கு வெகு அன்பும் உறவும் கண்ணீரும் உருக்கச் சொல்லும் காட்டிவிட்டு, உள்ளுக்கோ எவ்வித பசைதானுமின்றி, அத்துடன் அவர்களை வெறுத்த மாதிரியிலும் நின்றுகொண்டு, அவர்களுக்கு நேரும் கஷ்டகாலத்தில் இரக்கப்படாமல் ஒதுங்கி "நாய் வாழ்ந்தென்ன, பூனை தாலி வாங்கி என்ன" என்று சொல்லிவிட்டு எதிலும் சம்பந்தப்படாமல் தனித்திருந்து விடுகிறார்கள். 'வந்தால் முகம் பார்க்கலாம்' என்று அனுப்புகிற தந்திக்குக்கூட, அவர்கள் வராமல் மறுதினம் தாங்கள் வருவதற்கில்லாமற் போய்விட்டதென்று ஒரு காலணு (?) கார்டு எழுதிவிடுவோராகிறார்கள்!

இவ்வண்ணமே, தான் ஒருவரை ஒரு குறித்த தொகையைக் கடனுகக்கேட்டு, அதற்கு அவர் தர மறுத்துவிட, அதன்மேல் அவர்மீது மனது வெறுத்துப் போய், பிறகு அவருக்கு நேருகிற கஷ்டசுகங்களில் எரிச்சலான மனதோடும் இருந்துகொண்டு "நாய் வாழ்ந்தென்ன, பூனை தாலி வாங்கி என்ன" என்று அலக்ஷியமாய்ப் பேசுவோராகிறார்கள். இப்படியே, கடன் தீர்க்க முடியாமல் தனக்குக் கடன் தந்தோனை ஏமாற்றப்பார்க்கும் ஒருவனும், தனக்கு முன்பு அத்தனை அவசரத்தில் உதவினனே யென்று நினைத்துப் பாராமல், கடன் தந்தவனுக்கு நேரும் அவதியைப் பார்த்து மேற்படி பழமொழியைச் சொல்லி அவனைப் பகைக்க ஆரம்பிக்கிறான். வக்கீல்களின் அடியாகிக் கோர்ட்டில் வியாஜ்ய விவகாரத்தில் நிற்போரும் தங்களின் எதிர் தரப்புக்காரர்களுக்குக் கஷ்டம் நேர்ந்த வேளையில் மேற்கண்ட பழமொழியைக் கூறிக் குதூகலிக்கிறார்கள். நட்பாயிருந்து பின் மோசம் செய்தோர்களும் இந்தப் பழமொழியை முந்திய நட்பினருக்கு உபயோகிக்கிறார்கள். மோசம்போனவர்களும் தங்களுக்கு மோசம் செய்தவர்களுக்கு இந்தப் பழமொழியை உபயோகிக்கிறார்கள். **அன்பு, காதல், சத்தியம், உத்தம குணம் இவைகள் எவர்கள்பால் குன்றி அற்ப குணம் மேலிடுகின்றதோ, அவர்கள் எல்லாம் வழக்கமாய்ச் சொல்லும் அற்பப் பழமொழியாக இது ஆகிவிடுகின்றது.**

(2) இனி, இரண்டாவது முறையில் இப்பழமொழி எங்ஙனம் உபயோகமாகிறதென்பதைக் கவனிப்போம். அற்பதன்மையினர் வாழ்ந்தாலென்ன, வயிறெரிந்தாலென்ன, அவர்கள் சுகப்பட்டாலென்ன, துக்கப்பட்டாலென்ன, அதனல் யாருக்கும் எவ்வித பயனுமில்லை. அவர்கள் சுகப்பட்ட காலத்தில் மற்றவர்களைக் கவனித்தவர்களுமல்ல, அன்பாயிருந்து ஆதரித்தவர்களுமல்ல. அப்படிப்பட்டவர்கள் கெட்டுப்போகுங் காலையிலாவது, துக்கப்பட நேருங்காலையிலாவது அதன்பொருட்டு அநுதாபப்படுவோர் எவருமிரார். அற்பர்கள் எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன, நாய் வாழ்ந்தென்ன, பூனை தாலி வாங்கி யென்ன, அதனல் நமக்காவது ஒன்றுமில்லையென்று உலகத்தார் ஒதுங்கிக்கொண்டு போய்விடுவார்கள். அவர்களின் அற்ப குணத்தைப் பல

முகஸ்துதிபேசும் "ஆமாம்" பூசாரியாக இல்லாமல் எதுவும் தெளிவாக எழுதிக் கேட்டுத் தெரிந்துகொண்டுவிடுவதே மேல்.

பேசிய வார்த்தைகள் காற்றில் பறக்கும், எழுதிய வார்த்தைகள் நின்றுலாவும்.

முறையிலும் கண்டு மனது வெறுத்துப் போனவர்கள் இப்படி ஒதுங்காமல் வேறென்ன செய்வார்கள்? நல்லதுக்கும் போகவேண்டாம், கெட்டதுக்கும் போகவேண்டாம், அவர்களின் அற்ப சகவாசமே நமக்கு வேண்டாம்—என்று தூரஇருந்து விடுகிறார்கள். ஏனெனில், அற்ப குணம் அவ்வளவு கேவலமாக இருப்பதால்தான். எவ்வளவுதான் உத்தமர்களாயும் மரியாதையுள்ள பெரியோர்களாயும் இருந்தபோதிலும்கூட அற்பர்களிடம் நெருங்குவது தங்களின் மரியாதைக்கும் மதிப்புக்கும் மானத்துக்கும் கேவலம் ஸம்பவிக்குமென அஞ்சுகிறார்களாதலின், அன்னோர் தங்களின் கௌரவத்தைக் காத்துக்கொள்வதற்காக இந்த அற்பர்களிடம் சம்பந்தப்படாமல் பிரிந்து "நாய் வாழ்ந்தாலென்ன பூனை தாலிவாங்கி என்ன" என்று அலக்ஷியமாய் இருந்துவிடுகிறார்கள். இவ்விதம் அற்ப குணத்தை வெறுத்தவகையிலும் இந்தப் பழமொழி உபயோகமாகிறது. அற்பர்களின் வாழ்வு ஒரு வாழ்வல்ல என்பது இப்பழமொழியின் கருத்து. அந்த அற்பர்கள் வாழ்வதிலிருந்தும் மற்றவர்களுக்கு எவ்வித நலமுமில்லை யென்பது இன்னொரு கருத்தாகும். (தொடரும்.)

உங்கள் கடையை உங்களின் வழக்கக்காரர்களின் கடையென்று நினையுங்கள்.

வழக்கமாக வாங்க வருபவன் அந்தக் கடையைத் தனது சொந்தக் கடையாக நினைத்துவிடுகிறான். அதன் காரணமாக அவன் ஒரு உரிமை வைத்து, அந்த சரக்கு நல்ல சரக்கல்ல, வேறு சரக்கு கொடு என்று கேட்கும்போது, கடைக்காரரும் அவன் விருப்பத்தின்படி அன்பாய் நடந்துகொள்ளவேண்டியதுதான். அவன் தனது சொந்தக் கடை என்று எண்ணுவதை அவ்விதமே என்றைக்கும் அவன் நினைக்கும்வாறு அந்தக் கடை வியாபாரி நடந்துகொள்வதே வர்த்தக யுக்தியாம். அந்த சொந்தத்திலே அவன் தரவேண்டிய பாக்கிக் கடனை சற்று தாமதமானாலும், கடைக்காரர் கோபித்துக்கொள்ளார் என்று எண்ணிவிட்டு, பிறகு தன் கைக்குப் பணம் வந்ததும் கொண்டுபோய்க் கொடுக்கிறான். அந்த சொந்த உரிமையில் பாக்கிக்காரரும் யோக்கியராக இருந்தால், கடைக்காரரும் விட்டுக்கொடுத்துக் கொஞ்சம் பொறுத்துக்கொள்ள வேண்டியதுதான். இப்படியே சொந்தக் கடை, தெரிந்த கடை யென்று ரூபாய்க்கும் நோட்டுக்கும் சில்லரைகேட்க வருகிறவர்களுக்கும் கடையில் சில்லரை யிருந்தால் தந்தனுப்பவேண்டியதுதான். வாடிக்கைக்காரர் தன் வீட்டு விவகாரத்தைச் சொல்லவந்தால், அதையும் கடைக்காரர் பிரீதியுடன்கேட்டு ஆறுதலும் சமாதானமுமான பதில் சொல்லவேண்டியதுதான். கடையில் வியாபாரம் பெருகவும் ஓங்கவும் இவை யெல்லாம் வழிகளாம்.



பிரபஞ்ச நவீனங்கள்

1. **நோட்டுகளில் கிருமிகள் :—** சாதாரணமாய் நாம் உபயோகப்படுத்தும் எல்லா வஸ்துக்களைவிட, காகித நாணயங்களாகிய நோட்டுகளால்தான் தொத்துவியாதி பரவுகின்றனவாம். உலோகங்களால் செய்யப்பட்ட நாணயங்களில் உலோகங்கள் இருப்பதாலும் வழவழவென்று அந்நாணயங்கள் இருப்பதாலும் அவைகளில் கிருமிகள் ஒட்டுவதில்லையாம். **நோட்டுகளில் ஒரு லக்ஷத்து நாற்பத்துழவாயிரம் பாக்டீரிய கிருமிகள் இருப்பதாக** சிறந்த ரஸாயன நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆகையால் புதிய காகித நோட்டைவிடத் தேய்ந்துபோன நாணயங்கள் மேலானதாகக் கருதப்படுகிறது.

2. **மணற்சாலை :—** அமெரிகாவில் சிகாகோ என்னும் நகரில் லூயிஇன்ஸ்டிடுட் என்னும் சங்கத்தில் மணல் சாலை ஒன்று இருக்கிறதாம். சென்ற பத்து வருஷங்களாக வெவ்வேறு தேசங்களிலிருந்து வெவ்வேறு மணல்களைக் கொண்டுவந்து சற்றேறக்குறைய மூவாயிரத்தைந்நூறு குப்பிகளில் வைத்து இருக்கிறார்களாம். விமிண்டு, சுண்ணாம்பு இவைகளை ரஸாயன ஆராய்ச்சிசெய்ய ஆரம்பித்ததிலிருந்து இவ்வளவு விதமான மண்களைச் சேர்த்து அவைகளின் அம்சம், அகப்படும் இடம், குணங்கள், உபயோகம் முதலியவைகளைத் திரட்டி ஏற்பாடு செய்திருக்கிறார்களாம்.

3. **ஈக்களை ஓட்ட :—** அமெரிகாவில் போஸ்டன் என்னும் பட்டணத்தில் மாமிசம் மீன் இவைகளை விற்கும் மார்கட்டுகளில் ஈக்கள் அணுகாதபடி வாசற் கதவுகளின் மேல்பாகத்திலும் கீழ்பக்கங்களிலும் மறைவாக பல முள்ள மின்சார விசிறிகளை வைத்து அவைகள் சுழலுவதினால் ஏற்பட்ட காற்றினால் ஈக்கள் மார்கட்டிற்குள் நுழையாமல் தடுக்கப்படுகின்றனவாம்.

4. **பச்சோந்தி நிறம் மாறுதிருக்க :—** அடிக்கடி தன் நிறத்தை மாற்றிக் கொள்ளும் தன்மையையுடைய பச்சை ஓந்தியின் கண்களைக் கட்டி விட்டால் மாறுகிற தன்மையை உபயோகிக்க முடியாமல் ஒரே நிறத்துடன் இருக்குமாம்.

5. **பிச்சைப் பத்திரிகை :—** பிராஞ்சு தேசத்தில் பாரீஸ் நகரத்தில் ஒரு விநோதமான பத்திரிகை பிரசுரிக்கப்படுகிறதாம். அவ்வூரிலுள்ள பிச்சைக்காரர்களுக்கும் யாசகர்களுக்கும் மாத்திரம் உபயோகப்படுகிறதாம். அந்நகரில் தினந்தோறும் ஏற்படும் கல்யாணங்கள், ஞானஸ்நானங்கள், பண்டிகைகள், திருவிழாக்கள், உத்திரக்கிரியைகள் இவைகளெல்லாம் பிரசுரிக்கப்படுகின்றனவாம். இதைத் தவிர பிச்சை எடுக்கும் விதங்களில் நூதன ஆராய்ச்சி முறைகளையும், அந்நகரத்திற்குள் தினம் தினம் வரும் பிரயாணிகளுள், தர்மிஷ்டர்கள் யார், லோபிகள் யார் என்று பிரித்துக் காண்பிவிப்பதையும், பிச்சைக்காரக் கூட்டுறவு சங்கத்தின் வரவு செலவு கணக்குகளையும் அப்பத்திரிகையில் காணலாமாம்.

குடியன் சொத்து சேர்த்து வாழ்ந்தது அபூர்வம், பகட்டாயுள்ள சொத்துக்களும் பலவிதமான கடனுக்குள் தூங்கிக்கொண்டு இருக்கும்.

6. மூளையின் வேலை :—ஒரு மனிதனுடைய மூளை முழுவதும் ஒரே சமயத்தில் வேலைசெய்யாமல் இரண்டு பாகமாய் மாறிமாறி வேலைசெய்யுமாம்.

7. மாணச்சின்ன உடை:—பந்துக்கள் யாராவது காலஞ்சென்றால் பொக்காரா தேசத்து ஜனங்கள் சுத்த நீல உடையை யணிவார்களாம். பர்ஷியா தேசத்தில் மங்கலான பழுப்பு வர்ணமுள்ள உடை தரிப்பார்களாம். சீன தேசத்தில் வெண்மையுடையை யணிவார்களாம். ஐரோப்பாகண்டம் முழுவதும் கறுப்பு உடையையும், எகிப்து தேசத்திலும் பர்மாவிலும் மஞ்சளுடையையும், துருக்கியில் வயலெட் ஊதாவையும் அணிவார்களாம்.

8. பாசிக் கோடிகள் :—சில பாசிக்கொடிகள் அறுநூறு அடி நீளமிருக்குமாம்.

9. தேயிலை :—இங்கிலாந்தில் ஒரு நாளைக்கு ஆறுலக்ஷம் பவுண்டு நிறையுள்ள தேயிலை செலவாகிறதாம்.

10. லண்டன் நகருக்கு வருவோர் :—ஒவ்வொரு நாளும் லண்டன் பட்டணத்தில் வேலைசெய்து சம்பாதிக்க, ஐந்து மைல்களுக்குள் இருக்கும் சுற்றுப் பக்கங்களிலிருந்து மூன்றுலக்ஷம் ஜனங்கள் காலையில் லண்டனிற்குள் வந்து திரும்பி சாயந்திரம் தங்கள் ஊர்களுக்குச் செல்கிறார்களாம்.

11. ஹிந்துக்களின் சில விநோத ஆசாரங்கள் :—யாராவது கொட்டாவி விட்டால் வாய்க்கு நேராக ஒரு தரம் விரல்களைக் கொடுக்கிறார்கள். தன்னை விசிறிக்கொள்ளும்பொழுது விசிறி தன்மீது பட்டால் உடனே பூமியில் விசிறியை மூன்று தரம் தட்டுகிறார்கள். பல்லி சப்தத்தைக் கேட்டவுடன் அநேகர் பூமியில் விரல்நுனிகளால் தட்டுகிறார்கள். ஒரு நல்ல பாம்பை அடித்துக் கொன்றால் தூர எறிந்துவிடாமல் சுட்டுக் கொளுத்துகிறார்கள். இராவேளையில் சிட்டியடிக்கக்கூடாதாம். நமஸ்காரம் செய்யும் பொழுது வாசற்படிக்கு அப்புறம் ஒருவரும் இப்புறம் ஒருவருமாக இருக்கக்கூடாதாம். தெற்கு வடக்கு பக்கமாய்ப் பார்த்து நமஸ்காரம் செய்யக்கூடாதாம். இரவில் தனியாகச் செல்லும் காலத்தில் கைகளைத் தட்டிக்கொண்டு சென்றால் பேய் பிசாசுகள் அருகில் அண்டாவாம். உள்ளங்காலில் அரிப்பு உண்டானால் ஊர் பிரயாணமாம். உள்ளங் கையில் அரிப்பு உண்டானால் தன லாபமாம்.

12. புஷ்பங்களில் மோஹம்:—உலகத்தில் எங்கு பார்த்தாலும் ஜனங்கள் புஷ்பங்களில் அதிக ப்ரீதியுள்ளவர்களாய் இருக்கிறார்கள். கிரீஸ், இதாலி தேசங்களில் ஊர்கோலங்களெல்லாம் புஷ்பமாயிருக்குமாம். இங்கிலாந்தில் அஸ்ஸென்ஷன் தினத்தன்று வீட்டுச் சுவரெல்லாம் புஷ்பாலங்காரம் செய்வார்களாம். வேய்மவுத் என்னும் ஊரில் வருஷா வருஷம் மே மாதம் முதல்தேதியன்று சமுத்திரத்தில் புஷ்பங்களை ஏராளமாகக் கொட்டுவார்களாம். மெக்ஸிகோ தேசத்திலும் இந்தியாவிலும் கோவில்களுக்கு என்று பிரத்தியேகமான நந்தவனங்களும் புஷ்பத் தோட்டங்களும் உண்டு. இலங்கையில் புத்தரின் பல் வைத்துள்ள கோவிலில் ஒரு அரசன் ஆறரை லக்ஷம் புஷ்பங்களால் அர்ச்சனை செய்தான் என்று நாம் சரித்திரத்தில் வாசித்திருக்கிறோம். ஆனால், நம்முடைய வைதீகர்களுக்கும்

கடிதங்களைச் சேர்த்து வைப்பவர் விவகார ஞானியாய் விடின் அத்தகையோருக்கு நாம் விஸ்தாரக் கடிதம் வரைதற்குப் பயப்பட வேண்டும்.

பஞ்சாங்கக்காரர்களுக்கும், புஷ்பங்களைவிட அன்றைய செலவுக்கு உதவக்கூடிய **ஸ்வர்ண புஷ்பங்களில்** தான் பிரியமதிகமாம்!

13. **காகித உற்பத்தி :**—கி. பி. பதின்மூன்றாவது நூற்றாண்டில்தான் மூர் ஜாதியாரால் சணலிலிருந்து காகிதம் செய்யப்பட்டதாம். அதற்கு முன்னாட்களி லெல்லாம் பருத்தியிலிருந்துதான் செய்தார்களாம்.

14. **சில நமஸ்கார வழிகள்:**— ஹிந்துக்கள் பெரியவர்களைக் கண்டால் சாஷ்டாங்கமாய் பூமியில் விழுகிறார்கள். சீனர்கள் எழுந்து நிற்பார்கள். ஜப்பானியர்கள் தங்கள் செருப்புகளைக் கழற்றிவிட்டுக் கைகளை கட்டிக்கொண்டு எங்களைக் காப்பாற்றுங்கள் என்பார்கள். பர்மா தேசத்தவர்கள் முகத்தை முகர்ந்து பார்த்துவிட்டு வாசனை நன்றாயிருக்கிறது என்பார்கள். தெற்கு ஸமுத்திரத் தீவுகளிலிருப்பவர்கள் தலையில் குடம் ஜலம் கொட்டுவார்கள். முகம்மதியர்கள் குனிந்து கையால் பாதத்தைத் தொட்டு ஆதாம் என்பார்கள். கிறிஸ்தவர்கள் மட்டிக்கால்போட்டுக்கொண்டு கைகளைக் கூப்பி தலையைக் குனிவார்கள். அரபியர்கள் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி முத்தமிடுவார்கள்.

15. **ஒரு விநோத விருக்ஷம்**—ஆஸ்ட்ரேலியா கண்டத்தில் க்வீன்ஸ்லண்டு தேசத்தில் "கொட்டும் மரம்" என்று ஒரு விநோத மரம் இருக்கிறதாம். அது சுமார் பதினைந்து அடி உயரமும் செழிப்பாயும் பார்க்கிறதற்கு ரம்யமாயும் இருக்குமாம். அம்மரத்திலிருந்து கிளம்பும் வாஸனை மிக துர்கந்தமாம். அம்மரத்தின் இலையாவது கிளையாவது ஒருவர்மீது பட்டாலே போதுமாம். தேஹத்தில் ஒரு அடையாளங்கள் இல்லாமல் செய்தாலும் அது பட்ட இடத்தில் ஒரே அரிப்பும் வலியும் ஜாஸ்தியா யிருக்குமாம். அநேக மாதங்கள் வரையில் நீங்காதாம். அவ்விடங்களில் ஜலமாவது ஈரமாவது பட்டால் அதிக எரிச்சலுண்டாகுமாம். அம்மரத்தின் விசேஷத்தை யறியாத குதிரைகளும் நாய்களும் மாடுகளும் ஆடுகளும் படுகின்ற அவஸ்தைகளைச் சொல்லிமுடியாதாம்.

16. **மரவேலைக்கு உதவும் மரம் :**—ஒரு மலையின் தென் பாரிசத்தில் வளருகிற மரங்களைவிட, வடபாரிசத்தில் வளரும் மரங்களின் மரம் மிகவும் கெட்டியாய் மரவேலைக்கு மிகவும் உபயோகமா யிருக்குமாம்.

17. ஒவ்வொரு சதுர அடியுள்ள தேன் கூட்டில் ஒன்பதினாயிரம் சிறு அறைகள் இருக்குமாம்!

S. A. ஸ்ரீநிவாஸ சர்மா.

> அவர் நல்லவர் தான்; அதனால் அவர் உனக்கு எழுதிக்கொடுத்த ஆதாரம் அவர் இருக்குந்தனையும் தேவையில்லைதான். ஆனால், அவருக்குப் பின்னரோ, நம்முடன் இன்று உறவாடும் அவரைச் சேர்ந்த யாவரும் அன்னியராகிவிடலாம். அந்த காலத்தில் அவர் ஆதாரம் வேண்டியிருக்கும். அதற்காகவே இப்போது அவரிடம் எழுத்தில் ஆதரவு பத்திரம் பெறுவது. மற்றபடி அவரிடம் அவநம்பிக்கைப் பட்டல்ல.

மார்கழியின் மாண்பு.

பன்னிரு மாதங்களில் மார்கழி செய்த மாதவத்தின் மாண்பை யென்னென்று கூறுவது? இந்துக்களின் ஒவ்வொரு மாதமும், ஏன்; ஒவ்வொரு நாளும் ஓர் விசேடத்தைக் கொண்டுளது என்ருலும், மார்கழி மாதத்தில் மக்கள்; அவர்களுள்ளும் உலகம் என்றும் அழியாது நிலைபெறுதற்கு ஏதுவாக விளங்கும் பெண் தெய்வங்கள் காட்டும் குதூகலம், சுறுசுறுப்பு, இல்லங்களை ஒழுங்குபட வைத்திருக்கும் நேர்மை முதலியவற்றை நோக்கின் மற்ற மாதங்களினும் மார்கழி மாதத்தின் மாட்சி இனிது புலனுகும். வைகறையில் துயிலெழுந்து, வழிபடு கடவுளை மனத்தால் வணங்கி, பொற்சுடல் திருவிளக்கை யேற்றி, முற்றத்தைக் "கோமயத்"தால் மெழுகிக் கோலம் இட்டு மலர்சூட்டி; குளங்களிலோ ஆறுகளிலோ சென்று நீராடித் துகில் உடுத்தி, மதிமுகத்திற் குங்குமம் அணிந்து, காலையிளங் கதிரவனின் தண்ணுெளியால் மின்னலென ஒளிவீசும் நீர் நிறைந்த பொற்குடத்தை இடுப்பிற் சுமந்து; மயில்போன்ற சாயலினையும், மான் போன்ற நோக்கினையும், குயில் போன்ற குரலினையும் உடைய பெண்மணிகளாம், அழகுத் தெய்வங்கள் வரிசை வரிசையாக வருங்காட்சியை எம்மொழியாற் கூறுவேன்? எவ்வாற்ருல் விரித்துரைப்பேன்?

ஆண்டானிடத்து அன்புமிக்கு பக்திப் பெருங்காதலில் திளைத்து விளையாடிய நந்தனர், தன் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட பொன்னம்பல நாதனைக் கண்குளிரக் கண்டு கதிபெறவிரும்பிய அப்பெரியார் தன்னை அடிமை கொண்ட வேதியரிடத்து, "திருவாதிரைநாள் சமீபித்துவிட்டது; தில்லைச் சிற்றம்பலம் தெரிசித்துவர விடைதந்தருளல் வேண்டும்" என வேண்டியது எந்த மாதத்துத் திருவாதிரை? மார்கழி மாதத்தன்ருே? மார்கழி மாதத்துத் திருவாதிரையன்று தில்லைநகர் சென்று பொன்னம்பலத்தின் காட்சியைக் காண்பார்க்கு மார்கழி மாதத்தின் மாட்சி நன்கு புலப்படும். அம்மட்டோ? அவ்வம்பலத்தைக் கண்ட கண்கொண்டே அருமறை முதல்வன் அரவணை மீது அறிதுயில் அமர்ந்தருளியிருக்கும் அரங்கத்தை நோக்குங்கள்! நம் நாட்டுத் தேவாலயங்கள் ஒன்றினுங் கண்டிராத அவ்வளவு பெரிய கொட்டகை அழகுமிக அமைக்கப்பட்டு, அதனுள் என்னையாளுடைய ஐயன் எழுந்தருளுங் காட்சியைக் காண்பீர்கள்! இக்காட்சி மார்கழி ஒன்றிற்கே உரியது.

இவற்றை யெல்லாம் விட ஒரு ஒப்பற்ற மேன்மையைப் பெற்றுளது இம்மாதம். அஃது பூமிதேவியின் அம்சமான சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாம் எனதன்னை ஆண்டாள் அம்மையார் மெய்யுணர்வு பெற்று உய்ய வழி கோலியது. அவ்வம்மையார் அருளிய "திருப்பாவை" யென்னும் திவ்யப் பிரபந்தத்தில் முதற்பாவின் முதல் அடியின் முதல் மொழியாய் எடுத்தாளப் பெற்ற ஒப்பற்ற உயர்வினையுடையது "மார்கழி" யென்னும் இந்நான்கெழுத்துக்கள். அத்திருப்பாவையின் முதற்பாவை விளக்கிக்கூறி இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேற் கொடுந் தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்."

செல்வப் பெருக்கையுடைய திருவாய்ப்பாடியிலே (ஓர் இடைப்பெண் மற்ற மங்கையரைப் பார்த்துக் கூறுகிறாள்.)—திருந்திய அணிகலங்களையும், நிறைந்த செல்வத்தையுமுடைய பெண்களே! மார்கழி மாதத்து முழுமதி விளங்கும் இந்நன்னாளிலே யமுனையாற்றிலே நீராட (கண்ணன் கூட்டுறவைப் பெற)ச் செல்பவர்களே! (உம்மோடு யானும் வருகின்றேன்;) போவோம் வாருங்கள்; தனக்குப் பகையாயினருக்குக் கொடுந்தொழிலைப் புரியும் கூரிய முனை பொருந்திய வேலினையுடைய நந்தகோபனுடைய குமரன்; அழகு வாய்ந்த கண்களையுடைய யசோதைப் பிராட்டியின் இளஞ் சிங்கம்போன்ற குழந்தை; கார்முகில்போன்ற திருமேனியும்; தாமரைபோன்ற கண்களும், ஞாயிறும் திங்களும் போன்ற ஒளியும் அளியும் (அளி-கிருபை, குளிர்ச்சி.) பொருந்திய முகமும் உடைய இந்தக் கண்ணனே (அவன்பால் நீங்காக் காதல் பூண்டுள்ள) நமக்கு நாம் விரும்பிய அனைத்தையும் தந்தருளுவான். ஆதலின் உலகத்தார் புகழ்ந்தேத்தும்படி இந் நோன்பில் மிகப்பொருந்தி முயல, இவ் வொப்பற்ற நோன்பு நன்கு முடிவெய்தும்.

அந்த நோன்பு வருமாறு:—

கூதிர்காலத்துத் தொடக்கத்தில், முழுக்கலாமதி (பூர்ணசந்திரன்) தனது தண்ணெனுங் கதிர்களைப் பால் நுரைபோல் மண்ணிலெங்கும் வீசிய ஓர் பௌர்ணமியன்று, அலைவீசும் மணல் பரந்த யமுனையாற்றங் கரையிலே, மஞ்சாய் (மேகம்போல்) ஒளிருந்திருமேனி மழலைப் பசுஞ்சொல் மறைக் கொழுந்து, அஞ்சொற்கனிவாய் யசோதை மகிழ அவதரித்தருளிய கண்ணபிரான் கல்லும் உருகக், கல்லாதார் கடிய மனமுங் கரைந்துருக வேய்ங்குழல் (புல்லாங்குழல்) ஊதிநின்றான். அக்குழல் இசையாம் அமுத மாரி ஆய்ச்சியர்தம் அஞ்செவியில் தவழ்ந்த மாத்திரத்தில், தம் நினை வழிந்து தடுமாறும் உளத்தோடு, தடமுலையின் பெருஞ்சுமையால் இடை நோவக், குழல் (கூந்தல்) சோர, காலணிகள் மேலினி நாம் "ஆற்றோம் ஆற்றோம்" என ஒலிப்ப ஓடிப் பசும்புயல் வண்ணத் தண்ணலைக் கிட்டித் தரிசித்தனர். அங்ஙனம் இளமயில் இனம்போல் வந்து எய்திய அப்பெண்ணின்நல்லார்களைக் கார்முகில்வண்ணன் பார்த்து, "உங்கள் கணவன்மார் அறியாது அவர்களைத் தனியே விடுத்துப் பிரிந்து வந்த செய்கை ஒழுங்காமோ?" என வினவினன். அதற்கவர்கள் கண்களில் முத்துமுத்தாய் நீர் துளிப்ப வருந்தி, "ஐய! நாங்கள் நின்னை யடைந்தது, நல்லறங்கேட்டு மேலாம் உயர்நிலை பெறுதற்காகவே. ஆதலின் இதில் தவறு யாதுளது?" எனச் சிறிது சிறிதாகப் பேச்சை

வளர்த்து, "பாற்கடல் துறந்து எங்கள் பவத்தொடர்பு அறுக்கவந்த கண்ணா! ஏழையாம் பெண்களென்று எண்ணாது மன்மதனும், வில் வளைத்து மலர் அம்பை விடுக்கின்றான் எம்நெஞ்சில்; வெண்ணிலவும் செந்தீயை வீசுகின்றது எம்மீது. இதுபொழுது அடியோமை ஒதுக்கி விடாது ஏற்றருளும்" என்று வேண்டிநின்றார். அண்ணலும் அவர்கள் எண்ணம் முற்றுவித்து ஆண்டுகொண்டான். ஒவ்வொரு மாதரார்க்கும் தனித்தனி ஒருவனாகி நின்று கைகோத்து ஆடினான். அவ்வளவில் அன்னாரைவிட்டு மின்னென மறைந்தான். இனி அப்பெண்களின் நிலைமையையும், பிரிவாற்றாமையையும் பேசவும் வேண்டுமோ?

"பட்ட மரம் தளிர் தளிர்ப்பப் பண்ணாருங் குழல் இசைத்த
கட்டழகன் சென்ற இடம் காணீரோ? காணீரோ?"

என அங்கிருந்த மரம் செடி கொடிகளை யெல்லாம் வினவினராய் மனம் வருந்தி வீடு சேர்ந்தனர். இங்ஙனம் வருந்திய மனத்தராய ஆயர் மங்கையர் அனைவரும் கார்வண்ணன் திருவுருவைக் கனவிலும் நனவிலும் கருத்துட்கொண்டு; மார்கழி மாதத்தில் நாள்தோறும் வைகறையில் துயில் எழுந்து ஒருவர் கையை ஒருவர் பற்றியவராய்க் கண்ணபிரான் திருப்புகழைக் கனிந்த இசையோடு பாடிக்கொண்டு, காளிந்தி நதிசென்று நீராடி, மணலினால் "காத்யாயனீ" தேவி உருவை நியமித்து மலர்தூவி வணங்கிக் கண்ணபிரானையே தங்கட்குக் கணவனைத் தரவேண்டுமென்று குறையிரந்து நின்றார்கள். இவ்வாறு அம்மாதம் முழுவதும் அவ்வண்ணலைக் கணப்பொழுதும் மறவாது போற்றிவந்த அவ் ஆயர் குலக் கட்டழகியர் கண்ணும் மனமும் குளிரக் கண்ணபிரான் முன்வந்து தோன்றி, "எனக்கு அடிமை செய்ய ஆவலுற்று நோன்பு நோற்ற உங்கள் கருத்திற்கு இசைந்தேன்; உகந்தேன்" என அருளி அவர்களை யேற்றுக்கொண்டான்.

சில வருடமாக, புதுமுறையில் ஆராய்ச்சி புரிந்துவரும் சகோதரர்கட்கு ஓர் சிறுவார்த்தை:—"என்னே! அநியாயம்! பிறருடைய மனைவியரை இன்பம் நுகர்ந்த இவனோ பரம்பொருள்?" என்று எள்ளி நகையாடுவாரை நோக்கி ஆரியப்புலவர், "உண்மைதான்; இறைவனே அங்ஙனம் நடந்தால் அவனைப் பின்பற்றுபவரும் அம்முறையே சென்று விடுவர் எனக் கூறின், இறைவன் விடம் உண்டானென்று எத்தனைபேர் விடம் உண்டார்?" என வினவுகின்றார். ஆயர் மங்கையர் யாவரென்பதும், அவர்களை மருவிவாழ்ந்த தத்துவமும் அறிஞரிடத்தே கேட்டுணர்க.

மேற்கூறிய நோன்பைத்தான் எனதன்னை சூடிக்கொடுத்த சுடர்க் கொடியாள் வில்லிபுத்தூரையே ஆய்ப்பாடியாகவும், அங்குள்ள மங்கையரை ஆயர் சிறுமியராகவுங் கொண்டு குரவைக் கூத்தாடி, நோன்பு இயற்றிக் கண்ணன் திருவுருவைக் கண்டு மகிழ்ந்து அரங்கத்தம்மான் அன்பினுக்கு உரிமையானாள்.

அந்த நோன்பைத் தன்னுட்கொண்டு விளங்குவதுதான் இம்மார்கழி

ஆ! மார்கழியே! நின்னுடைய மாண்பென்னே! மாண்பென்னே!

பெ. இராமாநுஜ ரெட்டியார்.





“நீதி பெரிதா, அநுபவம் பெரிதா” என்றொரு கேள்வியை இன்று கூடிய நமது கடையில் புட்டரிசிப் பிள்ளை கேட்டார். “நீதி புஸ்தகத்துள் ‘கம்’ மென்று உட்கார்ந்து கொண்டிருக்கும். அநுபவமோ உலகம் சுற்றிவந்து அனைத்தையும் அளந்து வாரிக்கொண்டுவந்து கொட்டி நறுமணம் கமழ வைக்கும்; மனத்திலும் நன்றாகப் பதியும். நீதியின்வழியே சென்று தெரிவிக்கிற நான்கு பக்கத்துச் சங்கதியை அநுபவம் கால் பக்கத்திலேயே வெகு சுலபத்தில் விளக்கிவிடும்; கேட்பவர்களுக்கு அது ஒரு ருசிகரமாகவும் படும்படி செய்யும். நீதியைப் பள்ளிக்கூடத்தில் வெகு சுலபமாய்ப் படித்துவிடலாம்; அநுபவத்தையோ தான் பட்டும், உலகில் பழகியுமே படித்தறிய வேண்டும். நீதியையே தெரிவிக்கும் ஒரு புஸ்தகமும், அநுபவத்தையே போதிக்கும் ஒரு நூலும் இருந்தால், அநுபவமணியான நூலையே யாவரும் மதிப்புடன் ஏற்பர். நீதி பல புத்திமதிகளை மட்டும் சொல்லும்; அநுபவமோ கூடவே துணைக்குவந்து வழிகாட்டும். நீதி ஒரு பூகோளப் படத்தில் ஒரு ஊரைப்பற்றித் தெரிந்துகொள்வதைப் போன்றது; அநுபவமோ அந்த ஊருக்கே நேரில் சென்று யாவும் சுற்றிப் பார்த்தறிந்து கொள்வதைப் போன்றது. நீதி எட்டில் இருக்கும் சுரைக்காய்; அநுபவமோ அன்றைக்கே சமைத்துண்ணும் சுரைக்காய். நீதி ஒருவரைப் படத்தில் பார்ப்பது போன்றது; அநுபவமோ அவரையே நேரிற் பார்ப்பது போன்றது. ஒரு நீதிப் பிரசங்கத்தையும், ஒரு அனுபவ உபன்யாஸத்தையும் ஒத்திட்டுப் பார்ப்பின், அனுபவ உபன்யாஸமே சாலச் சிறப்புடையதாய் மதிப்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்; நீதியோ விவாகத்துக்கு முன்னே ஒரு நங்கையைக் குறித்துப் பல இன்ப நினைவுகளும் கனவுகளும் கொள்வதைப்போன்றது; அனுபவமோ அந்த நங்கையை மணமுடித்துக் காம்பரிந்த மலர் மஞ்சத்தின்மேல் அவளுடன் ஸல்லாபிப்பது போன்றது. நீதி ஒரு நாடக நோட்டீஸைப் போன்றது; அநுபவமோ அந்த நாடகத்திற்கே நேரிற்சென்று காண்பது போன்றது. நீதி மலடிக்குச் சமம்; அநுபவமோ தன் குழந்தைகளுடன் கொஞ்சி நிற்கும் புத்திரவதிக்குச் சமம். நீதிக்குள் அநுபவம் ஒரு துளியும் சேராது; அநுபவத்துள்ளோ பல நீதிகள் தானே வந்து புகுந்துகொண்டு உறவாடும். எனவே, நீதியினும் அநுபவமே மாண்புடைத்தாம். நீதி எழுதுவதும் போதிப்பதும் சுலபம்; அநுபவம் வரைவதோ மகா பிரயாசையானபாடு. அது ஒரு சிலருக்கேதான் வரும். நீதியைப் போதிக்கும் பல பத்திரிகைகளைச் சுலபத்தில் நடத்திவிடலாம்; ஆனால், அநுபவங்களையே வாரிக் கொட்டி நின்ற **“மஹா விகடதூதன்”**

உபய க்ஷேமம் என்று கடிதத்தில் வழக்கமாய் எழுதுவதைத் தவிர உண்மையில் அப்படியில்லை. எங்காவது ஓரிடம் பிணியுற்றிருப்பது முண்டு.

போன்ற அனுபவப் பத்திரிகைகளை நடத்துவது எளிதில் ஆகக்கூடிய தல்ல"—என்று தாண்டவக்கோன் ஒரு விஸ்தாரப் பிரசங்கம் செய்தார்.

***

அன்பர் அல்லா பிச்சை நீதியிலும் அநுபவம் சிறந்தது என்பதை விளக்க ஒரு உதாரணம் கூறினர். "ஒரு ஊரில் இரண்டு நூலாசிரியர்களாம். நீதியைப் போதிக்கும் ஒருவர் சிறுவர்களுக்கென்று வரைந்த நூலில் அதிகாலை மூன்றுமணிக்கே எழுந்து பாடங்களைப் படிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தாராம். அநுபவங்களையே போதிக்கும் மற்றொரு ஆசிரியர் அதிகாலையில் ஐந்துமணிக்கு எழுந்து பாடங்களைப் படிப்பது அறிவைப்பெருக்கும் என்று தமது நூலில் தெரிவித்திருந்தாராம். இரண்டையும் நோக்கிய தாம் நீதிநூலின் ஆசிரியரிடம் சென்று 'மூன்று மணிக்கே எழுந்து படிக்கவேண்டு மென்பானேன்' என்று வினவ, 'அப்பொழுது தான் அதிகநேரம் வாசிக்கலாம்' என்று அவர் பதில் கூறினராம். பிறகு அநுபவ ஆசிரியரிடம் திரும்பி வந்து 'மூன்றுமணியை விட்டு ஐந்துமணி யென்று நீங்கள் குறிப்பானேன்' என்று வினவ, அதற்கு அவர், 'சிறு குழந்தைகள் செவ்வனே நித்திரை செய்தால்தான் ஆரோக்ய ஸம்பன்னரா யிருப்பர்; அவர்களை மூன்று மணிக்கு எழுப்பி வாசிக்கச் செய்வது கொடுமை; அவ்விதம் வாசிப்பினும் நான்கு, ஐந்து மணிக்கு அவர்கள் புத்தகமும் கையுமாய்த் தூங்கி எழுமணிக்கே எழுந்திருப்பர்; ஆதலின் அவர்களின் அதிபால்யத்தை நோக்கி ஐந்துமணிக்கு எழுந்தால் பிறகு நித்திரை செய்யாமல் வாசித்துத் தேறுவது சுலபம். பின்னுக்கு இந்தப் பயிற்சி அவர்களுக்குத் தக்க வயது வருங்கால நான்கு மணிக்கும், மூன்று மணிக்குங்கூட அவர்களை எழுந்திருக்க வைத்துவிடும்; ஆனதால், அவர்களுக்கு இப்போது சிரமமின்றி இருக்க ஐந்து மணிக்கு எழுந்து படிப்பது நலம் என்று குறிப்பிட்டேன்; மூன்று மணிக்கு எழுந்திருக்கச் சொல்வது நீதி, அது ஏட்டிலேயேதான் கிடக்கும், வழக்கத்துக்கு வாராது; ஐந்துமணிக்கு எழுந்திருக்கும்படி நான் சொல்வதோ அநுபவித்தறிந்ததாம். அதைப் பலரும் பின்பற்றுதல் சுலபம் என்றாராம். எனவே, நீதிச் சொல்லினும் அநுபவச் சொல்லே உயர்ந்தது. நீதியைப் போதிப்பவரோ அந்த நீதியின்வழியே பிறர் நடக்க இயலுமா வென்பதில் அவரே சந்தேகப்படுபவரா யிருக்கலாம். அநுபவத்தைப் போதிப்பவரோ ஏற்கெனவே நடந்து, கண்டு, பட்டிருப்பதையே கூறுவதால், அவர் தெரிவிக்கும் அநுபவ நுட்பத்தைப் பின்பற்றி நடத்தல் எளிதும் சுலபமுமாயிருக்கும்"—என்று அல்லாபிச்சை அநுபவத்தை ஆதரித்துப் பேசினர்."

"நீதியைத் தெரிவிக்கும் நூல்களும் பத்திரிகைகளும் எத்தனையோ கணக்கிலடங்காதனவாக இருக்கும்; அநுபவங்களையே புகட்டித் திருத்தும் பத்திரிகைகளையும் நூல்களையும் இன்னின்னவெனச் சிறுவிரல்விட்டு எளிதில் எண்ணிவிடலாம்" என்று நொங்குச் செட்டியார் தமது பேச்சுகளைக் கொட்டினர்.

***

சென்ற முறை நமது கடைக்கு வந்த வங்காளப் பத்திராசிரியர் இன்றும் வந்திருந்தார். அவர் 'பொறுமை'

'சிறு துயரம் ஒரு நாள் படுவார் ஞாலமீது. என்றுமே அஃதாயின் இன்பம் நுகர்கை எஞ்ஞான்றே?' என்கிறர் ஒரு பிரபல ஆசிரியர்.

யைப்பற்றிப் பேசினர். "என்னை உடனே புறப்பட்டு வரும்படி கல்கத்தாவிலிருந்து ஒரு நண்பர் தந்தியனுப்பினர். தந்திக்கே ஒரு தனி தீவிரமும் சுறுசுறுப்பும் உண்டல்லவா. அன்றே பிரயாணமாகி மறுதினம் காலையில் கல்கத்தா சேர்ந்து நண்பரின் வீட்டுக்குச் சென்றேன். அதற்குள் அந்த நண்பர் இன்னொரு ஊருக்குப் போய்விட்டதாய் வீட்டிலுள்ளவர்கள் சொல்லினர். எவ்வளவு வேலைகளைக் கெடுத்துக்கொண்டு வந்தேன்? ஒருவருடைய கஷ்டம் மற்றவருக்குத் தெரிவதில்லையே என்று வருந்தினேன். நண்பர் இருந்தகாலை எனக்கு வெகு உபசாரங்கள் செய்த அந்த வீடு இப்பொழுதோ—'அவர் இல்லை'—என்று சொல்வதுடன் தன் கடமையை முடித்துக் கொண்டு 'கம்'மென்று இருந்துவிட்டது. இந்த நிலையில் அந்த வீட்டில் தங்குவதற்கு மனமில்லாமல் என் பெட்டி சாமான்களை மட்டும் அங்கு வைத்து விட்டு, எனக்குத் தெரிந்த வைத்திய ரொருவர் வீட்டுக்குச் சென்று இரண்டு வாரம்போல் இருந்தேன்.

***

அங்கு இருந்துகொண்டே என் வாராம் இருமுறைப் பத்திரிகைக்கு விஷயங்கள் எழுதி அனுப்பிவந்தேன். வைத்தியரது மனைவியின் தம்பி ஊரிலிருந்து வந்திருந்தான். அவன் பெயர் தேவீபூஷணன். அவன்என்னிடம் ஒரு பல்பொடி டப்பியைத் தந்து மதிப்புரை வரையும்படி மிகவும் வேண்டினன். இலவசமாய்ப் புசிக்கும் வீட்டில் அவர்கள் சொல்வதுபோலெல்லாம் ஆடவேண்டுமல்லவா? அவ்விதமே அந்தப் பற்பொடியை உபயோகித்துப் பார்த்ததில் மிகவும் சிலாக்கியமாய் இருந்ததால், அதைக்குறித்து எனது பத்திரிகையில் மதிப்புரையில் சிலாக்யமாய் வரைந்து, இந்தப் பற்பொடியை 'இராஜா பற்பொடி' என்னலாம் என்று குறிப்பிட்டேன். அந்தப் பத்திரிகையை எனது வைத்திய நண்பர் படித்துவிட்டு கனத்தகோபம் கொண்டார்.

***

"எனது பற்பொடி எவ்வளவோ மேன்மை பெற்றதா யிருக்க, உபயோகமற்ற ஒரு அற்ப பொடியை 'இராஜா பற்பொடி' யென்றீரே, அவ்வாறுயின் எனது பற்பொடியை யெல்லாம் குப்பையில் கொட்டிவிடுகிறேன்" என்றார். அதற்கு நான் "தேவீபூஷணன் உங்கள் சொந்த மைத்துனனே; ஏதோ அவனுக்கு இரண்டு 'ஆர்டர்'கள் வரட்டுமென்று அவ்விதம் வரைந்தேன். அதுவும் உங்களைச் சேர்ந்தவன் என்று உங்கள்மீதுள்ள அன்பால் தான் வரைந்தேன், பற்பொடியும் நன்றாகஇருந்ததால் என்எழுதுகோல் அவ்விதம் வரைந்துவிட்டது" என்றேன். உடனே நண்பர் கடுஞ்சினத்துடன் தமது பற்பொடி டப்பிகளை யெல்லாம் திறந்து அவற்றிலுள்ளதைக் கீழே கொட்டத் தொடங்கினர்.

***

எனக்கோ இப்படியும் 'பொருமை உண்டாவென்று மிக்க மனவருத்தமாகவே, உடனே ஒரு கார்டு எடுத்து, அதில் வைத்தியரின் வீட்டு விலாஸத்துக்கு வரும் எனது தபால்களையெல்லாம் எனக்குத் தந்தி தந்த நண்பரின் வீட்டுக்கு அந்த நிமிஷ முதற் கொண்டே யனுப்பும்படி தபால் ஆபீஸ் தலைவருக்கு எழுதினேன். இதுவரை டப்பிகளிலிருந்ததைக் கொட்டிக்கொண்டிருந்த நண்பர் தாம் அவ்-

---

தூக்க மயக்கத்தில் சமாளித்து எழுதியவை எழுத்துக்களல்ல! அவை கிருக்குகளாகவும், பல பிழைகளாகவும், சின்னப்பின்னப்பட்டிருக்கலாம்.

ளவு பிரயாசையுடனும் எரிச்சலுட னும் கொட்டுவதை நான் கவனியாமல் என்னவோ எழுதியவாறு இருப்ப தைக் கண்டு திகைத்தார்.

***

கோபிப்பவரது கோபத்தை லக்ஷி யம் செய்தாலல்லவோ கோபிப்பவ ருக்கு மேன்மேலும் உத்ஸாகம் கொள் ளவும், இன்னும் சில ஆத்திரச் சொற்க ளைக் கொட்டச் சௌகரியமாகவும் இருக்கும். நான் இப்படி அவரது கோபத்தை லக்ஷியம் செய்யாமல் எழு தியவாறு இருக்கவே, அவருக்கு இன் னும் தமது கோபத்தைப் பெருக்க வழியில்லாமல், என்னிடம் வந்து அந் தக் கார்டைப் பிடுங்க முயன்றார். உடனே நான் அக்கார்டுடன் விரைந்து ஓட, நண்பரும் தமது அவிழ்ந்த வேஷ் டியைக் கையால் பற்றிக்கொண்டு தமது தொந்தி குலுங்க என்னைப் பின் தொடர்ந்து ஓடிவர, அவர் என்னை நெருங்குவதற்குள் நான் அந்தக் கார் டைத் தபால் பெட்டியில் போட்டு விட்டுச் சிரித்தேன்.

***

உடனே நண்பர்—'ஒருவன் தன்னை மறந்து கோபத்திலிருக்கை யில் அவனைப்பற்றி அபிப்பிராயம் சொல்வதும், அவமதிக்கப் புகுவதும் சரியாகாது' என்றார். நான் 'உம்மைப் பற்றிக் கெடுதலாக ஏதும்எழுதவில்லை. என் தபால்களை வேறிடம் மாற்றிடும் படி மட்டுமே எழுதினேன்' என்று கூறி, அந்த நிமிஷமே அவர் இல் லத்தை விட்டுப் புறப்பட்டுத் தந்தி தந்த நண்பரின் வீட்டிற்கு வரவும், அவரும் ஊரிலிருந்து திரும்பிவிட்ட தால், அவரிடம் இந்தப் பொறுமைக் கதையைக் கூறி நகைத்தேன்" என் றார்.

***

குண்டு செட்டியார் 'பொறுமை' யின் ஸம்பந்தமாகத் தமது அனுப வத்தை விசிறினர். "நான் ஒரு உறவி னர் வீட்டில் காகிதக் குப்பையுடன் கிடந்த ஒரு பழைய நூலை எடுத்து, இதென்ன வென்றேன். 'ஏதோ வேதாந்தம். யாருக்குத் தெரிகிறது, அது என்னத்துக்கு' என்றார். நான் அந்த நூலை வாசிக்கையில் சில விஷ யங்கள் விளங்காவிடினும், பல விஷ யங்கள் வெகு தெளிவும் அநுபவமும் சுலபமுமாய் மிகவும் ரஸமாக இருக் கவே, அதை அந்த உறவினருக்கு எடுத்து விளக்கி 'இக்கருத்துகளை ஆதாரவாய்க் கொண்டு ஒரு நூல் இயற் றலாம்' என்றேன். உடனே உற வினருக்கு உணர்ச்சி தோன்றி 'அப்ப டியா' என்று அதிசயித்தார். பிறகு மற்றொரு நாள் சென்றிருக்கையில் அப்புஸ்தகத்தை வாசிப்பதற்குக் கேட்க, அதற்கு அவர், 'ஓ! தரமுடி யாது, நீர் அதை வாசிப்பின் அதி லுள்ள ரஸமான விஷயங்களை யெல் லாம் உணர்ந்துவிடுவீர்; உடனே ஒரு தனி நூலும் புதிதாய் எழுதிவிடுவீர்; நானே அதிலுள்ளவற்றைக் கொண்டு ஒரு புது நூல் இயற்ற நினைத்திருப்ப தால் அப்புஸ்தகத்தை உமக்குக் காட்ட முடியாது' என்றார். 'குப்பையிற் கிடந்ததைச் சிலாகித்து நாம் பேசிய தாலல்லவா இப்படி ஏமாற நேர்ந்தது' என்று நினைத்துக்கொண்டேன். தன் னால் ஆகாவிட்டாலும் இன்னொருவன் செய்ய நினைக்கும் காரியத்தில் பொறு மைப்படுவதிற் குறைவில்லை. பிறகு அந்தப் புஸ்தகத்தின் கதி என்னவென்

கேட்ட சங்கதிக்குப் பதில் இல்லை, வேறு என்னென்னவோ எழுதிக் கடிதத்தை நிரப்பி விடுகிறார்கள். கடிதம் பெறுபவனோ இவர்கள் விட்டு விட்ட சங்கதியைத்தான்—இருக்கிறதா—என்று கவனிக்கிறான். அதுதான் காணோம்!

பீர்களோ, அந்த உறவினர் வெளியூர் சென்றிருந்தபோது அவர் வீட்டில் நடந்த விருந்தில் வாழையிலே செலவாய்விட்டதால், அந்தப் புஸ்தகத்தைப் பக்கம் பக்கமாய்க் கிழித்து 'உப்புமா' வைத்து எல்லோருக்கும் தந்து உபசரித்துவிட்டார்களாம்! இதை அந்த உறவினரே பிறகு என்னிடம் சொல்லி உமக்காவது கொடுத்திருக்கலாமே, வீணய்ப் பொருமைகொண்டு நானே எழுத எண்ணித் தாமதப்போனேனே என்று வருந்தினர்" என்று கூறினர். இத்துடன் நமது கதையும் முடிவு பெறுகிறது.

பாரீஸ்நகர்கண்டு திரும்பிய

பொன்வண்டு செட்டியார்.

காரியமானதும் அந்த மனிதன் அலக்ஷியமாய்க் கேவலப்படுத்தி யனுப்பி விடுகிறார்கள். ஆனல் அவனது வயிற்றுக் கொதிப்பு இனிமேல் தங்களை எவ்வளவுக்குச் சுட்டு வாட்டப் போகிறதென்பதை இந்தத் தெய்வ பயமில்லாதார் எண்ணிப் பார்ப்பதில்லை. கொதிப்பின் பலன் எப்படியோ சூழ்ந்து கொள்கிறது! சூழ்ந்து கொண்டு பின்னுக்குத் திகைத்த ஸம்பவங்கள் எவ்வளவோ உண்டு.

நாற்காலியும் மேஜையுமான மன்னவர்!

மன்னவருமல்ல, சக்ரவர்த்தியுமல்ல, மகராஜ துரை சிங்கமுமல்ல, தலைமை யதிகாரியுமன்று, கேவலம் குமஸ்தா கூட்டத்துள்ளே ஒரு சின்னஞ்சிறு குட்டி! தலையிலே தலைப்பாகை, நெற்றியிலே பொட்டு, உட்கார்ந்திருப்பது நாற்காலியிலே, எதிரிலே மேஜை! இந்த சிங்காரத்திலே அங்கு வரும் புதிய மனிதர் ஏதாவது விசாரிப்பின், அங்கே போம், என்று வாய் மூடியபடி கையால் மற்றெருவரைக் காட்டுகிற ஊமைப் பரிபாஷை. தனக்குக் கீழ் ஒருவர் உள்ளாரென்று வந்தவர் முன் காண்பித்துக் கௌரவம் கொள்ளத்தான் இந்த ஊமைச் சாடையோ என்னவோ! ஊமையிலும் இது கர்வம் பிடித்த ஊமை! வாய் திறந்து சொன்னலென்ன? வாய் முத்தம் சிந்திப்போமா? ஐயோ! மமதையே! உத்தியோக கர்வமே!!

செய்யும் காரியத்துக்கு வழி சொல்லித் தராவிடினும், செய்து முடித்த வேலைக்குக் கோணல்கள் சொல்ல ஆயிரம் பேர் தயார்.

எவ்வளவு விவகாரத்திலும் மரியாதையான பதங்களே உபயோகிக்க வேண்டும். தூஷக வாசகம் பேசினர்க்கு அவர் மனமும் தோஷத்தின்பாற் படும்.

சிறுமணித்திரள்

நம் உயிர் வாழ்க்கையில் 14—தப்பிதங்கள்.

(ஒரு ஆங்கிலேயர் சொல்வது.)

468. நாம் எது சரி, எது தப்பு, என்று எண்ணுகிறோமோ, அதை மேலானதாக எண்ணி நிலைநாட்ட முயலுவது ; மற்றவர்களும் அதையே பின்பற்றவேண்டுமென்று எதிர்பார்ப்பது பெரும் பிழை.

469. பிறருடைய சுகதுக்க அனுபவங்களை நம்முடைய சுகதுக்க அளவைக்கொண்டு அளக்கமுயலுகிறோம்.

470. இவ்வுலகத்தில் எல்லோரும் ஒரே விதமான அபிப்பிராய முள்ளவர்களா யிருக்கவேண்டு மென்று எதிர்பார்க்கிறோம்.

471. வாலிபப்பருவத்தில் வயோதிகப் பருவத்துக்குரிய அனுபவத்தையும், தேர்ந்த அறிவையும் தீர்மானமான புத்தியையும் எதிர்பார்க்கிறோம்.

472. பலவகையான குணமுடையவரை ஒரேவிதமான குணமுடையவராகத் திருப்ப முயலுகிறோம்.

473. அற்பகாரியங்களில் ஒத்துப்போகாமை ; அவற்றை ப்ரதானமாகக் கொண்டு வழக்கிடுதல். இது சரியா ?

474. நாம் செய்யும் ஒவ்வொரு தொழிலும் பூரணமாகச் சரியாயிருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்.

475. எது சரிப்படுத்த முடியாமல் மிஞ்சிப்போய் விட்டதோ, அதற்காக நம்மையும் உபத்திரவப் படுத்திக் கொண்டு, பிறரையும் உபத்திரவப் படுத்துகிறோம்.

476. எங்கெங்கே துக்க நிவர்த்திக்கு இடமுண்டோ, அங்கங்கே நம்மால் கூடுமான விடத்தில் துக்க நிவர்த்தி செய்யா திருக்கிறோம்.

477. அன்னியருடைய குறைகளை ஒரு பொருட்டா யெண்ணாமலும், அவர்களிடத்து அநுதாபம் பாராட்டாமலு மிருக்கிறோம்.

478. நம்மால் செய்ய முடியாததை எவராலுமே செய்ய முடியா தென்றெண்ணுகிறோம்.

479. காலதேச வர்த்தமானக் கட்டுக்குள்ளடங்கிய நம்முடைய மனஸு எதை யுணருகிறதோ அதை மாத்திரமே நம்புகிறோம்.

480. தற்கால உயிர்வாழ்க்கையைப் ப்ரதானமாகக் கொண்டு, இது எப்போதும் இப்படியே நீடித்திருக்குமென்றெண்ணி, மற்ற ஆத்மலாப விஷயங்களை கவனியா திருக்கிறோம்.

481. வெளியில் காணப்படுங் குணங்களால் ஜனங்களை மதித்து உள் குணங்களைக் கவனியாதிருக்கிறோம்.

இப்பதினான்கு குற்றங்களையும்நீக்கி, ஒருவன் உயிர்வாழ முயலுதலே உத்தமமாகும்.

கா. அல்லா பிச்சை.

பிறரைக் குறித்துப் பிறருக்கு நிந்தனையாக வரைதல் பிறகு வெகு வெகு தொல்லையில் இழுத்துவிடும்.



நமது கதாப் பிரஸங்கி.

ஒரு பெண்மணியால் விடுதலை.

அந்த ராஜாவுக்கு ஐந்து குழந்தைகளும்ஒரு பெண்ணும் இருந்தனர். தாயில்லாப் பிள்ளைகளான அவர்கட்கு எவராலும் துன்பம் நேராதிருக்க ஒரு ரகசியமான வனத்தில் ஒரு மாளிகையில் வைத்திருந்தான். அந்த வனத்திற்குச் செல்ல எவருக்கும் வழி தெரியாது. ராஜாவிடம் ஒரு முனிவர் தந்த நூலுருண்டை யொன்றுண்டு. அதைக் கீழே போட்டவுடனே, அது தானே பிரிந்து கொண்டுபோய் அந்த வனத்திற்கு வழிகாட்டி அங்குள்ள மாளிகையில் சேர்த்துவிடும்.

ராஜாவின் இரண்டாவது மனைவி ஒரு மந்திரவாதியின் மகள். அவள் அரசன் அடிக்கடி எங்கோ செல்வதைக் கவனித்து, அந்த நூலுருண்டையின் ரகசியத்தை எப்படியோ அறிந்து, அதை இராஜா நித்திரை செய்கையில் எடுத்துக்கொண்டு கீழே போடவும், அது வழிகாட்டி அவளை அந்த மாளிகையில் சேர்த்தது.

அந்த சமயம் ராஜாவின் ஐந்து குழந்தைகளும் வெளியில் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களைக் கண்ட இவள் தான் கொண்டுபோயிருந்த பக்ஷிகளின் இறகுகளை அவர்களின் தலையில் சொருகி அன்னப் பறவைகளாய்ப் போகும்படி மந்திரித்துவிட்டாள். உடனே ஐந்து குழந்தைகளும் அன்னப் பறவைகளாய் மாறிப் பறந்து போய்விட்டனர். ராணியும் தனது மூத்தாளின் குழந்தைகள் தொலைந்தன வென்று மகிழ்ந்து அரண்மனைக்குத் திரும்பி விட்டாள்.

இவையனைத்தையும் வீட்டிற்குள் மறைந்திருந்து கவனித்த தமக்கையான சிறுமி தன் ஸகோதரர்களை எவ்விதமேனும் கண்டு பிடிக்க நினைத்து அவர்களைத்தேடிக்கொண்டு சென்றாள். அன்றிரவு ஒரு காட்டிலுள்ள வீட்டில் தங்கினாள். சில நிமிஷங்களுக்குப் பிறகு ஐந்து அன்னப் பறவைகள் அங்கு வந்து தமது இறக்கைகளை யெல்லாம் உதிர்த்துவிட்டு மனிதரூபமாக மாறின. அவர்களே தன் ஸகோதரர்களென்று தமக்கை தெரிந்துகொண்டு அவர்களோடு ஸந்தோஷமானாள்.

அந்த ஐவரும் தங்கள் தமக்கையைப் பார்த்து, அக்கா, ஒரு தினத்தில் ஒரு மணிநேரமே நாங்கள் இப்படி மனித ரூபமாய் இருக்க முடியும். பிறகு பக்ஷிகளாக மாறிவிடுவோம் என்றனர். அதற்குத் தமக்கை இதிலிருந்து விடுவித்துக்கொள்ள

மனிதனைவிட உன் மனஸாக்ஷிக்கு அதிகம் அஞ்சு. அப்போதுதான் சுத்தனாவாய்.

வழியில்லையா என்ருள். அதற்கு அவர்கள், "விடுதலையாகமாட்டா தென்பதில்லை; யாராவது அதற் கென்று விடா முயற்சியாய் வருந்தி ஞல் விடுவிக்கலாம்; அதற்கு இருக் கிற ஏற்பாடுகள் மிகவும் அசாத்திய மானவை; ஐந்து வருஷகாலம் ஒருவ ரோடும் பேசாமலும் சிரியாமலும் இருந்து, எங்களுக்காக ஐந்து விநோத மான அங்கி தைக்கவேண்டும்; தைத் துக்கொண்டு யாரோடாயினும் ஒரு பேச்சு பேசினுல் அவ்வளவு காலம் செய்த காரியமெல்லாம் வீணுய்ப் போம்"—என்று சொல்லிக்கொண் டிருக்கையிலேயே, ஒரு மணி நேரம் ஆய்விட்டதால், உடனே அவர்கள் அன்னப் பறவைகளாய் மாறிப் பறந்துபோய்விட்டனர்.

***

தமக்கை மிக்க விசனங்கொண்டு, "எப்படியும் அவர்களை விடுவிக்கிறதே காரியம்" என்று துணிந்து, மறுநாள் அக்காட்டில் திரிந்து அங்கி தைப் பதற்கு நார் முதலியவைகளை யெல் லாம் சேகரித்துக்கொண்டு, இனி ஐந்து வருஷத்திற்கு ஒருவருடன் பேசவும் சிரிக்கவும் கூடாதென்று சபதம் செய்துகொண்டு அங்கேயே இருந்து அங்கி தைக்கத் தொடங்கி ஞள்.

இப்படி இரண்டு வருஷகாலம் சென்றது. இரண்டு அங்கிகள் முடிந் தன. ஒரு தினம் வேருெரு நகரத் தின் அரசன் வேட்டைக்காக அந்தப் பக்கம் வர, அவனுடைய வேலையாட் கள் இப்பெண்ணைக் கண்டு நீ யார் என்று கேட்டனர். அதற்கு அப் பெண் அவர்கள் எப்படியாவது போய்விடட்டுமென்று தன் கழுத்தில் அணிந்திருந்த கண்டசரத்தைக் கழற் றிப் போட்டாள். அதைப் போட்டும் அவர்கள் அவளை விடவில்லை. அவ ளுடைய செய்திகளைச் சொல்லும்படி வேண்டினர். அதுகண்டு அவள் தன் கடகத்தைக் கழற்றி எறிந்து பார்த்தாள். அவர்கள் போகவில்லை. இதற்குள் அரசன் அங்கு வந்து பெண்ணின் அழகைக் கண்டு தனது நகருக்கு அழைத்துச் சென்றுன். அங்கே அவளை விவாகம் செய்து கொண்டு ஒரு குழந்தையையும் பெற்றுன்.

நான்கு வருஷங்கள் சென்றன. நான்கு அங்கிகள் தைத்து ஆயின. இன்னும் எவருடனும் பேசவே யில்லை. அங்கி தைத்தபடியே இருந்து மறுபடியும் கர்ப்பமானுள். அந்த அரசனின் மாற்றுந்தாய் இந்த ஊமைப் பெண்ணு இந்த அரண் மனைக்குக் கிடைத்தது என்று சொல்லி, அவளுடைய குழந்தையை எடுத்து மறைத்துவிட்டு, அவள் தூங் குகையில் அவள் வாயில் இரத்தத் தைப் பூசிவிட்டு, இந்த ராக்ஷஸி குழந்தையைத் தின்றுவிட்டாள் என்று அரசனிடம் தெரிவித்தாள். அரசனே தன் மனைவியைக் கேட்க வா, அவள் வழக்கப்படி பேசாமலிருந் தாள். அரசன் அதை நம்பாமல் வருத் தமாய்ச் சென்றுவிட்டான்.

பிறகு மற்ருெரு குழந்தை பிறந் தது. அதையும் மாற்றுந்தாய் மறைத் துவிட்டு, அவள் இரண்டாம் முறை யும் குழந்தையைத் தின்றுவிட்டதாய் அரசனுக்குத் தெரிவித்தாள். அரசன் சகிக்க முடியாத கோபங்கொண்டு, அப்பெண்ணைக் கழுமரத்தில் ஏற்றி விட உத்திரவு செய்தான்.

அன்றுதான் ஐந்தாவது வருஷத் தின் கடைசி நாள்! ஐந்தாவது அங்கி

சோதிக்கும் தெய்வமே நமக்கு அனுகூலமும் செய்கிறது. அவரது பிரி யத்துக்கு நம்மை ஒப்புக்கொடுத்து விடுவோம்.

யில் இடது கைமட்டும் பாக்கியிருந்தது. அந்த ஐந்து அங்கிகளுடனே கழுமரத்தில் மிகுந்த துக்கத்துடன் ஏறி மேலே பார்த்தாள். அதே சமயம் ஐந்து அன்னப் பறவைகளும் அங்கு பறந்து வந்து அவள்மீது உட்கார்ந்தன. அவைகளைப் பார்க்கவே தனக்கு விடுதலையாகிற காலம் வந்துவிட்டதென்று அவள் மனம் ஸந்தோஷத்தால் பொங்கிப் பூரித்தது.

உடனே அந்தப் பெண்மணி தான் பாடுபட்டுத் தைத்த ஐந்து அங்கிகளையும் அந்தப் பக்ஷிகளின்மீது போட்டாள். உடனே அவர்கள் பக்ஷி உருவம் நீங்கி ஐந்து அழகிய ராஜகுமாரர்களாயினர். கடைசி ராஜகுமாரனுக்குமட்டும் இடதுகையின்றி பக்ஷியின் இறக்கை உதிராமலிருந்தது. பெண்மணிக்கும் பேசாமலிருந்த கஷ்டத்திலிருந்து விடுதலை கிடைத்தது. உடனே அந்தப் பெண்மணி பேசத்தொடங்கி, தனது வரலாற்றைத் தெரிவித்து, மாற்ருந்தாய் தன் குழந்தைகளை மறைத்து வைத்திருப்பதாய்த் தெரிவித்தாள். மாற்ருந் தாயும் பயந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு குழந்தைகளைக் கொண்டுவந்து விட்டுவிட்டாள். அரசனுக்கு உண்டான சந்தோஷம் சொல்லவும் கூடுமோ? இந்த செய்தியை அவர்களின் பிதாவுக்குத் தெரிவிக்க, அந்த ராஜா உடனே வந்து சேர்ந்து தன் மக்கள் அறுவரையும் கட்டியணைத்து முத்தமிட்டு ஆநந்தபரிதனுனன். அந்த அரசனின் இளைய மனைவி இந்த விஷயத்தை யறிந்ததும் அச்சமுற்று விஷத்தை யுண்டு மடிந்தாள். ஒருபெண்மணியால் ஐந்து ஸகோதரர்களும் விடுதலை கண்டனர்.

***

இந்தக் கதையில், ஐந்து ஸகோதரர்கள் என்றது உங்கள் ஜன்மபூமியாகிய பாரதநாடு ஆகும். தமக்கையாகிய அந்தப் பெண்மணி பாரதசந்தானங்களாகிய உங்களைக் குறிப்பிடுவதாகும். நீங்கள் அந்தப் பெண்மணியைப்போல் விடாமுயற்சியுடன் வருந்தி உங்களின் தாய்நாட்டின் விடுதலைக்குப் பாடுபடுவீர்களாகில் புனிதபூமியாகிய பாரததேசமும் வெகு சீக்கிரத்தில் விடுதலை பெறும். நீங்களும் விடுதலை இன்பம் கொள்வீர்கள். உங்களோடு உங்கள் வீட்டுப் பெண்ணரசிகளும் தேசவிடுதலைக்கு முன்வந்து உழைக்குமாறு செய்யத் துணிவீர்களாயின், அப்பொழுதுதான் வெகு துரிதத்தில் விடுதலை நிச்சயமாகும். நீங்கள் அவ்விதம் செய்ய இன்றுமுதல் துணிவீர்களா? துணிந்தவர்களுக்குச் சமுத்திரமும் முழங்கால்! பெண் தெய்வங்கள் துணிந்தால் செய்ய முடியாதது எது?

பெண்ணுக்குப் படிப்பு வேண்டாம் என்ற ஒரு தந்தையைக் கண்டோம். நாளைக்குத் தன் பெண் வித்யாவதியாய் விடில், தான் விபசார வழியில் ஜாதிவிட்டு ஜாதியில் பிறந்ததை அப்பெண் அறிவின் மிகுதியால் அதிகமாய் உணர்ந்து நோக, மீற, நேரும். ஆதலின் ஏதுமறியாத பாமரத் தன்மையில் இருப்பதே மேல் என்கிருர் பிதா. இதுநீசத்தனமான யுக்தி. தாழ்ந்த செயல்கள் எப்பொழுதும் தாழ்மையும் சேறுமான துர்க்கந்த நினைவுகளையேதரும்.



ஹாஸ்ய சஞ்சீவினி



மரியாதையான பதில் :—

வக்கீல் :—நீ அவனைத் திட்டினாயா?

பிரதிவாதி :—நான் அந்தப் பிச்சைக்காரக் கழுதையைத் திட்டவே யில்லை.

(நா. இராமநாதன்.)

* * *

மீதியைக் கேட்கும் விதம் :—

அவர் :—நேற்று உன்னிடம் கொடுத்த ஒரு ரூபாயில் ஆறணாவுக்கா சாமான் வாங்கினாய்?

இவன் :—ஆமாம். பாக்கியை உங்கள் வீட்டில் தந்து உங்களிடம் கொடுக்கச் சொன்னேனே?

அவர் :—இல்லை, இப்பொழுது அதற்கென்ன? நான் உன்னிடம் மீதிப் பணத்தைக் கேட்டேனா?

* * *

ஆடை யில்லாதவன் அரை மனிதன் :—

மாதவன் :—ரெயிலில் நீங்கள் முன்பே ஏறினீர்களே! ஏன் நின்று கொண்டு வந்தீர்கள்? உங்களுக்குப் பிறகு வண்டி புறப்படும் சமயத்தில் ஏறிய மனிதர் மட்டும் நன்றாக உட்கார்ந்துகொண்டு வந்தாரே?

கந்தன் :—என் கந்தல் சொக்காயையும் அழுக்கு வேஷ்டியையும் கவனித்த எவரும் எனக்கு இடம் தர ஒப்பவில்லை. எனக்குப் பின் வந்தவரோ கோட்டுத் தலைப்பாகை பெருத்த தொந்தி மனிதர். அவர் வண்டியில் ஏறியதும், உட்கார்ந்திருந்த ஒருவன் தன்னை நெருக்கிக்கொண்டு அவர் உட்கார உடனே இடம் கொடுத்தான். இந்த நாளில் உடுப்புக்குத்தானே மகிமை!

* * *

என் க்ஷேமத்தில் அவ்வளவு கவலையா?

பூசாரி :—நீங்கள் காளி பூஜைக்காக இரண்டு ரூபாய் தருவதாகச் சொன்னீர்களே. நேற்று எழுதரம் அதற்காக வந்து அலைந்தேன். இரவு 11-மணி வரையும் காத்திருந்தேன். தங்களைக் காண முடியவே யில்லை.

தனக்கு அவசியமான ஸகல சாமான்களையும் ஒரு சிறு டிரங்குப் பெட்டியில் அடக்கிக்கொண்டு வெளியில் ஸஞ்சரித்துப்பின் வீடு திரும்புபவர், ஒரு குருவியானது தன் சொந்தக் கூண்டுக்கு மறுபடியும் வந்து சேர்ந்து களிக்கும் மகிழ்ச்சி போன்று ஆநந்தித்துப் பூரிப்பர்.

மிராஸ்தார் :—நான் காளிக்குப் பூஜை போட்டு க்ஷேமமாய் வாழவேண்டு மென்று உனக்கென்ன அவ்வளவு கவலையா ? நீ பணத்துக்கு வந்து அலைந்தது என் க்ஷேமத்துக்காகவா ?——அல்லது உன் வீட்டுச் செலவுகளுக்காகவா ?

T. S. குழந்தைவேல் முதலியார்.

* * *

ஏழை யென்றால் இளக்காரம் :—

நாட்டு வைத்தியன் :—தாங்கள் இன்னும் அந்தத் தைலத்துக்குத் தர வேண்டிய பாக்கியைத் தரவில்லை. வீட்டில் சாப்பாட்டிற்கில்லாமல் மிக்க கஷ்டம்.

பிரபு :—எப்பொழுது பார்த்தாலும் பணத்துக்குப் பிடுங்குகிறீரே ! அடுத்த வாரம் வாரும்.

குமாஸ்தா :—டாக்டர் ரோஸ் 30-ரூபாய்க்கு அவசரமாக பில் அனுப்பி யிருக்கிறார்.

பிரபு :—உடனே அவர் மனிதனிடம் அந்தத் தொகையைக் கொடுத் தனுப்பிவிடு.

* * *

ஏகாதசி விரதம் :—

ராமன் :—இன்று நீ ஏகாதசி விரதமா ? பலகாரம்தான் சாப்பாடோ?

சோமன் :—பலகாரமல்ல, பலாகாரம் (பல—ஆகாரம்) இன்று வேண் டியவரை புசிக்கலாம். ஆனால் சாதம் குழம்புமட்டும் கூடாது.

* * *

பழிப்புக்குப் பழிப்பு :—

கோபு :—என்னடா ஆசாரம் என்று சொல்லிக்கொண்டு முட்டகோஸ் வாங்கிக்கொண்டுபோகிறாய்? அது நிஷித்த பதார்த்தமல்லவோ ?

நாணு :—ஆமாம், நீ தினமும் வாங்கி சாப்பிடுகிற 'சாக்லெட்'டிற்கும் சோடா புட்டிக்கும் இது மட்டந்தான்.

M. S. கிருஷ்ணய்யர்.

சொற்பன பலன்.

சிலரது கனவுகள் அப்படியப்படியே பலித்து விடுகின்றன. இவை பெரும்பாலும் துக்க சங்கதிகளாகவே இருந்து, மாதம் வாரம் முன்பே தெரிவித்து விடுகின்றனர். ரதம் முதலியன வந்தது போன்ற கனவுகள் மரணத்தின் குறியே. சொற்பனம் பலித்து விடும் தன்மையுள்ளார் பயங்கர மனிதர்களாவர். சிலரது கனவுகள் பலிப்பதே யில்லை. அவர்கள் கண்ட கனவுகளின் பயங்கரத்துக்கு அவ்விதமே பலிக்காமை பெரும் பாக்கியமே ! சிலருக்கு சொற்பனம் எதிர்கால எச்சரிக்கை போல் உதவுகிறது. சிலருக்கு சொற்பனமில்லாத நித்திரையே இல்லை.

ரகர றகர பேதங்கள்.

(409-ம் பக்கத் தொடர்ச்சி.)

28. ஊரவோர்—மூத்தோர், அறிஞர். உறவோர்—சுற்றத்தார். (28) ஊரவோராயினும், உறவோருக்கு அடங்கி நடப்பது நலம்.

29. உரி—தோல். உறி—உறியென்னேவல். (29) அந்த ஆட்டின் உரியை உறி.

30. உரிதல்—கழலல். உறிதல்—உறிஞ்சுதல். (30) கூடை உரிதல் கூடாதென்று கண்டு, அதைப் பொத்து அதிலிருக்கும் தேனை உறிதல் நலமென்றான்.

31. உரு—உடல். உறு—மிகுதி. (31) ஐம்புலன்களோடு கூடிய உருநீத் தொழில் புரிவதாயின், நரகில் உறுவேதனைக் குட்படும்.

32. உருக்கல்—உருக்குதல். உறுக்கல்—கோபம். (32) அவள் உருக்கை உருக்கத் திறமில்லாததால் அவனை உறுக்கினான்.

33. உருத்தல்—கோபம். உறுத்தல்—பயத்தல். (33) அவன் உருத்தல் அவனுக்கே உறுத்தலை யுண்டாக்கிற்று.

34. உருபு—உருவம். உறுபு—நெருக்கம். (34) உருபோடு உருபு உறுபின், அழிவேயன்றி வேறில்லை.

35. உருப்பு—பூரணம். உறுப்பு—அவயவம். (35) உறுப்பு ஊனமின்றி உருப்பாயிருத்தலும் ஒரு பாக்கியமே.

36. உருவல்—உருவுதல். உறுவல்—துன்பம். (36) பிறர் பொருளை இச்சிக்க உருவலான ஐம்பொறி எக்காலத்திலும் உறுவலைப்பெறும்.

37. உரை—சொற்பயன். உறை—இடம். (37) திருவள்ளுவர் அலங்கரித்த உறையிலிருந்து உரை சொன்னார் குறளுக்கு.

38. உரைதல்—தேய்தல். உறைதல்—நித்திரை பண்ணுதல். (38) அவன் உறையுமிடத்தில் குறிஞ்சிலைக் கல்போட்டு உரைத்து மெருகிட் டிருப்பதைப் பார்.

39. உரைத்தல்—சொல்லுதல். உறைத்தல்—கார்த்தல். (39) மிளகாய்க்கு இருக்கும் உறைத்தல் மிளகுக்கு இல்லையென்று உரைத்தான்.

40. ஊரல்—உரிஞ்சுதல். ஊறல்—ஊறுதல். (40) தேன் ஊறலைத்தேனீ ஊரல் இயல்பு.

41. ஊரு—அச்சம். ஊறு—தீமை. (41) பிறரைக்கெடுக்கும் காரியமொன்றில் ஊரு கொள்ளாமல் எவன் அக்காரியத்தைச் செய்கிறானோ அவன் கடைசியில் எவ்விதத்தும் ஊறு அடைவான். (தொடரும்.)

"என் அம்மணி! இந்தக் கோபம்? என் அம்மணி இந்த சிணுங்கிச்சிணுங்கி நடக்கிற நடை? அவ்வளவு குலுங்கி எதற்கம்மா முறைத்து எழுந்திருக்கிறாய்? அப்போது தான் உன் கோபம், முணமுணப்பு வெளியில் தெரியுமாக்கும்! இதில் நீ வாரிக்கொள்வதென்ன? கடைசியில் அடங்க வேண்டியது தானே! உன்னால் வீடு சந்தோஷப்படும்படி சமாதானமாக இருக்க வேண்டாமா? பிறர் மனம் கஷ்டப்பட வைப்பது சரியா?

குழந்தைகள் பக்கம்

நாக்குப் பயிற்சி.

அடியில் வரும் வாக்கியங்களை ஒன்றன்பின்னொன்றாகக் கடகடவென்று சொல்லும்படி சிறுவர் முதல் பெரியோர்வரை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்வதும், அப்படியே விடாது அடுத்தடுத்துச் சொல்லும்போது நா குழறி சிலர் சில வாக்கியங்களை வினோதமாய் உச்சரித்து விடுவதால் அதைக் கண்டு அனைவரும் கலீரெனக் கைகொட்டி நகைப்பதும் தமிழ் நாட்டில் வெகு இடங்களில் நடந்து வருகின்றன. அவ்விதமான பழய வார்த்தைகளில் எனக்குக் கிடைத்த சிலவற்றைத் திரட்டிக் கீழே தருகின்றேன்.

1. ஒன்பது நரியிலே ஒரு நரி கிழநரி.
   கிழ நரி பிடரியில் ஒரு பிடி நரை மயிர்.
2. கிழவன் உழுத புழுதியிலே கிண்டியெடுத்த பனையோலை,
   கீழே ஏழு ஓலை மேலே ஏழு ஓலை.
3. காட்டோரம் பரட்டை மரம். பதக்கு பதக்கு பூ பூக்கும்.
   பறித்து வாடி பறைக்குட்டி, உனக்குழக்கு பூத் தாரேன்.
4. குயவன் உதடு குடத்துதடு. குயவன் செய்த குடத்துதடு.
5. கன்று முப்பது, கயிறு முப்பது, கன்று கட்டுகிற தும்பு முப்பது,
   ஏர் முப்பது, எருது முப்பது, ஏர் கட்டுகிற தும்பு முப்பது.
6. புட்டு சுட்டு புட்டியிலே போட்டு புட்டியைக் கோடுத்தேன்
   புட்டைக் கோட்டிக்கோண்டு புட்டியைத் தாடி.
7. சோளத்தோசை தீய்ந்ததோசை. சுட்டெடுத்தால் எட்டுதோசை.
8. சோறுஞ் சோளச்சோறு, சாறும் கீரைச் சாறு.
9. பாக்கும் பழப்பாக்கு, பூட்டும் புதுப் பூட்டு.
10. மலையிலே உரல் உருளுது புரளுது.

அ. ச. அருணசல ரெட்டியார்.

குறித்த வேளை தவறாதவர் காமுகரே, இதை யாவரும் சரி என்பர்.



பெரியாரின் மொழிகள்



(442-ம் பக்கத் தொடர்ச்சி.)

325. The whole atmosphere is laden with perfume and sunshine. The birds sing.

LONGFELLOW.

வான முழுவதும் நறுமணத்துடனும் சூரியகாந்தியுடனும் நிரம்பியிருக்கிறது. பறவைகளும் பாடுகின்றன.

லாங்டெல்லோ.

326. One thing I solemnly desire to see all children taught —obedience; and one to all persons entering into life—the power of unselfish admiration.

RUSKIN.

குழந்தைகளுக்குக் கற்பிக்கப்பட வேண்டியது கீழ்ப்படிதல்; குடும்ப வாழ்க்கையில் புகும் பெரியோர்களுக்குக் கற்பிக்கப்படவேண்டியது சுயநலமில்லாத புகழும் சக்தி; இவைகள் தான் நாம் மனப்பூர்வமாய் பார்க்க விரும்பும் விஷயங்கள். ரஸ்கின்.

327. The good old year is with the past, Oh, be the new so kind. BRYANT.

சமீபமான பழய வருஷமானது சென்ற காலத்தோடு சேர்ந்துவிட்டது. வரப்போகிற புதிய வருஷமும் அதேமாதிரி பிரியமுள்ளதாக இருக்கட்டும். ப்ரயண்ட்.

328. The sun shines hot; and, if we use delay. Cold biting winter mars our hoped-for hay.

SHAKESPEARE.

சூரியன் உஷ்ணமாய்ப் பிரகாசிக்கிறது. நாம் தாமதம் செய்தால் கடுமையான மாரிகாலமானது நம்முடைய எண்ணங்களைக் கெடுத்துவிடும்.

ஷேக்ஸ்பியர்.

329. Defend your reputation, or bid farewell to your good life for ever.

SHAKESPEARE.

உன்னுடைய கீர்த்தியைக் காப்பாற்று. இல்லாவிட்டால் எப்பொழுதும் உன் நல் வாழ்க்கைக்கு உத்திரவு கொடு.

ஷேக்ஸ்பியர்.

330. Of all the pulpits from human voice is ever sent there is none from which it reaches far, as from the grave.

RUSKIN.

மனிதனுடைய குரல் கிளம்பியிருக்கும்படியான பிரசங்க மேடைகளுள் சமாதி அல்லது கல்லறையைப்போலுள்ளது வேறொன்றுமில்லை. சமாதியிலிருந்து கிளம்பும் குரல் எவ்வளவு தூரம் கேட்குமோ அவ்வளவு தூரம் வேறு எந்த மேடையிலிருந்துங் கிளம்பும் குரல் எட்டாது.

ரஸ்கின்.

331. To the noble mind. Rich gifts wax poor, when givers prove unkind.

SHAKESPEARE.

தன் இல்லம், தன் வீடு வாசல், தன் தாய், தன் பாட்டி, இன்னனைய உரிமைகள் பிற இடங்களில் ஒப்பாரி உறவில் தாராளமாய்க் காட்ட இயலா.

கொடையாளிகள் பக்ஷபாதமில்லாம லிருந்தால் பெருந்தன்மை பொருந்திய மனதை உடையவர்களுக்கு உயர்ந்த வெகுமதிகளும் எளியவை யாய் விடுகின்றன.

ஷேக்ஸ்பியர்.

332. Let your own discretion be your tutor; suit the action to the word, the word to the action.

SHAKESPEARE.

உன்னுடைய பகுத்தறிவே உனக்கு ஆசானுக இருக்கட்டும். வார்த்தைக்குத் தகுந்தாப்போல் காரியத்தையும், காரியத்துக்குத் தகுந்தாப்போல் வார்த்தையையும் தகுதியாக்கு.

ஷேக்ஸ்பியர்

333. From the necessary or of Antiquity Reflected shines the eternal light of Truth, As from a mirror!

LONGFELLOW.

பூர்வகாலம் தொட்டும் உண்மை யென்னும் வெளிச்சமானது கண்ணுடியிலிருந்தது போலப் பிரதிபலிக்கப்பட்டுப் பிரகாசிக்கிறது.

லாங்பெலோ.

334. God has lent us the earth for our life; it is our great entail.

RUSKIN.

கடவுள் நமக்குப் பூமியை நாம் ஜீவிப்பதற்காக இரவலாகக் கொடுத்திருக்கிறுர். அது நமக்கு ஒரு பெரிய சுதந்தரச் சொத்து. ரஸ்கின்.

(தொடரும்.)

P. E. பாஷியம் நாயுடு.

சொற்பனத்தில் பழிக்குப் பழி!

ருஜுவாகாது விடப்பட்டுவிட்ட குற்றவாளியையும், போலீஸார் கைக்கு அகப்படாது தப்பித்துக்கொண்டே வரும் குற்றவாளியையும் சொற்பனமானது பயங்கரத் தோற்றங்கள் மூலமும், அகப்பட்டுவிட்ட பாவனையிலும், தண்டிக்கப்படுகிற பாவனையிலும், காட்சிகள் மூலமும் தோற்றுவித்து அவஸ்தைப் பட வைத்து ஸூக்ஷ்ம சரீரத்தைத் தண்டித்துப் பழி வாங்குகின்றது. கொலைசெய்தவன் கண்முன்னே கனவில் அவன் செய்த கொலை அப்படியே தோன்றுகின்றது. கொலையாளி நடுங்கிக் கதறுகிறுன். கொலையுண்ட ரூபம் எதிர்ப்பட அலறுகிறுன். இயற்கையரசி கனவின் மூலமாய் பழிக்குப்பழி வாங்குகிறுள்.


படிப்பு உத்தமப் படிப்பாக அமைய வேண்டும். அதமப் படிப்பால் உண்டாகும் அல்லல்கள் சொல்லத் திறனில்லை.

அறிவே சிறந்த ஆயுதமாம். அறிவு யாதெனில் உண்மை தான். சிறந்த உத்தம அன்பர்களின் சொற்கள் ஒருபோதும் பகட்டாக இராது.

சாஸ்திர நுட்பங்கள்.


(432-ம் பக்கத் தொடர்ச்சி.)

126. உலகத்திலுள்ள வைர ரத்தினங்களுக்குள்ளே போர்த்துக்கலின் முடிக்குரிய வெட்டாத ரத்தினமே மிகப் பெரியது. அது பிறேசில் நாட்டில் 1808-ம் ஆண்டு கண்டெடுக்கப்பட்டது. அதின் நிறை 1,680-காரற்று. அதாவது பதினொரு அன்சு. 1550-ம் ஆண்டளவிலே இந்துவிலுள்ள கற்கண்டம் என்னும் இடத்திலே கோழிமுட்டையில் பாதி வடிவும், ஆறு அன்சு நிறையுமுள்ள ஓர் வைர ரத்தினம் எடுக்கப்பட்டது. வெகு காலமாக பெரிய மோகல் என்று விளங்கின இந்த ரத்தினத்தை இப்போது காணவில்லை. இது உடை



7


பட்டுப்போனதென்று எண்ணுகிறார்கள். இவ்வெண்ணத்தின்படி அதின் துண்டுகள் இப்போது இருக்கிற பெரிய இரத்தினங்கள் மூன்றுமே. ஒன்று ருஷியரிடம் இருக்கிற 196-காரற்று நிறைகொண்ட பெரிய ரத்தினம். மற்றது இங்கிலாந்தின் அரசரிடம் இருக்கிறது. இதன் நிறை வெட்டுமுன் 186-காரற்று. வெட்டின பின் 103-காரற்று. மூன்றாவது பார்ஸி அரசரிடம் இருக்கிற 130-காரற்று நிறைகொண்ட ரத்தினம். ருஷ்ய ரத்தினத்துக்கு நான்கு கோடி ரூபாயும், இங்கிலாந்தின் ரத்தினத்துக்கு இரண்டு கோடி ரூபாயும்,



8

விலை மதித்திருக்கிறார்கள். இவைகளைவிட கவனிக்கப்படத்தக்க வைர ரத்தினங்களுள் ஔஸ்திரிய ராச்சியத்துக்குரிய 139-காரற்று நிறை கொண்ட மஞ்சள் ரத்தினம் ஒன்று உண்டு. நிறத்த கண்ணாடித் துண்டு போல் விற்கப்பட்ட இதின் பருமனும் வடிவும் 7-ம் படத்தில் தெரிகிறது. பிரெஞ்சு அரசருக்குரிய இன்னொன்று 8-ம் படத்தில் தெரிகிறது. அதிலே கோடு இட்ட வரி வைரம் வெட்டப்படுமுன் இருந்த பருமனைக் குறிக்கிறது. சற்றே நீல நிறமுள்ள இந்த ரத்தினம் மிகச் சுத்தமானது. இதின் நிறை 131-காரற்று. இது இந்துவில் எடுக்கப்பட்டது. இதற்கு பாரிஸிலுள்ள நகைக்காரர் மதித்த விலை அறுபது லக்ஷம் ரூபாய். 9-ம் படம் மெத்த சிறப்பான

9



ஓர் வைரத்தைக் காட்டுகிறது. இதின் நிறை 47-காரற்று. இது இரண்டு லக்ஷத்து நாற்பதினாயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டது. இந்த

வழியில் போய்க்கொண்டிருப்பவன் சாமானியனல்ல. அவன் ஒருத்தியின் கணவனாகலாம். ஒரு குடும்பத் தலைவனாகலாம். அவனை எதிர்பார்த்து எத்தனை பேர் அவன் வீட்டில் அவனைத் தேடி வந்து அவன் வரவுக்கு எதிர்பார்த்துக் காத்திருக்கின்றாரோ? எதிர்ப்படுகிற எதுவும் அற்ப மன்று.

ரத்தினம் சத்துருக்களுடைய கையில் அகப்படாதபடி ஓர் துருக்கியப் பிரபு இதை அழித்துவிட்டார். **பருத்த வைரங்கள் மெத்த அருமை. முப்பத்து மூன்று காரற்றுக்கு அதிகமான நிறை கொண்ட வைர ரத்தினங்களின் தொகை பத்தொன்பதுக்கு மேற்படாது.**

127. கற்கரி என்பது மனுஷர் பூமியில் தோன்றுமுன் சென்ற யுகங்களில் செழித்த சோலைகள் பூமிக்குள்ளே உண்டாகுஞ் சூட்டால் எரிந்தும், மெத்த அமுக்கப்பட்டதுமான கரி.

128. இந்தக் கரி பூமிக்குள்ளே கல், மண் இரும்புப்பார் முதலியவற்றால் பொதியப்பட்டு கொடியாகவும் படலமாகவும் இருக்கும்.

129. கரிச்சுரங்கம் எவற்றிலும் பூரணமான இலைகள், பழங்கள், தூண்கள் மெத்த அதிகமாய்க் காணப்படுவதால், எக்கரியும் தாவரப் பொருளென்றே சொல்லவேண்டும். பூமியின் மற்றும் பங்குகளிலுள்ள தாவர வகைகளைப் போலவே, கரியாயிருக்கிற பங்கின் தாவர வகைகளையும் சரியாய் ஆராய்ந்தறியலாம். மேலும் எரிந்து நொறுங்கி மெத்தவும் மாறாத கரியில் ஓர் மெல்லிய துண்டை சூட்சும தரிசனக் கண்ணாடியின் மூலம் நோக்கினால் அக்கரிக்குரிய மரத்தின் குழல்கள் நரம்புகள் எல்லாம் அதிலே தெரியும்.

130. தாவரத்திலே எப்போதும் சேர்ந்திருக்கிற உப்புகளும் மண்களும் பல பிரமாணமாக இதில் சேர்ந்திருக்கும். கற்கரியை எரிக்க இவைகளும் வேறு சில அசுத்தங்களும் சாம்பலாக நிற்கும்.

(தொடரும்.)

அந்தக் கைதி மாஜிஸ்திரேட்டைத் திட்டுகிறான். அதற்கு அவர் பதில் திட்டுவதில்லை. அதற்கு ஆறு மாத சிக்ஷை என்கிறார். இப்போது ஆணுவக்குதிப்பு தான். பிறகு தண்டனையை அநுபவிக்கையில்தான் இந்த ஆணுவத்தின் பாடானபாடு தெரிகிறது. அந்த சிக்ஷை முன்பு குதித்த திமிரை யடக்கி விடுகிறது. துள்ளி விழாதே; பின்னுக்கு இதற்குப் பாடு தப்பாது என்று அந்த சிக்ஷை எச்சரிக்கிறது.

வீட்டுக்காரன் ஒருவர் தன் வீட்டுக்குள் புகுந்ததும், உடனே வெளித் திண்ணைக்குப் போய்விட்டால், வீட்டிற்குள் புகுந்தவனும் வெளித் திண்ணைக்குத் திரும்பிவிடவேண்டியதே. அவ்விதம் வெளியில் வரட்டுமென்றே வீட்டுக்காரனும் வெளியில் வந்தது! அதிகநேரம் வீண்பேச்சில் கழியுமென்று, அதற்காக உள்ளுக்கு வரச் செய்யக்கூடாதென்ற நினைவும் வேறே!

ஒருவன் பிறன் கடையிலிருந்து உழைக்கையில் இவனாலேயே அக்கடை விருத்தியாகிறது. இவனே பிறகு அக்கடையில் சொந்தமாய் வியாபாரம் செய்கையில் விருத்திக்கு வருவதில்லை. நஷ்டமும் வேறே. சிலருக்கு சொந்தத்தில் தொழில் விருத்தியில்லை. பிறனுக்கு உழைக்கையில் மட்டும் அங்கு விர்த்தியாகிறது. இதுவும் ஒரு ஜன்மராசிதான்! துரதிர்ஷ்டம்தான்!

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்பிரசுரம்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

குடும்பச்செலவின் குட்டிக்கரணம்!



ஆமாம்! அய்யனே! மெத்த மெத்தப் பெரிய அவதியடா இது! பொதுவில் எல்லோருமே பட்டுக்கொண்டிருக்கிற குட்டிக்கரணமப்பா! "காட்டுக்குப் புலி ஆதரவு, புலிக்குக் காடு ஆதரவு" என்பார்களே, அதுபோல குடும்பம் நிலைக்க செலவு ஆதரவு, செலவிடும் தன்மைக்குத் தக்கபடி குடும்பத்தின் ஆதரவு! "பணமிருக்கவேணும், இல்லாவிட்டால் பத்து ஜனம் இருக்கவேணும்" என்பார்கள். வெளிப்படையாய் இல்லாமலே கூரை வீட்டில் கூழும் தண்ணியும் குடிப்பவர்களுக்கு பத்து ஜனம் இருப்பார்கள்தான்; அவர்கள் வீட்டுக்கு எவரும் விருந்தாகப் போக மாட்டார்கள் தான்! ஆனால், மெத்தை வீட்டில் ஆடம்பரமாய் இருந்துகொண்டு கால வினையால் வரவு சுருங்கியவன் பாடுதான் கஷ்டம்! அவன் பணத்தைச் செலவிட்டால்தான் பத்து ஜன ஆதரவும் கிடைக்கும்! அவ்விதம் செலவிட முடியாவிட்டால் பத்து ஜன ஆதரவும் தூரத்தில் போய்விடும். இது வெளிப் பெருமையில் வாழ்கிற குடித்தனத்துச் சங்கதி! "சம்சாரக் குட்டு வெளியிட்டால் நஷ்டமல்லவா" என்று பத்து ஜன ஆதரவுக்காக "பணம் பெரிதோ பழமை பெரிதோ" என்று பெருமையில் வாழ்கிறவனும் செலவுகள் செய்யத்தான் செய்கிறான். ஆயினும் என்ன, "பட்டும் பாழ் நட்டும் சாவி" என்பதாக, ஒரு தினத்துக்கு முகம் சுளுங்கினால், அதற்கு முன்பு அத்தனை நாளும் செலவிட்டது வீணாகிப் பகையுமாய் விடுகிறது! "பட்டால் அறிவான் சண்டாளன், மழை பெய்தால் அறிவான் வெள்ளாளன்" என்பதாய் எதுவும் பட்டுப் பார்த்தால் தான் தெரியும். "பட்டு அறி, கெட்டு அறி, பத்து எட்டு இறுத்து அறி" என்பதும் ஒரு அநுபவச் சொல்தான்.

***

விகடன் இதிலிருந்தும் சில விவரிக்க விரும்புகிறேன். வீட்டிலிருக்கிறவர்கள் வீட்டுத் தலைவன் படுங் கஷ்டம் தெரியாமல் தனக்கு வேண்டியவர்களெல்லாம் வந்து போய்க் கொண்டிருக்க வேண்டுமென்கிறார்

மனைவியிடத்துப் பேசும் குற்றமில்லாத சொல், மற்றோர் நங்கையிடத்துக் கூறுவதாயின் மிதமீறிப் பேசியதாய்த் தோன்றிக் கலக ஸமுத்திரமாகிவிடும்.

கள். வரவேண்டியதுதான், போக வேண்டியதுதான். ஆனால் கைக்காசு செலவிட்டாலல்லவா உபசரிக்கமுடியும். உபசரித்தும் அனுப்பவேண்டியது முறைதான். அது ஒரு வேளைக்கு, ஒருநாளைக்கு. நெடுநாள்குந்திக்கொண்டால் அப்போதும் உபசரிக்க வீட்டுக்காரன் கடன் கடைக்குச் சென்று கையை நீட்ட வேண்டி யிருக்கிறது. இவ்வளவு பாடுபட்டுச் செலவுகள் செய்தாலும் நாளைக்கு வந்து நட்டுக் கொள்ளுகிற ஒரு அற்ப விரோதத்திலே ஜன்மப்பகையாகி முன்பு பட்ட பாடும் செய்த செலவுகளும் அத்தனையும் வீணாய்விடுகிறது! ஒரு காசு சம்பாதிப்பது குதிரைக் கொம்பாயிருக்கையில், எத்தனை பைகள் சொண்ட பணத்தை இப்போது விரோதப்பட்டுப் போனவர்களுக்கு முன்பு செலவிட்டு வீணானேன் என்று ஒரு குடும்பஸ்தன் நினைக்கையில் ஆ! அவன் வயிறு பற்றிக்கொண்டு எரிகிறது!

***

விகடன் விருந்தினர்க்குச் செலவிட வேண்டாமென்று சொல்லவில்லை. உண்ணும் ஆகாரத்தில்கூட ஒரு மிதம் வேண்டியிருக்கிறது. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்றிருக்கிறது. எதிலும் தனது சக்திக்குத் தக்கபடி என்பதான ஒரு எல்லை யிருக்கிறது. கடலும் ஒரு அளவுக்குள் உட்பட்டு நிற்கிறது. பகல் இரவு காலங்களும் ஒரு ஒழுங்குக்குள் அடங்கி நிற்கிறது. அதுபோல் ஒரு குடும்பஸ்தன் செலவிடுவதற்கும், ஒரு நிதானக் கணக்கை அமைத்துக் கொள்வது முக்கியமாகிறது. "தானத்திலும் நிதானம் பெரிது" என்று சொல்லியும் வைத்திருக்கிறார்கள். "ஆனமுதலில் அதிகம் செலவானால் மானமழிந்து மதிகெட்டுப்" போக நேரிடுமென்று ஒரு பாடலும் இருக்கிறது. "கடன் கொண்டவர் நெஞ்சம்போற் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்று கம்பன் கவியும் வேறே நிற்கிறது. இவ்வளவுக்கும் மேலாகப் பெரிய குடும்பங்களா யிருந்து அளவுக்கு மீறிய செலவில் வீடு, நிலம், செல்வம், பெயர், ஊர் யாவும்போய்ப் பஞ்சைகளாய் விட்டவர்களின் பிரத்தியக்ஷக் கதைகளும் வேறே யிருக்கிறது. அப்படிக் கேவலப்பட்டுப் போன மனிதர்களும் எதிரேயே நடமாடிக்கொண்டு நிற்கிற காட்சிகளும் இருக்கிறது. இவ்வளவும் பார்க்கிற ஒரு மனிதன் நாளைக்குத் தான் தலை குனிய நேராதபடி வெகு ஜாக்கிரதையில் நின்றுகொண்டு, தன் கைக்கு வந்ததை யெல்லாம் விருந்தினர்களுக்கும் பந்துக்களுக்கும் எவ்வளவோ விசுவாசமும் அன்புமாகச் செய்தாலும், ஐயோ! அவனுக்கு நாளைக்கு ஒரு நல்ல போவது இருக்கிறதா? அல்லது வீட்டில் இருக்கிறவர்களாவது சிலாகிக்கிறார்களா? இரண்டுமில்லை! விகடன் சொல்ல வந்ததெல்லாம் செலவுகள் நெடுகச் செய்துவந்தும் கடைசியில் வீணாய்ப் போகிறதே என்பது தான்!

***

இப்படி வீணாய்ப்போகிறபோது செலவுகள் செய்யாமலே இருந்து விடுவது விவேகமல்லவா என்று என் நஞ்சான் குஞ்சான்கள் விகடனைக் கேட்கலாம். அப்படியும் 'கம்' என்று எதிலும் பட்டுக் கொள்ளாமலும் பிறருக்கென்று ஒரு காசு செலவிடாமலும் இருக்கிற தங்கக்கம்பிகளும் சிலர் இருக்கிறார்கள். அவர்களுக்குத்தானப்பா இந்த விகட விநோத உலகத்திலே வெகுநல்ல பெயர்! அவர்களைப்

நடு இரவில் மாந்தருள்ளம் வேறுபட்டு விகாரமாய் ஒரு மாதிரியில் நிற்கிறதாம். அந்த சமயம் எந்தத் தவறுதலும், மீறுகையும் மனதில் தைக்காதாம்.

போலவே கல் மனமாயிருக்க எல்லோ ருக்குமே முடிகிறதா!—மனதுதான் ஒப்புகிறதா? செய்யவேதான் புத்தி போகிறது, மனதும் தூண்டுகிறது, கூட இருந்து தூண்டிக் கொடுக்கிற வர்களும் துணைக்கு இருக்கவே இருக் கிறார்கள். இப்படிச் செலவிடுகிறதில் அளவுக்கு மீறி விடுவதிலே, அதிகக் கடனாய்விடுவதில்தான் வீட்டுக்காரன் பாடு திக்கு முக்காடிட்டுப் போகிறது. அதைக் கவனியாமல் வீட்டுப் பெண் கள் அவனிடம் முறைத்துக் கொள்கி றார்கள்! அவன் என்ன செய்வான் பாவம்! நாளைக்குக் கடன் வாரண்டு வந்தால் அப்பொழுது யாது செய்வ தென்று கலங்குகிறான்!

***

நாளைக்குக் குடும்பத்துக்கு வேண் டுமேயென்று வெகு பாடுடன் மிகுத் துச் சேர்த்ததையும் செலவிட்டுவிட்டு அப்பால் என்ன செய்வதென்று தெரி யவில்லையே ஈசா! என்கிறான், "குடும் பமோ கொடுந்துன்பமோ!" எவ்விதம் குடித்தனச் செலவோடு இந்தவிருந்து வகைகளையும் சமாளிப்பதென்று ஆயி ரம் எண்ணங்கள் நினைக்கிறான். இப் படிப்பட்டவனுக்கு வருகிற மனைவி யோ எல்லோரையும் உபசரிக்க வேண் டுமென்கிற மேலான சிலாக்கினைக் குணத்தில் படிந்தவளாயில்லாமல், அதில் தனக்கு ஒரு பெருமையைப் பெற்றுக்கொள்ள மட்டும் எண்ணு கிறவளாய் ஆகாசத்தில் குதிக்கிறாள். ஒரு பெண்ணைக் கொடுத்த இடத்தில் நாலுபேர்கள்தான் வந்துபோவார்கள் என்கிறாள். வரட்டும்; வருவதுடன் கூடவே சிலரை அழைத்தும் வந்து விடுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் யார் 'ஸப்ளை' செய்கிறது? வெள்ளி போனவர்கள் ஞாயிறில் திரும்பவும் வருகிறார்கள். ஞாயிறு போனவர்கள் புதனில்வந்து சனிக்கிழமை போகி றார்கள்! மறுபடியும் செவ்வாய்க் கிழமை வந்து குந்திவிடுகிறார்கள்! குந்துவது ஒருவராகமட்டும் இல்லை— கூடத் துணைகளோடே! ஒருவரென் றால் சமாளிக்கலாம். கூடத் துணைக ளோடு வந்தால் என்ன செய்கிறது? காபி பலகாரங்களின் செலவு பெரிய கணக்காய்விடுகிறது! சத்தமில்லாமல் பால்காரியின் வீட்டில் பால் வேண்டி யவரை வாங்கி வந்து விடுகிறார்கள்! அது ஒரு பெரிய தொகைக்கு அங்கு கணக்காகிவிடுகிறது! காலையில் மட் டும் காபியல்ல, மாலையிலும் வேறே காபி! அதற்கு வேறே பால்! இப்படிச் செலவிட அவன் தனது வருமானம் போதவில்லையென்றால், அதற்கு மனைவி என் சும்மா பேசுகிறீர்கள், சும்மா இருந்துவிடுகிறதுதானே, யார் செய்யச் சொல்லுகிறார்கள், நொச்சு நொச்சு என்று இதே வார்த்தையா, இப்படி நீங்கள் சொல்வதே கேவலம் என்கிறாள். "இருந்தால் தானே செல விடலாம், இல்லையென்றால் இதற்குச் சண்டையா" என்கிறான் இவன்!

***

"அரி என்றால் ஆண்டிக்குக் கோபம், அர என்றால் தாதனுக்குக் கோபம்" என்பதாய் இரு பக்கத்தி லும் இவன் பாடு கஷ்டமாகிறது! அவனுக்கு அமைந்த பெண்ணோ அவன் பக்கத்தோடு பேசக்காணோம்! அவன் படும் கஷ்டத்தை அறிகிறவ ளாகவுமில்லை. "அரைக்காசை ஆயி ரம் பொன்னுக்குகிறவளும் பெண் ஜாதி, ஆயிரம் பொன்னை அரைக் காசாக்குகிறவளும் பெண்ஜாதி!" மனைவியின் பக்கத்தைச் சேர்ந்தவர் கள் தான் இப்படி அடிக்கடி வந்து

வீட்டுத்தலைவன் வேறொரு அன்னியப் பெண்ணின் முகம் காணாதிருக் கும் வரையில் தான் அந்த வீட்டின் வாழ்வும் செல்வமும் நிலைக்கும்.

குந்திக் குத்துகிறார்களென்பதில்லை. அவன் தந்தை தாயின் பக்கத்தைச் சேர்ந்தவர்களும் கூடத்தான் இப்படித் தொல்லைகள் கொடுக்கிறார்கள். "அண்ணனுக்குத் தம்பி அல்லவென்று போகுமா?" தந்தை தாயின் பக்கத்தார்களும் வரவேண்டியதுதான் போகவேண்டியதுதான். ஆனால், நெடுக உட்கார்ந்து தங்கிக் கொள்ளுகிற சங்கதியில்தான் குடும்பத்தலைவன் பாடு பெரிய பாடாய்ப் போகிறது! "அம்மையார் நூற்கிற நூலுக்கும், பேரன் அரைஞாண் கயிற்றுக்கும் சரி" என்று இவன் ஸம்பாதிக்கிற பணம் இவைகட்கே சரியாகி விடுவதால், மாதந்தோறும் கடனும் வட்டியும் உயர்ந்துகொண்டே போகிறது!

***

வந்து நான்கு நாட்கள் குந்தியிருந்துவீட்டுப் புறப்படுகிறவர்களைக் கூட, இன்னும் சிலநாள் இருந்து போகும்படி வீட்டுப்பெண்கள் ரகசியமாய்ச் சொல்லி நிறுத்திவிடுகிறார்கள். பயணம் சொல்லிக்கொண்டு வீட்டை விட்டுத் தாண்டிப் போய்விட்டவர்களைக்கூட அழைத்துவரும்படிப் பெண்கள் தம் கணவருக்கு ஒரு தலையணை மந்திரம் படிப்பது வெகு வேடிக்கை! "தோசைக்கு மாவு அரைத்து வைத்திருக்கிறது; அவர்கள். பட்டினியாகக் காலையில் போகிறார்கள்; அவர்கள் போகிறேன் என்றதற்கு நீங்கள் போய்வாருங்கள் என்று சொல்லி விட்டீர்களாமே; நீங்கள் அழைத்தால் தான் வருவார்கள்! தோசை சாப்பிட்டதும் உடனே புறப்பட்டுவிடுவார்கள்; அவர்களுக்கும் சேர்த்தே அதிக மாவு அரைத்தேன்; அவர்களும் கூட இருந்து அரைத்தார்கள்; உடனே கூப்பிடுங்கள்" என்கிறாள். இதைக் கேட்ட வீட்டுக்காரனும், இத்தனை நாள் இருந்தவர்கள் ஏன் பட்டினியாகப் போகவேண்டும், பட்டினியாய்ப் போகும்படி நான் சொல்லவில்லையே என்று கூறிவிட்டுத் தன் தொந்தியைத் தூக்கிக்கொண்டு அவர்களை அழைக்க ஓடுகிறான்! விரைக்கவிரைக்க ஓடி அவர்களை எட்டிப் பிடித்துப் பலகாரம் புசித்துப் போங்கள் என்று அழைக்க, அவர்களும் இவன் பின்னாலேயே திரும்பி வந்து விடுகிறார்கள்!

***

பிறகு நடக்கிற சங்கதி என்னவென்பீர்களோ! தோசையும் ஆகிறது! மத்தியான போஜன பூசையும் தீர்கிறது! இரவு பகலுமாக ஐந்து நாளும் போகிறது. ஆறாம் நாள் வீட்டுக்காரன் குழந்தைக்கு சுகமில்லாமலிருந்து ஏழாம் நாள் சவுக்கியமாகிறது. எட்டு, ஒன்பது, பத்துநாட்களும் போய் விடுகிறது! செலவோ பெரிய செலவு! விழிகள் பிதுங்கிய வீட்டுக்காரன்—"என்ன தோசை சாப்பிட்டுப் போகிறவர்களா என்று தன் மனைவியைக் கேட்கிறான்: அதற்கு அவள் கோபித்துக்கொண்டு, "குழந்தைக்கு சுகமில்லை யென்றும், வேறு 'நாதி' யில்லையென்றுமல்லவோ அவர்களை இருக்கும்படி சொன்னேன்; இல்லாவிட்டால் அப்போதே போயிருப்பார்களே, நாளன்றைக்கு அவசியம் போய் விடுவார்கள்" என்கிறாள். குழந்தைக்கு சவுக்கியம் தப்பியது ஆறாம் நாளில் அல்லவா என்று சொல்ல வாயெடுத்தவன் அதையும் அடக்கிக் கொண்டு, "அவரவர் மனமே அவரவருக்கு சாட்சி" என்று மவுனமாய் விடுகிறான். அதற்குமேலும் இருந்துவிட்டு அப்பால் அவர்கள் புறப்படுகிறார்களையா! கதை எப்படியிருக்கிறது

திருவல்லிக்கேணியில் தன் மனைவி காமாக்ஷியைச் சுட்டெரித்த படுபாவிக் கணவனுக்கு 10-வருட கடின சிறை தீர்ப்பு.

பாருங்கள்! அலை எப்பொழுது ஒழியும், தலை எப்பொழுது முழுகுகிறது! என்பதாக வீட்டுக்காரன்பாடு ஆகிவிடுகிறது! வீட்டில் எந்த விசேஷமும் இல்லாதிருக்கும்போதே இந்த விருந்துகளும் செலவுகளும் எதற்காகவோ! ஒரு ரூபாயைப் பெட்டியிலிருந்து கண்ணொற்றி முத்தமிட்டு எடுத்தால் அது ஒரு மணிநேரச் செலவுக்குக் கூடக் காணாது போகிறது! "குடுமிக்குத் தக்கின கொண்டை" என்று வரவுக்குள்ளடங்காவிட்டால் நாளைக்கு நடுத்தெருவு நாராயணுவானல், இப்போது உண்டுவிட்டுப் போகிறவர்கள் அப்போது பழிக்க வருவார்களே யொழிய உதவிக்கு நெருங்கி முன் நிற்பார்களா! இப்படியிருப்பினும் செலவுகள் செய்யத்தான் வருகிறது! எனெனில் பந்துமித்திர ஆதாவுஎன்பது என்றைக்குமே தேவைப்படுகிற சங்கதி!

***

விகடன் இன்னொரு வேடிக்கையையும் அளக்கிறேன். இரண்டு பெண்கள் ஒரு வீட்டில் தம் பந்துக்களைக் காணவந்து மறுநாள் புறப்படுகிருர்கள். அவர்களில் ஒருவரை அவ்வீட்டாரின் மனைவி இருக்கும்படி சொல்லுகிருள். அவ்விதமே இருந்து ஒரு வாரமுமாகிறது. அதற்குப் பிறகு அப்பெண்ணின் புருஷன் அவளை அழைக்கவந்து நாலுநாள்குந்துகிருன். அப்பால் வீட்டுக்காரி மாதவிலக்காகி விடுகிருள். அந்தசமயம் பார்த்து அவர்கள் புறப்படுவதாக நடித்துப்பிரயாணப்பட, வீட்டுக்காரி தன் கணவனிடம்சென்று, சமையலுக்கு மனுஷ்யர்களில்லை, இருந்துபோங்கள் என்று சொல்லுங்கள் என்கிருள். வீட்டுத் தலைவனே—சமயலுக்கு ஆளில்லை யென்று அவர்களுக்கே தெரியவேண்டாமா, போகிறவர்கள் போகட்டுமென்று விடுகிருன். பிறகு வீட்டுக்காரியே அவர்களை இருந்துபோகும்படி நிறுத்திவிடுகிருள். அதன்பின்னும் ஒரு பத்துநாள் குந்திவிட்டு அப்பால் புறப்படுவதாகிருர்கள்! இந்த வகையில் ஆகும் செலவுகளை அளக்கமுடியுமா! இவ்விதமே நெடுகச் செலவுகளும் விருந்துகளும் வந்து வீட்டுக்காரனை மொட்டையடித்து விடுகின்றன. செலவிடச் சக்தியில்லையெனிலோஜென்மவிரோதம் வருகிறதப்பா! அவனு எவரையும் சேர்க்கமாட்டானே என்கிற பேரும் உண்டாகிவிடும்!

***

பெயர்சொல்லக்கூடாத ஒருபடேபெரிய மனிதன் தனக்குப் பலவிதத்திலும் கடன்கள் அதிகரித்துவிட்டதைநோக்கி, இரண்டுமாத காலத்துக்கு தன்வீட்டுச்செலவினங்களைச் சுருக்கி, ——"என் கடன் தொல்லைகள் தீருகிற இரண்டுமாத காலம் வரையும் என் இல்லத்துக்கு வருவோர் தயவு செய்து தங்கி இராமல் உடனே விடைபெற்றுக்கொள்ள வேண்டுகிறேன். இரண்டுமாத காலத்துக்குத் தங்களைக் கவனிக்கவில்லை யென்றும், இருந்து தங்கிப் போகும்படி சொல்லவில்லை யென்றும், வாய் உபசாரம் பேசி அனுப்பி ஒதுங்கினர்களென்றும் எவரும் வருந்தாதிருக்க வேண்டும்"——

என்று எழுதி ஒரு அட்டையைத் தன் வீட்டில் தொங்கவிட்டானும். இதை முக்கிய பந்துக்கள் பார்த்து முணுமுணுத்தனர். நண்பர்கள் நோக்கி, மனதில் வைத்துக் காலம்போக்க வேண்டுமே யொழிய கவர்ன்மெண்டு உத்திரவுபோல் இப்படி எழுதித் தொங்கவிட்டு இவ்வளவு கண்டிப்பு

ஒவ்வொரு பிரபஞ்ச அனுபவங்களும் வெவ்வேறு ருசிநயம் படைத்தவைகளாகி ஒவ்வொரு புதுமையில் விளங்கி நூதனம் தருகிறது.

செய்யக்கூடாதென்றும் கண்டித்தனர். வீட்டிலுள்ளவர்கள் இது மகா கேவலமென்று வெறுத்தனர். நாலு தினங்களுக்குப்பிறகு அதை எழுதித் தொங்கவிட்டவனே வியாதிப்படுக்கையாகித் தொங்கும்படியாய் நேர, அப்பொழுது பந்துக்களின் உதவி மிகவும் தேவைப்பட்டது. பணமிருந்தாலும், அத்துடன் மனுஷ்யர்களின் உதவியும் வேண்டியிருக்கிறதென்றும், மனுஷ்யர்களிலும் பந்துக்கள் அவசியமானவர்ளென்றும் அவனுக்கே மனதில் தைக்கவும், தான் தொங்கவிட்ட அட்டையைக் கிழித்து எறிந்துவிட்டான். இவனது புத்திக்குறைவு ஒரு பக்கம் இருந்தாலும், சமாளிக்க முடியாத செலவின் கஷ்டமும் பாடும் இப்படியெல்லாம் தடுமாறித் தத்தளிக்கப் பண்ணிவிடுகிறது! விகடன் இது போல் எவ்வளவோ கதைகளை இன்னும் அளக்கலாம். ஆனால் மொத்தமான கருத்து ஒன்றே. அதாவது மீறிய குடும்பச் செலவுகளால் வீட்டுத் தலைவன் தத்தளித்துக் கடைசியில் தற்கொலைக்கோ, ஊரைவிட்டு ஓடுதலுக்கோ, யாவும் கடனாகி அகதித்தன்மைக்கோ ஆளாகிறான்! அவனை நிம்மதியில், நல்ல நிலைமையில், சீரானவாழ்வில், சிக்கனத்தில், கையில் கொஞ்சம் மிகுக்கக்கூடிய நிலையில் வைக்க விரும்பினால், உறவினர்களும் மற்றவர்களும் அவனுக்குத் தொல்லை தராதிருக்கும்படி பெரிய புத்தி பெற வேண்டும். அவர்கள் பெறுகிறார்களோ! இல்லையோ! எல்லாம் இல்லாமையின் கொடுமையே தான்! இருந்தும் இடாத உலுத்தரைப்பற்றி விகடன் ஏதும் பேசவாவில்லை. ராம்! ராம்! சுபம்! சு! சுவாஹா!!

அகட விகடம்!

தீபாவளி ஜவுளிக்கடைத் துணிகளெல்லாம் இப்பொழுது வண்ணான் வீட்டுக்கு மருமகப் பிள்ளைகளாய் விருந்துக்குச் சென்று வெளுத்த உருவத்துடன் திரும்பி வந்திருக்கின்றனவாம்!

***

சிக்கனமும் தரித்திரச் செட்டும் காட்டுகிறவனிடத்திலே, தாராளக் கையாளனும் மனது வெறுத்து ஒதுங்கிக்கொண்டு தானும் கருமித்தனம் காட்டுவானும்!

***

கடிதத்திலே மயங்கிவிடுகிறவர்கள் வெகுபேரென்று ஒருவர் சொல்ல, அதற்கு விகடன், கடிதத்தைவிட, அதை எழுதினோரின் உண்மை மனச்சார்பையும், உள்ள குணத்தையுமே முக்கியமாகக் கவனிப்போரா யிருந்தால், அத்தகையோர் பாசாங்கான எவ்வித மயக்குக் கடிதத்திலும் ஏமாறாமல் குப்பையில்தான் அதை எறிவார்களென்று விடை இயம்பினானும்!

***


குளிர் காலம் வந்து விட்டது. கம்பளியையும் குடையையும் மனைவியையும் தூரத்தில் விடவேண்டாமென்றும், அதனதன் சுகம் அவ்வப்போது அனுபவித்துக் கண்டால்தான் தனக்குத்தானே தெரியுமென்றும் விகடேசர் விவரிக்கிறார்!

***

பொங்கல் வருகிறது! தை வருகிறது! 'கண்ணாலம்' வருகிறது! டம்! டம்! டம்!!

அதிகப் படிப்பு படித்தவர்கள் துக்கத்தையோ, சுகத்தையோ,—ஒரு யந்திரத்திலுள்ள கருவிகள் அனைத்தையும் வெவ்வேறாகப் பிரித்துப் பார்ப்பது போல,—சுகதுக்கங்களின் ஒவ்வொரு அணுவையும் பிரித்துப் பார்த்து, மற்றவர்களினும் அதிகமாக சோகிக்கவே சுகிக்கவோ ஆனவரை முயல்கிறார்கள்.

பிரபஞ்ச தரிசனம்



சென்ற வருஷம் டிசம்பர் மாதத்தில் நமது சென்னையில் நமக்குச் சொந்தமா யிருந்து நமது காட்சிக்கு எதிரே நின்ற காங்கிரஸ் மகா சபையும், காங்கிரஸ் நகரும், "காங்கிரஸ் நகர்" என்ற ரயில்வே டிக்கட்டும் இம்முறை கல்கத்தாவுக்குச் சென்றுவிட்டன. இனி இவை நமது பக்கத்தில் திரும்பும் காலம் எப்போதோ! சென்னையின் காங்கிரஸ் தீர்மானங்கள் நிறைவேறப்படாமலே காற்றில் பறந்தன. கல்கத்தா காங்கிரஸ் தீர்மானங்களேனும் நின்றுலாவுமாக. பண்டித மோதிலால் நேரு இம்முறை காங்கிரஸ் மகா சபையின் அக்கிராஸனராகினார். இந்தக் காங்கிரஸ் அதிக முக்கியத்தைப் பெற்றிருக்கின்றது.

***

இந்திய பூகோள போதனை.

இதோ பார் வத்ஸா! உனக்கு எதிரே பாரதவருஷத்தின் படம் விரிக்கப்பட்டிருக்கிறது. நம் எல்லோருடைய புண்ய ஜன்ம பூமி இதுவே. நாம் தாய்ப்பாலைப் போல் இத்தேசத்தின் பயிர் இனங்களையும் பழாதிகளையும் உண்டு நீரை அருந்தி வளர்ந்தவர்கள். ஆகையால் இதற்கு நமஸ்காரம் செய்வாய். இதோ பார்த்தாயா ஹிமாசலம். இது பாரத வருஷத்திற்குப் பிதா போன்றது. ஒரு பிதா தன் மக்களை அன்போடும் ஆதாரவோடும் வளர்ப்பதுபோல், இந்த ஹிமாசலமும் பாரத நாட்டைத் தன் பெண்களாகிய கங்கை, யமுனை, கோதாவரி, காவிரி முதலிய புண்ணிய நதிகளின் அன்பு தங்கிய ஜலங்களால் ஆதரவுடன் காப்பாற்றி வருகின்றது. இந்த ஹிமாசலமே பாரத வருஷத்தின் தபஸுக்குரிய புண்ணிய க்ஷேத்திரம். எத்தனை சாது ஜனங்கள், மகரிஷிகள், முனிபுங்கவர்கள் இதன் கண் ஆசிரமங்களியற்றிக் கொண்டு தமது இஷ்ட தெய்வங்களை நோக்கித் தவம் புரிந்து தங்களுக்கு அபீஷ்டமான வரங்களைப் பெற்றிருக்கின்றனர்.

***

உனக்கு எதிரில் இம்மலையின் உச்சியில் விஜயமகுடம்போல் ஒளிர்கின்றதே; அதுதான் கௌரீசிருங்கமென்பது. இடது பாரிசத்தில் பார்.——இதோ பதரிகாசிரமம். இந்த ஆசிரமத்தில் உட்கார்ந்துகொண்டு தான் **ஸ்ரீ வியாச முனிவர்** அழியாப் புகழ்பெற்றுத் திகழும் மகா பாரத இதிகாசத்தை உள்ளங்கனிந்து இயற்றினர். இவ்வாசிரமத்திற்கு அருகா

படிப்புடன் குணத்தையும் சேர்த்துப் பார்த்து யோசிக்க வேண்டும் குணங்கள் உண்டாவது வீட்டுப் பெரியோர்களின் மூலமாகும், படிப்பு உண்டாவது பாடசாலையிலாகும்.

மையில் கேதார நாதம் பிரகாசிக்கின்றது. இவ்விடத்தில்தான் ஆசார்ய ஸ்வாமிகளாகிய **சங்கரர்** தமது புண்ணிய வாழ்க்கையின் மகா விரதத்தை உத்யாபனம் செய்து சமாதியடைந்தார். இந்த ஹிமாசலம் சாதுக்களாகிய தொண்டர்களின் அடிப்பொடியைத் தன் உடம்பில் தரித்து யுகயுகாந்த காலமாய்ப் புண்ணிய பூமியாகத் திகழ்கின்றது.

***

இதோ பார், **பாஞ்சால தேசம்.** இந்தப் புண்ணிய பூமிதான் ஆரியர்களின் ஆதி வாசஸ்தானம்; சாமவேத கானத்தால் நிறைந்தது. எத்தனை வேதங்கள், எத்தனை மந்திரங்கள், எத்தனை மகா யஜ்ஞங்கள் இத்தேசத்தைப் புனிதமாக்கின! இங்குதான் லஜபதிராய் என்ற வீரர் வாழ்ந்து பரமபதமுற்றார். அதற்குக் கீழே பார். **ராஜபுத்திர ஸ்தானம்** (Rajputana)—பாலைவனம் நிறைந்த பூமி; ஆயினும் இந்நாட்டின் ஒவ்வொரு மலையிலும், ஒவ்வோர் ஆற்றங்கரையிலும் எத்தனையோ வீரர்களின் பராக்கிரமச் செய்கைகள், பல நூற்றுக்கணக்கான தீரர்களின் தன் மறுப்பு——இவற்றின் அடையாளங்கள் இருக்கின்றன. **பிரதாபசிங்கு** வாழ்ந்த தேசம் இதுவே; வீரபத்னியாகிய பத்மினியின் பூமி இதுவே.

***

இதோ பார் **விந்திய பர்வதம்!** இதற்கு வடபால் உள்ளது ஆர்ய பூமியாகிய **ஆர்யாவர்த்தம்.** இதற்குத் தென்பால் பூர்வம் ஆர்யர்கள் வசிக்கவில்லை. பயங்கரமான ஆரண்யமாய், வெகு நூறு யோசனைதூரம் விரிந்து பரந்திருந்தது. கனத்த அந்தகாரத்தால் நிறைந்திருந்தது. மகரிஷியாகிய அகஸ்தியர் இத்தேசத்தில் ஆரியருக்கு வாசஸ்தானங்களை ஸ்தாபித்தார். இப்பொழுது இந்நாடு எவ்வளவோ ஜனமும் தனமும் நிறைந்துசெழித்திருக்கின்றது. இந்த வன பூமியில் தான் **பூர்வம்** தண்டகாரண்ணியம் இருந்தது. ரகுகுலமணியாகிய சக்ரவர்த்தித் திருமகன் ஸ்ரீ ராமச்சந்திரன் பிதுர்வாக்கிய பரிபாலனத்தின் பொருட்டு சடைமுடியும் மரவுரியும் பூண்டு காலங்கழித்த இடம் இதுவே. புண்ய நதியாகிய கோதாவரியானது "சல சல" வென்ற இன்ப ஓசையுடனும், "ஜய ஸீதாராம்" என்று அங்கம் புளகிப்பப் பாடிக்கொண்டு இப்பொழுது இங்கே பிரவேசிக்கின்றது. ஸ்ரீ ஸீதா ராமர்களின் திருவடி வைப்பால் இந்நாடு புனிதமாயிற்று.

(அடுத்த ஸஞ்சிகையில் முடிவு.)

'காபி வைக்கட்டுமா' என்பதை விட, 'வைக்கிறார்கள்' என்பது மேல். சொன்னபடியே காபி கொண்டு வந்து, வேண்டாமெனினும் வற்புறுத்திஊட்டுவது எல்லாவற்றிலும் மேல்.

வெளியூரில் உன்னை நோட்டுக்கு சில்லறை யிருக்கிறதாவெனில், 'இல்லை' என்று சொல்வதின் சுகம் 'இருக்கு' என்பதில் வராது. உன்னிடம் அதிகப் பணம் இருப்பதை அது காட்டிவிட, அதனால் கடன் தாவரும். அல்லது உன் பெட்டியே காணமற்போகுபடியும் சிலர் கண் வைத்துவிடலாம். உசார்!

" அமிர்த குணபோதினி "

விபவஹலத்திய மார்கழிமீ பஞ்சாங்கம்.

1928ஞ டிசம்பர்மீ / 1929ஞ ஜனவரிமீ

தனுசு (சாப)மீ (5—20)

இங்.	தமிழ்.	வார.	திதி	நக்ஷ.	விரதாதி முதலியவை.
15	1	ச	திரி 28-10	உரா 44-47	ஷடசீதி, சூன்ய திதி
16	2	ஞா	சது 32-23	ஶ்ரவ 49-56	சதுர்த்தி திதி
17	3	தி	பஞ் 35-27	அவி 53-53	நாகபூஜை
18	4	செ	ஷஷ் 37-7	சத 56-30	ஸ்கந்த—ஷஷ்டி
19	5	பு	ஸப் 37-15	பூட் 57-33	சூரிய விரதம்
20	6	வி	அஷ் 35-45	உட் 56-58	கரிநாள்
21	7	வெ	நவ 32-36	ரே 54-47	
22	8	ச	தச 27-49	அசு 51-1	மகராயனம் 2-40, தசமி திதி
23	9	ஞா	ஏகா 21-24	பர 45-57	வைகுண்ட ஏகாதசி, கரிநாள், திதி துவயம்
24	10	தி	துவ 13-49	கிரு 39-48	ஹநுமத்ஜயந்தி, திரயோதசி திதி கிருத்திகா விரதம், பிரதோஷம்
25	11	செ	திர 5-23 உப 50-59	ரோ 32-52	கரிநாள்
26	12	பு	○ 47-13	மிரு 25-33	(ராத்திரி) ஆருத்திரா அபிஷேகம், சிதம்பர தீர்த்தம்
27	13	வி	பிர 38-17	ஆரு 18-19	(உதயம்) ஆருத்திரா தரிசனம்
28	14	வெ	துவி 30-0	புந 11-40	துவிதியா திதி
29	15	ச	திரி 22-56	பூச 6-1	திதி துவயம்
30	16	ஞா	சது 17-32	ஆயி 1-45 உப 57-31	பஞ்சமி திதி
31	17	தி	பஞ் 13-58	பூர 58-47	
1	18	செ	ஷ 12-25	உத் 60-0	
2	19	பு	ஸப் 13-9	உத் 0-28	அஷ்டகை
3	20	வி	அஷ் 15-55	ஹஸ் 4-8	நவமி திதி
4	21	வெ	நவ 20-27	சித் 9-34	அதிதி
5	22	ச	தச 26-21	ஸ்வா 16 23	தசமி திதி
6	23	ஞா	ஏகா 33-6	விசா 24-2	ஸர்வைகாதசி
7	24	தி	துவ 40-4	அநு 31-58	
8	25	செ	திர 46-49	கே 39-45	பிரதோஷம்
9	26	பு	சசி 52-54	மூல 47-0	மாஸ சிவராத்திரி
10	27	வி	● 58-13	பூரா 53-29	அமாவாசை
11	28	வெ	பிர 60-0	உரா 59-4	
12	29	ச	பிர 2-34	ஶ்ரவ 60-0	போகி பண்டிகை சந்திர தரிசனம், துவிதியா திதி

	கு	ரா	அ
—	15உக்கு		—
ச			
பு ர ச	கே		

" அமிர்த குணபோதினி " பிரஸ், 302, தங்கசாலைத் தெரு, சென்னை.